தனிச்சுற்றுக்கு மட்டும்

# காற்றுவெளி

பங்குனி - 2025

கலை இலக்கிய இதழ்



# காற்றுவெளி
**கலை இலக்கிய இதழ்**

பங்குனி - 2025

படைப்புக்கள் அனுப்ப :
Mullaiamuthan1954@hotmail.com
mahendran1954@hotmail.com

படைப்புகளின் கருத்துக்களுக்கு
படைப்பாளர்களே பொறுப்பு.

- ஆசிரியர் : சோபா
- வடிவமைப்பு : நெகிழன்
- நூல் அனுப்ப :
  R.Mahendran,
  34,Redriffe Road, Plaistow, Londan E13 0JX, Uk
- வருட சந்தா : 12.00 பவுண்ட்
- வங்கி இலக்கம் :
  R.Mahendran,
  A/C No : 90759821
  Sort.Code : 20-67-88,
  SWIFTBIC BUKBGB22
  IBAN GB80 BUKB 2067 8890 7598 21
  BARCLAYS BANK (PLAISTOW BRANCH)


வணக்கம்,

யாவரும் நலமா?

பங்குனி மாத(2025) காற்றுவெளி இதழ் தங்கள் பார்வைக்கு.

படைப்புகள் தந்துவியோருக்கு நன்றி.

சிற்றிதழுக்கேயுரிய நெருக்கடிகள் காற்றுவெளிக்கும் உண்டு.எனினும் தொடர்ந்து பயணிக்கிறோம்.

புத்தாண்டில் சில இதழ்களையாவது அச்சில் கொண்டுவரும் கனவு இன்னமும் இருக்கிறது.

இங்கிலாந்து சிறப்பிதழ் பலருக்கும் அனுப்பபட்டுள்ளது.(தபால் செலவே அதிகம்).

புலம்பெயர் நாடுகளில் இலவசங்களைப் பழகியவர்களிடம் சிற்றிதழ்களைச் சென்று சேர்ப்பிப்பதில் தயக்கம் இருக்கவே செய்கிறது.

காற்றுவெளி இலவசங்களைப் பெற்றுவிடக் கூடாதென்பதற்காகவே சந்தா அனுப்பியோ,நூல்களுக்கான பெறுமதியை அனுப்பியோதான் பெற்றுக்கொள்கிறது.

சிற்றிதழ்களிடையே பரஸ்பரம் நட்பு ரீதியான பரிமாற்றம் இல்லை என்பதே எமது அனுபவம். இதனை தவிர்க்கமுடியாததாகவே பயணிக்கிறோம். பயணிப்போம்.

இவ்விதழின் சிறப்பம்சமாக நெடுங்கதை & குறுநாவல் இணைக்கப்பட்டுள்ளன.

காற்றுவெளி இதழிற்காக அறிமுக,விமர்சன அரங்கினை நடாத்தும் எண்ணமுண்டு.

காற்றுவெளிக்கான சந்தா விபரம் ஒவ்வொரு இதழிலும் தரப்பட்டுள்ளது.எனினும் புதிதாய் கேட்பது போல பலரும் கேட்கிறார்கள்.படைப்பாளர்களின் பெயர்களையும் தகவலுக்காகத் தந்துகொண்டிருக்கிறோம்.

உலகினை அச்சுறுத்தும் புதுப்புது நோய்களும்,யுத்த பீதியும் மக்களிடமிருந்து நீங்கி சுபீட்சமுடன் மக்கள் வாழவும்,போராடும் இனக்குழுமங்கள் தங்கள் விடுதலையைப் பெற்றுக்கொள்ளவும் இறைவனை காற்றுவெளியும் பிரார்த்திக்கிறது.

அன்புடன்,
சோபா
01/03/2025

# படைப்பாளர்கள்

## சிறுகதைகள்

1. மீ.மணிகண்டன்
2. லி.நௌஷாத் கான்
3. மேற்கு (நடப்பியற் சித்திரம்)

## கவிதைகள்

1. மலர் மகள்
2. ரோஷான் ஏ.ஜிப்ரி
3. சா.நாகூர் பிச்சை
4. ரா.சண்முகவள்ளி ஸ்ரீனிவாசன்
5. DR ஜலீலா முஸம்மில்
6. பிரான்சிஸ் திமோதிஸ்
7. வட்டக்கச்சி வினோத்
8. ஐ.தர்மசிங்
9. த. ரவீந்திரன்
10. சுகந்தி மார்க்கண்டு (கனடா )
11. கவிஞர் சாய்சக்தி சர்வி
12. மு. பிரபு, வேலூர்
13. ஜீ.சுமித்ரா
14. தமிழரசி ஜெயதாசன்
15. கி.கவியரசன்
16. நேசன் மகதி
17. ச.சத்தியபானு
18. S.சுடர்நிலா
19. க. புனிதன்
20. மருதூர் மௌஜூன்
21. கந்தையா தில்லைவிநாயகலிங்கம்
22. கவிஞர்.இரா.சீ.பாலகுமார்.M.A
23. மு.முபாரக்
24. அமரர் கவிஞர் புசல்லாவை நீ. தர்மலிங்கம்
25. கு.பிரபு(கனடா)
26. தங்கேஸ்
27. கவிஜி
28. கி.சரஸ்வதி
29. ந.வீரா(திமிரி)
30. கலை
31. இளையவன் சிவா
32. பாக்யபாரதி

## கட்டுரைகள்

1. திரு.சமயக்கண்ணு, மதுரை

## நெடுங்கதை

1. கே.எஸ்.சுதாகர்

## குறுநாவல்

1. அன்பாதவன்

## மொழிபெயர்ப்பு

1. அழகு சுப்பிரமணியம்-தமிழில்: கெக்கிறாவ ஸுலைஹா

மலர் மகள்

## இடு ஓசை

ஊர்வலமாக வரும்
திருவிழா உண்டியல்கள்
நேர்த்திக் கடன்களில்
நிறை மாதமாகி
புரள்கின்றன ஓசையில்!!

ஒருவேளை பசியாற
ஏங்கிக் கிடக்கும்
மரத்தடி தெருக் கிழவியின்
தட்டில் மட்டும் ஏனோ
கேட்பதே இல்லை
கடவுளின் இடு ஓசை!!

சா.நாகூர் பிச்சை, துபாய்

## நட்சத்திரக் காற்று

செம்மீன்களைப் பிடிப்பதைப் போன்றே
விண்மீன்களுக்கு வலை விரிக்கும் சிந்தை மிக்க
சில கூட்டத்திற்கு...

இரவினில் ஒளியைப் பரிசாகத் தந்துவிட்டு;
விடியும் பொழுதினை புதுசாகக் கொடுக்கிறது
நட்சத்திரங்கள்!

இலகுவான அந்த மேகக் கூட்டத்திற்கோ;
இலவயமாக விட்டுச் செல்கிறது தன் மூச்சுக்
காற்றை!

ரோஷான் ஏ.ஜிப்ரி

## வேடிக்கை பார்ப்பவன்

அத்தனை எளிதாக உன்னை
அனுமானிக்க முடியவில்லை
வழுக்குமேனி சர்ப்பம்போல்
நீ..எந்தவகை சாதியோ...?
என்றிருந்தாலும்.....,
சந்தர்ப்பங்கள்
உன்னை துலாம் பார்க்கிறது....

இரத்தக் கறை உனது
விருப்புக் குவியல்
இழந்த கற்பு உன்
பகிர்வுப் படையல்

கணிப்புகளின்படி
கனதியற்ற இடையுனது
மருந்திற்கும் மனிதமில்லை
அறம் இல்லாத புறம் நீ
உனது அனுதின அலுவல்களில்
புரியும்படி சொல்வதென்றால்
புதினத்திற்கே முதலிடம்
வெளித்தோற்றத்திற்கும்
பதிவேற்றத்திற்கும்தான்
பாடுபடுகிறாய் தவிர
யுக மாற்றத்திற்காக
உன்னிடம் ஒரு மண்ணும் இல்லை

நீ.. மதயானை
நீ.. முள் வனம்
நீ..கற்பாசி
நீ.. கொதி மணல்
இவற்றுள் எப்பெயர்
தகும் உனக்குச் சொல்!



# சுந்தரிமணியனின் ‘நிறைவேறாத ஆசை’ – சிறுகதை ஓர் ஆய்வு

திரு.சமயக்கண்ணு, மதுரை

**சு**ந்தரிமணியன், புதூர் அவர்கள் முதன் முதலாக எழுதிய சிறுகதையான "நிறைவேறாத ஆசை"யைப் படித்த போது என் உள்ளம் கரைந்தது. பள்ளத்தை நோக்கி விரைவாய்ப் பாயும் சிற்றாறு போல் ஒரு பெரிய சோகப் புயல் என்னை மீளமுடியாது தழுவிக் கொண்டது!

ஆம்! இக்கதையைப் படிக்கும் வாசகர் அனைவரும் என் உணர்வை வரவேற்று ஏற்பர் என்ற தளரா நம்பிக்கையில்..

கதைக்குரிய என் விமர்சனத்தை விரைந்து தொடங்க ஆசை.

"புலர்ந்தும் புலராத வைகறைப் பொழுது" - அது!

குறைந்த இனிப்பில் நரசுஸ் காப்பி போட்டு பாங்குடன் தரும் தன்னைப் பெற்றெடுத்த ஒப்பற்ற தாயின் நினைவில் அவள் மனம் கசிந்து லயிக்கிறது. அந்தத் தெய்வத் தாய் மறைந்தோ மூன்று ஆண்டுகள் முழுமையாய் உருண்டோடி விட்டது.

எனினும் தன் அன்னையைப் போல் நரசுஸ் காப்பி போடத் தெரியவில்லையே என்ற ஆதங்கம் அவளுக்கு இல்லாமல் இல்லை. இப்போது அவள் போடுவது பாலில் காப்பி பொடி போட்டு சுலபமாய்ச் செய்வதுபோல் இருக்கும். ஆனால் அது சோம்பல் வேலைக்கு ஒரு எடுத்துக்காட்டு. ஆம்! அந்த வேலையில்... ஏனோ? காப்பிக்கு உரிய சுவையும் மகத்துவமும் இருக்காது....இன்னும் சொல்லப் போனால் சத்தும் வெத்து தான் என்பதை அவள் அழகுறத் தெரிந்து இருந்தாள்.

ஒரு பெண் எப்படி தன் தாயின் நினைவு மடியில் காலமெல்லாம் உருண்டு புரண்டு துயில்கிறாள் என்பதை ஆசிரியர் இங்கு அருமையாய் பாசப்பிணைப்புடன் விளக்குவதைப் நன்கு பார்க்க முடிகிறது அன்றோ?

அவள் உயிர் மூச்சே எப்போதும் அம்மா என்ற சுவாசத்தில் தான் இயங்கியது போலும்...

தன் அம்மா தனக்குக் கிடைக்கும் ஓய்வு நேரங்களில் பலகாரம்.. முறுக்கு என்று பற்பல தின் பண்டங்கள் செய்து பிள்ளைகளுக்குக் கொடுத்து அவர்கள் தினம் தினம் தீபாவளி என்ற மகிழ்ச்சிப் பெருக்கில் வாழ வளர்த்ததை அவள் மறக்க முடியுமோ?

அப்படிப்பட்ட அம்மா....

அப்பாவின் இறப்பிற்குப் பிறகு இடிந்து ஒடிந்து போய்விட்டாள்.

எந்த நேரமும் சண்டை போட்டுக்கொண்டே இருக்கும் இவர்களுக்கு இப்படி ஒரு இதிகாசப்பாசம் எங்கிருந்து வந்தது? எப்படி வந்தது? என்று அவள் வியந்து எண்ணத் தவறவில்லை! அப்பாவின் இறப்பு விசனத்தில் இருந்து தான் மீள்வதற்குள்...

அண்ணனின் இறப்பும் அம்மாவை ஒண்ணுமில்லாமல் உருக்குலைய வைத்துவிட்டது....

ஆம்! எல்லா வகை சோகத்திலும் புத்திர சோகம் தானே பெருஞ்சோகம் என்று பெரியவர்கள் சொல்கிறார்கள். அந்தப் புத்திர சோகம் தானே மாமன்னர் தசரத சக்கரவர்த்தியைக் கூட சாம்பலாக்கியது என்றும் அரச குடும்பத்தையே ஆட்டிப் படைத்தது என்றும் படிக்கிறோம் அன்றோ?

அம்மா அதிகம் படிக்காதவள் தான். ஆனால் குடும்பக் கலைகளில் எல்லாம் சிறந்து விளங்கிய சீமாட்டி என்பதை யாரும்

மறுக்க முடியாது. அம்மா உயர் படிப்பு படித்திருந்தால் உத்தியோகத்திற்கும் போய் அப்பாவின் பொருளாதாரத்தை நிமிர்த்து குடும்பத்தைத் தன்னிறைவு பெறச் செய்திருப்பாள் என்று எனக்கு அசையா நீள் நம்பிக்கை.

மேலும் அம்மா கடுமையான மனதிடம் கொண்ட உழைப்பாளி. தன்னால் கூட அவள் செய்யும் ஆக்கபூர்வமான விரைந்து செய்யும் வேலைகளைச் செய்ய இயலாது.

இன்னும் சொல்லப்போனால் எங்கள் வீட்டுச் சுண்டக்குழம்பு கூட எட்டு மணம் மணக்கும் என்று எங்கள் அப்பா வீட்டிற்கு வந்து போகும் விருந்தினர்கள் பலரிடமும் அம்மாவின் பெருமையைத் தம்பட்டம் அடிப்பார். ஆனால் நேரடியாக அம்மாவைப் புகழ்ந்து பேசமாட்டார்.

ஏனெனில் அவர் உலக அனுபவப் படிப்பு படித்தவர்.

யார் யாரை எப்போது எங்கு எந்தச் சமயத்தில் புகழ்தல் இனிமை வார்க்கும் என்பதை அறிந்தவர்! மேலும் அப்பா மறவர் சமுதாயத்தினர் போல் பெரிய மீசை வைத்திருப்பதில் அலாதிப் பிரியம் கொண்டவர் மட்டுமல்ல...

கண்ணியம் காக்கத் தன் இன்னுயிரையே எச்சமயத்திலும் கொடுக்கவல்ல எதற்கும் அஞ்சா மாவீரம் கொண்ட நெஞ்சர் என்ற பெருமை கொண்டவர்.

அம்மா சில சமயம் பேத்தி பேரன்களிடம் நகைச்சுவை ததும்பப் பேசி அறியாமையைப் பொசுக்குவதில் வல்லவர். பேத்திகளின் டிரஸ் பற்றி கிண்டல் செய்வார்.

“இது என்னடி டிரெஸ்? அங்கங்கே பக்கவாட்டில் ஓட்டை...மேலும் கிழிந்து சில துணி தொங்குது”

என்று கேலி பேசுவாள். அது கேட்டு எல்லா “பொடிசுகளும்” விழுந்து விழுந்து சிரிப்பது கண்டு மனம் மகிழ்வாள்...

அம்மா என்றால் அனைவருக்கும் பிடிக்கும் அன்றோ? அவள் குணம் மனம் கொடியது அன்று...அன்பால் மட்டுமே புடைசூழ கட்டப்பட்ட புண்ணியக் கோவில் அது. அவள் அணியும் சேலை சாதாரணமாய் இருக்கலாம்...

ஆனால் அதை அணியும் விதத்தில் உயர் நாகரீகம் சொட்டும். ஆம்!

அணியும் ஆடையை வைத்தே அவள் உள்ள அழகை கொள்ளை அழகு என்று கணக்குப் போட்டு விடலாம் என்பர்.

இரவில் தாயின் அருகருகே துயில் கொள்ள அக்கா தங்கை இருவருக்கும் பெரும் போட்டி ஏற்படும். “நான் தான் வலப்புறம் படுப்பேன்....என்பாள் ஒருமகள்.... இல்லை!இல்லை! நீ இடப்புறம் படு! நான் தான் வலப்புறம் படுப்பேன்” என்ற போட்டியில் சில சமயம் அடிபுடி சண்டை கூட அக்காள் தங்கைக்கு வந்ததும் உண்டு.

அப்பேர்ப்பட்ட அன்னை எங்காவது ஊருக்குப் போய் விட்டால் அவள் வரும் வரை

வீட்டில் மகாலக்ஷ்மியே எங்கோ ஓடி மறைந்து விட்டது போல் ஒவ்வொருவர் உள்ளமும் ஏங்கித் தவிக்கும்.

அப்பா பக்கவாத நோய்க்கு ஆளானபோது அவரது கடைசி நிமிடங்கள் கணக்கிடப்பட்டுக்கொண்டு இருக்கையில்....

அவள் அன்னை ஒன்று சொன்னாள். என்னதான் அந்த அன்னை சொன்னாள்? ஆம்! அவள் அன்னை சொன்னது இது தான்!

“அன்புப் பிள்ளைகளே அப்பா இருக்கும் போதே எனக்குப் பொட்டு வைத்து, பூச்சூடி, நான் வாவரசி என்று பலர் கூறிட ஒரு நல்ல போட்டோவும் எடுத்து எனக்குக் காட்டுங்கள்” என்று கூறும் போது...

அம்மா கண்களில் மின்னல் போல் ‘பளிச்’ ‘பளிச்’ என்று தெரிந்த சோகக்கீற்று பிள்ளைகளையும்கூட பிதுங்கிப் பதற வைத்தது.

ஆனாலும் அந்தத் தாயின் ஆசையை நிறைவேற்ற மூட நம்பிக்கை ஓராயிரம் ஓடிவந்து தடுத்தது. ஆம்! தாய்க்குப் பொட்டுவைத்து...பூவைத்து....போட்டோ எடுப்பது... இந்த நேரத்தில் நன்றன்று என்றும், ஏனெனில் இந்த இக்கட்டான நேரத்தில் நடைமுறையில் உள்ள ஒருவித சம்பிரதாயத் தடையைத் தாண்டுவது மிகவும் அபத்தம் தரும் செயல் என்றும்...

அதன் விளைவு....என்னாகும்?

ஆம்! இழுபறி நிலையில் உள்ள அப்பாவை....எமன்! விரைவில் ஓடிவந்து உயிர் பறித்துச் செல்வான் என்பது அறியாத மூட நம்பிக்கையில் தாயின் ஆசை தட்டுக்கெட்டுக் குட்டிச் சுவரைப் போல் போய்விட்டது.

அந்தத் தாயின் ஆசை நிறைவேறாத ஓர் ஆசையாகி விட்டது என்று ஆசிரியர் மனம் வெம்பிக் கதையை முடிக்கும் போது, கண்ணீர்ப் பெருக்கு யாருக்குத் தான் வராது அன்பு உள்ளங்களே...

ஆசிரியரின் சிறுகதையில் இது ஒரு மணிமகுடம் தரித்த சிறுகதை...என்பேன்.

ஆசிரியரின் கற்பனைநயம் மற்றும் அவர் தனிப்புகழ் என்றும் ஓங்குக!.

◎

# ரா.சண்முகவள்ளி ஸ்ரீனிவாசன் கவிதைகள்

### அம்மாவின் மூக்குத்தி

இளஞ்சிவப்பு கல்லுக்கு
இணையான வெள்ளைக்கல்லுமாய்
மின்னிடும் அம்மாவின் மூக்குத்தி

அவளான் கல்யாண புகைப்படத்தில்
மிளிரும் நகைகளுக்கு ஊடாக
பளிச்சென்று தெரியும்
அந்த பாந்தமான மூக்குத்தி

கல்பதித்த நெக்லஸ்சோ
இளையவளின் பேர்கால செலவில் கழிய
தாமரை பூ டாலர் போட்ட
மூனுபவுனு செயினும்
மூழ்கித்தான் போனது
மூத்தமவ டைப்பாயிடுல படுக்கையில

நெளிவு மோதிரமும், கல்லுதோடும்
கறஞ்சி போன கதைய
அவளே மறந்துபோயிட

சீதனமாய் வந்த நகையெல்லாம்
அடகுகடையை அலங்கரிக்க
அம்மாவை அலங்கரித்தது
அந்த சின்ன மூக்குத்தி மட்டும் தான்

மஞ்சள்கயிறு கழுத்தில் ஆட
மாலையிட்ட அவள் புகைப்படம்
கூடத்துல ஆட
இப்பவும் எடுப்பாய் மின்னுகிறது
அம்மாவின் மூக்குத்தி

பிறந்தவீட்டு சீதனமாய்
அவளோடு வந்ததும்
அவளுக்காக எஞ்சியதும்
அம்மாவின் மூக்குத்தியே !

### செல்லம்மாக்களின் பயம்

பாலிய விவாகத்தில்
தொலைந்தபோன செல்லம்மாள்!
தன் கனவுகளை எல்லாம்
நினைவாக்க
உடன்கட்டைக்கு உடன்படாது
சகுந்தலாவோடு வெளியேறினாள்!

வீதி வழியெங்கும் வழிந்தோடிய
கள்ளிப்பாலிருந்து சகுந்தலாவை காக்க
நீலகண்டனாக உருமாறினாள்!

திராவக வீச்சுகளும்,
சாதிய பாம்புகளும்
தீண்ட முனைகையில்
தீயின் வெம்மைகொண்டு
சகுந்தலாவை காத்திட்டாள்!

காதலெனும் பெருவலையில்
அகப்படாத
சூட்சமத்தை தெரிந்தவள் !

தீண்டாமையை ஒழிக்க
தீ வளர்த்த கல்விகூடம்
கலவியல் கூடமான
மாற்றம் கண்டு பதைபதைத்து
நிற்கிறாள்!

இயற்கை அழைப்புகளையே
சரியாக சொல்லத்தெரியாத
சகுந்தலாவிடம்
குட் டச் பேட் டச்
படம் எடுக்க தெரியாமல்

*Dr* ஜலீலா முஸம்மில், ஏறாவூர், இலங்கை

# ஹைக்கூ கவிதைகள்

முட்டித்திரும்பும் வேளைகளில்
பெருங்கடலை நினைக்குமோ
தொட்டி மீன்கள்

ஓ

பூக்களுக்கு முத்தம் தந்து
வேர்களைத் தழுவிக்கொண்டது
மழை நீர்

ஓ

சிதைக்கப்பட்ட சுதந்திரம்
சிறப்பாக பெயர் சூட்டப்பட்டது
அன்பென்று

ஓ

தொடரும் பிரிதல்கள்
பெரிதுபடுத்துவதில்லை
மரமும் உதிரும் இலையும்

ஓ

பெருஞ்சுமை
நாளாந்தம் அழுத்தியபடி
சமையலும் சலவையும் பெண்ணுக்கு

ஓ

சிறகடிக்கும் பறவைகள்
வானில் முடிவதே இல்லை
திசைகள்

ஓ

பச்சிலையைத்தான்
பசி போக்க உண்கிறது
பொன்வண்டு

ஓ



அடர்வனம்
துளித்துளியாய் நிலத்தில்
நிலா வெளிச்சம்

ஓ

பிறந்த வீடு
செல்லும் ஆவலோடு
நதியடையும் மழைத்துளிகள்

ஓ

அலையோடு விளையாடி
ஆனந்தக்குளியல் போடுகிறது
கடற்கரையில் ஒட்டகம்

◎



# அனல் பூக்கள்

மீ.மணிகண்டன்

“ச்சீ… வாரத்துக்கு ஒருமுறை இந்த மானங்கெட்ட திங்கக்கிழமை ஏண்டா வருது…”, அழ முடியவில்லை. அழுதும் பயனில்லை. தனியறையில் அவள் உதிர்க்கும் கண்ணீர் அவள் மனதை அமைதிப் படுத்தப் போவதில்லை, அவளைத் தூய்மையடையச் செய்யப்போவதில்லை என்பதை அவள் கடந்த ஓராண்டில் நன்கு உணர்ந்ததால் இன்று அவள் வாயளவில் வார்த்தைகளைக்கொட்டி குவிந்தெறியும் எரிமலையைக் கொஞ்சமாய் ஊதியணைக்க முயன்றாள். அறைக்கு வெளியே அனல்காற்று தகித்துக்கொண்டிருந்தது.

‘குணா அண்ணன்’ என்று கருப்பு எழுத்துகளில் வெள்ளைத் திரையில் தொலைபேசி ஒளிர்ந்தது.

“ஹலோ”

“என்னம்மா ஷர்மி நல்லாருக்கியா?”

“நல்லாருக்கேண்ணே, நீங்க எப்படி இருக்கீங்க? அக்கா எப்படி இருக்காங்க?”

“எல்லாரும் நல்லாருக்காங்க. நான் நாளைக்கி வந்து கேசட் வாங்கிக்கறேன். நீ கேசட் பேசிட்டியான்னு நியாபகப் படுத்தத்தான் போன் போட்டேன்”

“இல்லண்ணே, வேலையும் அதிகமா இருக்கு, இன்னிக்கு திங்கக்கிழமை, பேசலான்னு இருந்தேன் ஆனா, சேகர் வந்து அழைச்சுக்கிட்டு போறேன்னு சொல்லியிருக்கான். மேலும் வாராவாரம் போன்ல பேசறதால என்ன புதுசா பேசப்போறேன்”

“சொல்றதக் கேளு, கேசட் பேசி வை. நான் வந்து வாங்கிக்கறேன். நாளை மறுநாள் நான் ஊருக்கு புறப்படறேன். போகும்போது உங்க அம்மாகிட்ட குடுத்துடறேன். வாரத்துல ஒருநாள் போன்ல அஞ்சு நிமிசம் பேசுறதெல்லாம் போதுமா?”

“ம்… நீங்களும் விடுறாப்ல இல்ல… சரிண்ணே… பேசிவச்சுட்டு சொல்றேன்”, என்ற ஷர்மிளாவின் பதிலையடுத்து மறுமுனையில் போன் துண்டிக்கப்பட்டது.

ஜன்னல் ஓரமாக நின்று தன் கடமையைச் செவ்வனே செய்துகொண்டிருந்தது அந்தச் சின்னச் சதுர வெள்ளைக் கடிகாரம். பேட்டரியில் இயங்கும் அந்தக் கடிகாரம் ஷர்மிக்கு மணி காட்டுவதோடு தன் கடமையை நிறுத்திக்கொள்வதில்லை, அதையும் தாண்டி அவளுடன் உரையாடும். தனி அறையில் அவளுக்கு உற்ற பேச்சுத்துணை அந்தக் கடிகாரம் மட்டுமே. கடிகாரத்தின் டிக் டிக் மொழி அவளுக்குப் புரியும் அவளின் மௌனமும் பேச்சும் கடிகாரத்திற்குப் புரியும். அவளின் புன்னகை, மகிழ்ச்சி, கண்ணீர் என அத்தனை உணர்வுகளோடும் கலந்து சுழன்றுகொண்டிருக்கின்றது அந்த இரண்டு முட்கள். தற்சமயம் அரபு மண்ணில் நேரம் மதியம் ஒரு மணி பத்து நிமிடங்கள் என்று காட்டியதை நோக்கினாள் ஷர்மிளா. நேரத்தைக் கண்டவளின் மனம் கணக்குப்போட்டது, ‘நாலு மணிக்குத்தான் சேகர் வருவான் அதுக்குள்ள பேசிரலாமோ? அட முழுவதும் முடியாட்டியும் கொஞ்சமாவது பேசி வைப்போம்’ என்ற எண்ணத்தில், சுவற்றோரம் படுத்துக்கிடந்த தனது மாற்று உடைகள் அடுக்கியிருக்கும் பெட்டியின் அருகில் சென்றாள். பெட்டியைத் திறந்து துணிகளின் நடுவில் மூழ்கிக் கிடந்த கையளவு டேப் ரெக்கார்டரை எடுத்து எஜெக்ட் பொத்தானை அமுக்கித் திறந்தாள். ‘உன் உள்ளத்தை வார்த்தைகளால் எனக்குள் கொட்டிவிடு நான் வாங்கிக்கொள்கிறேன்’ என்று வாய்திறந்தது டேப் ரெக்கார்டர். துணிகள் அடுக்கிய பெட்டியின் வலப்புறத்தில் சட்டையில்லாமல் கிடந்தது சிவப்பு கருப்பு லேபிளுடன் அந்தப் பழைய அறுபது நிமிட டி.டி.கே. கேசட்.

கேசட்டை டேப் ரெக்கார்டரின் திறந்த வாய்க்குள் நுழைத்து மூடினாள். பிளே பொத்தானை அழுத்தி அதில் என்ன பதிவாகியுள்ளது என்று சோதித்தாள். ‘கண்ணிலே என்ன உண்டு கண்கள் தானறியும்… ‘ என்று எஸ். ஜானகி குரலைக் கேட்டுவிட்டு நிறுத்தி ஃபாஸ்ட் ஃபார்வர்ட் பொத்தானை அழுத்தினாள். சில நொடிகளுக்குப் பின் பிளே செய்தபோது ‘பந்தமென்பது சிலந்திவலை பாசமென்பது பெருங்கவலை’ என்று கண்ணதாசன் எழுதி எல்.ஆர். ஈஸ்வரி பாடிய ‘அடி என்னடி உலகம்…’ ஒலித்தது.

அத்துடன் கேசட் சோதனையை நிறுத்திக்கொள்ள நினைத்தாள். தற்சமயம் இந்தக் கேசட்டை அழிக்கலாம் என்ற முடிவுக்கு வந்தவள், ரிவைண்ட் பொத்தானை அழுத்தி கேசட்டின் நாடாவைத் தொடக்கத்தில் கொண்டு வந்து நிறுத்தினாள். தொண்டையைச் செருமிக்கொண்டு, தனது சின்ன அறையின் ஒற்றை வாயில் கதைவை அடைத்துவிட்டு வந்தாள். தன்னைச்சுற்றி அமைதி நிலவுவதை உறுதிசெய்துகொண்டாள். கடிகாரத்தின் மீது பார்வையைச் செலுத்தினாள். ‘என்ன பார்வை… தொடங்கட்டும் உன் பதிவு’ என்பதுபோல கடிகாரம் டிக்கியது. டேப் ரெக்கார்டரில், ரெக்கார்ட் மற்றும் பிளே, இரு பொத்தான்களையும் ஒருசேர அழுத்தி பதிவைத் தொடங்கினாள்.

“அம்மா, எப்படிம்மா இருக்க. ராணி எப்படி இருக்கா? நல்லா படிக்கிறாளா? நான் உன்கூட வாரந்தோறும் போன்ல பேசினாலும் அந்த அஞ்சு நிமிசத்துல நிறைய பேச முடியிறதில்ல. அஞ்சு நிமிசத்துக்கே அம்பது ரியால் போயிடுது. போன் பேசுற இடம் ஒரு பொது இடம் மா. கார்டு போட்டுப் பேசணும். பக்கத்துல தெரிஞ்சவுங்க தெரியாதவுங்கன்னு நிறையப்பேர் அடுத்து பேசுறதுக்கு காத்திருப்பாங்க. போன்ல பேசமுடியாத நிறைய தகவல்களை இப்ப நான் பேசப்போறேன் மா.

குணா அண்ணன் குடும்பத்தோட ஊருக்கு ஒரு மாசம் லீவுல வராங்க. அவருதான் உன்கிட்ட இந்த கேசட்டை கொண்டு வந்து குடுக்கறேன்னு சொன்னாரு. நான் இங்க வந்து ஒரு வருசம் ஆயிடுச்சும்மா. நாள் போறதே தெரியல. போன மாசம் நான் அனுப்புன பணத்தோட ஏஜென்ட் கடன் முடிஞ்சிருச்சு. நான் இத போனவாரம் போன்லையும் சொன்னேன் இருந்தாலும் இப்ப மறுபடி உனக்கு சொல்றேன் ஞாபகம் வச்சுக்கோ. இனிமே பணம் சேர்த்து வீட்டுக்கு பொருளும் நகையும் வாங்கலாம். தங்கச்சி ராணியோட படிப்பு செலவும் வந்துடும் அதுக்கும் நான் காசு சேக்கணும்.

இங்க வீட்டு வேலை செய்யுறவங்கள கதாமா ன்னு சொல்லுவாங்க. வாரந்தோறும் திங்கக்கிழமை எங்களுக்கு விடுப்பு குடுத்துருவாங்க. ஏன் திங்கக்கிழமைன்னு தானே கேக்குற? பொதுவா இந்த ஊர்ல ஆஃபீஸ் வேலை செய்யுறவுங்களுக்கு வெள்ளி சனிதான் லீவு. அந்த நாள்ல ஒருத்தர் வீட்டுக்கு ஒருத்தர் போக வர இருப்பாங்க எங்கள மாதிரி கதாமாவுக்கு அப்போதான் கஃபீல் வீட்டுல, வீடு சுத்தம் பண்றது, விருந்தாளிகளுக்கு சமைக்கிறதுன்னு வேலை அதிகமா இருக்கும். அதுனால எங்களுக்கு வெள்ளி சனியில்லாம திங்கக்கிழமை லீவு குடுப்பாங்க. நாங்க வெளில போயி கூட்டாளிகளை பாப்போம், கடைத்தெருவுக்கு போவோம், ஓட்டல்ல சாப்பிடுவோம். போன திங்கக்கிழமை கூட்டாளிகளை சந்திக்கப் போனப்ப புதுசா ஒரு ஆளப் பாத்தேம்மா. நம்ம ஊருதான். இங்க கதாமா வேலைக்குத்தான் வந்திருக்கு. பேரு சுகந்தி. நம்ம மூலக்கட பக்கத்துல வீடுன்னு சொல்லிச்சு. உனக்கு அவுங்களைத் தெரியுமா? அந்த சுகந்தி நிறைய கேள்வி கேட்டுச்சு. இங்க வீட்டு வேலையெல்லாம் நம்ம ஊரு மாத்திரின்னு நினைச்சு வந்திருக்கு. இங்க நடக்குற கூத்து ஒன்னொண்ணையும் சொல்லச் சொல்ல ரொம்பவே பயந்திடுச்சு. போகப் போக பழகிடும்னு சொல்லிருக்கேன். அந்தக் கூத்தக் கேட்டா உனக்கும் புதுசாத்தான் இருக்கும். பயந்துடாத..ராசாத்தி அக்கா வீட்டு விஜி இல்ல... அது வேலை பார்த்த வீட்டை விட்டு ஓடிருச்சாம்மா? அதோட கூட்டாளிதான் எங்கிட்ட சொல்லிச்சு. விஜிகிட்ட, எங்க இருக்கன்னு கேட்கலாம்னு போன் போட்டேன்... போன் போகலம்மா. ஆமா... வீட்டை விட்டு ஓடினது நம்பரை மட்டும் அப்பிடியே வச்சிருக்குமா என்ன? ஆனா பாவம் மா அது, வேலை பார்த்த வீட்டுல கஃபீலும் அவன் பையனும் ரொம்ப மோசம்னு சொல்லி எங்கிட்ட அழுதிருக்கு. அவனுங்க தொந்தரவு தங்காமத்தான் ஓடிருக்கும். பாவம்... போன இடத்துலயாவது அது நல்லா இருக்கணும். இனிமே அதுவா போன் போட்டாதான் நான் பேச முடியும். பாஸ்போர்ட்ட கஃபீல் கிட்ட விட்டுட்டுதான் ஓடிருக்கும். வேற வழி இல்ல. இனிமே அது ஊருக்கு வரதும் பெரும்பாடு. சட்டவிரோதமா இருக்குறவுங்க எந்த தண்டனையும் இல்லாம ஊருக்கு போகலாம்னு எப்பயாவது சட்டம் வரும். அதுவரை அது காத்திருக்கணும். அதுக்கு முன்னாடி போலீசுக்கு போனா அவனுங்க திரும்ப அதோட கஃபீல் கிட்ட சேத்து விட்டிருவானுங்க அதனால அது போலீசுக்கும் போகாது. பொதுவா இங்க வீட்டை விட்டு ஓடுறவங்க கதி இதுதான்.

இன்னிக்கு திங்கக்கிழமை. சேகர் என்ன வெளில கூட்டிட்டு போக வருவான். அவனுக்கு காத்திருக்க நேரத்துலதான் இந்த கேசட் பேசிக்கிட்டு இருக்கேன். இந்த விசாவும் வீட்டு வேலையும் சேகர்தானே ஏற்பாடு செஞ்சான், பட்டுன்னு அவனை பகைச்சுக்கவும் முடியல, அவனோட சரின்னு சகிச்சிக்கிட்டுப் போகவும் முடியல. சிலநேரம் வர்ற ஆத்திரத்துக்கு பத்தவச்சுக் கொளுத்தினா என்னண்ணு தோணும். கடிஞ்சு பேசி வெட்டி விட்டுரலாம் ஆனா, நாளைக்கே இப்ப இருக்குற வேலை இல்லாம வேற வீட்டுல வேலை தேடணும்னா?... இல்ல... ஏதாவது உதவின்னா?... இந்த ஊர்ல சேகரை விட்டா... நான் வேற யாருகிட்ட போய் நிப்பேன்? குணா அண்ணன்லாம் இதுமாதிரி கேசட் பேசச்சொல்லி ஊருக்கு கொண்டுவந்து கொடுப்பாங்க, எப்பயாவது வீட்டுக்கு கூப்பிட்டு விருந்து வைப்பாங்க மத்தபடி பண உதவியோ உத்தியோகமோ அவங்களால ஆகாதே.

அம்மா, புதுசா கலர் போன்லாம் வந்திருக்கும்மா. கேமரா வச்சுக்கூட வந்திருக்கு. ஊருக்கு வரும்போது உனக்கும் தங்கச்சிக்கும் வாங்கியாறேன். நான் முன்னாடி வச்சிருந்த போன்ல பதினஞ்சு நம்பர்தான் சேமிக்க முடியும். திங்கக்கிழமை கூட்டாளிகளை பாக்கப்போகும்போது நிறைய புது கூட்டாளி பிள்ளைங்கள பாப்பேன். எல்லாரோட நம்பரையும் சேமிக்க அதுல எடம் பத்தல. அதனால முன்னூறு நம்பர் சேமிக்கிற மாதிரி புது நோக்கியா போன் வாங்கிருக்கேன் மா.

ஆமா... இன்னிக்கு நம்ம வீட்டுல என்ன சமையல்? நான் இங்க வந்து நல்லா கறி சமைக்க கத்துக்கிட்டேன். ஆனா எல்லாம் அரபி வகை. ஊருக்கு வரும்போது சமைச்சு காட்டுறேன். உனக்கு பிடிக்கும். நாம ஆடு கோழி மட்டுந்தான் வாங்குவோம். இங்க ஒட்டகக் கறிகூட சமைப்பாங்க"

கடிகாரத்தை நோக்கினாள். 'பேசுடி இன்னும் நேரமிருக்கு' என்றது கடிகாரம். ஜன்னலை ஒட்டிப் படர்ந்த மல்லிகைக்கொடியிலிருந்து நேற்று மலர்ந்த ஒரு குண்டு மல்லி தலை நீட்டி அசைந்தாடியது. தொடர்ந்தாள் ஷர்மி.

"நான் இங்க தங்கி இருக்க ரூம் எப்படி தெரியுமாம்மா? நம்ம ஊரு மாதிரி செங்கல்லு வச்சுக் கட்டினது இல்ல. ஒரு பெரிய கன்டைனர்ல கதவும் ஜன்னலும் வச்சிருக்கும். சின்னதா தடுப்பு வச்சு குளிக்கிற ரூம் இருக்கும். அவ்வளவுதான். ஒரு பெட்டிக்குள்ள தூங்கி முழிச்சு பொழுதைக் கழிக்கிறத நினைச்சா சிரிப்பா இருக்குல்ல. ரூமுக்கு பக்கத்துல நிறைய செடி இருக்கும் மா. செடிங்களுக்கெல்லாம் தண்ணி விட்டு பராமரிக்கிறது ஒரு சூடானி. அவரு எங்க கஃபீலுக்கு வண்டி ஓட்டுற டிரைவரா இருக்காரு. வயசானவரு. அவங்க நாடு சூடான். சூடான்ல பஞ்சம்னு

சொல்லி இங்க வேலை தேடி வந்தவரு. செடிக்கு தண்ணி விடும்போது மட்டும்தான் அவரை பாப்பேன். அவர் எங்கிட்ட பேசவே மாட்டாரு. ஆமா... அவர் பேசிமட்டும் இங்க என்ன மாறிரப்போகுது... சும்மா சொன்னேன்... “ என்று சொன்னவள் ‘க்ளுக்’ என சிரித்துக்கொண்டாள். அவள் சிரிப்பை டிக் டிக்கென ஆமோதித்தது கடிகாரம். பதிவதைத் தொடர்ந்தாள்.

“நான் தங்குற ரூம விட்டு இறங்கி பத்தடி தூரம் நடந்து கஃபீல் வீட்டுக்குப் போகணும். அவங்க வீடு ரொம்பப் பெரிசு. வீடு பூராம் மிசின் போட்டு கூட்டவே அரைநாள் வேணும். என்னோட ரூம் மாதிரி டிரைவருக்கு ஒரு ரூம் கஃபீல் வீட்டுக்கு அந்தப்பக்கம் இருக்கும் வீட்டை சுத்தி மத்த இடமெல்லாம் பூச்செடியா இருக்கும். எல்லாம் ஒரே காம்பவுண்டுக்குள்ள இருக்கும். எல்லாத்துக்கும் சேத்து பெரிய கேட் இருக்கும். கேட் எப்பவும் பூட்டியே இருக்கும். வெளிய போகும்போதும் உள்ள வரும்போதும் மட்டும்தான் தொறப்பாங்க. சாவி கஃபீல் வீட்டாளுங்ககிட்ட மட்டுந்தான் இருக்கும்.

நான் இதுல பட்டும் படாம என் நிலைமையை சொல்லியிருக்கேன். நீ எப்படிப் புரிஞ்சுக்குவேன்னு தெரியாது. ஆனா... இப்படித்தான் வாழ்க்கைன்னு ஆனபின்னாடி அதை மாத்துற சக்தி இந்த வீட்டு வேலை செய்யுறவளுக்கு இல்லம்மா. தங்கச்சிய நல்லா... நல்லா... ம்... ஒரு பெரிய டீச்சரா... இல்ல... இல்ல... பெரிய வக்கீலாகுறதுக்கு படிக்கச் சொல்லும்மா”

வெளியே இன்னும் அனல்காற்று தன் செங்கோலாட்சியைச் செலுத்திக்கொண்டிருந்தது. ஜன்னல் வழியே சாலையோரம் கார் ஒலிப்பான் ஒலி கேட்டது. சேகர் வந்துவிட்டான் என்று புரிந்தது ஷர்மிக்கு. பதிவதை நிறுத்த முனைந்து ஸ்டாப் பொத்தானை அழுத்தினாள். இதுவரை பதிந்ததை சோதித்துப்பார்க்க எண்ணினாள். ரீவைண்ட் பொத்தானை சில நொடிகள் அழுத்தி, நிறுத்தி, பிளே செய்தாள். கேசட் நாடா சுழன்றுகொண்டிருந்தது. ஒலி இல்லை. சத்தத்தை அதிகரித்தாள். ‘ஸ்ஸ் ஸ்...’ என்ற ஒலியைத் தவிர வேறு ஒலி இல்லை. மேலும் சிறிது ரீவைண்ட் செய்து பிளே செய்தாள்... ‘ஸ்ஸ்ஸ்ஸ்...’ தொடர்ந்ததே தவிர தான் பேசியது எதுவும் வரவில்லை. இத்தனை நேரம் பேசிய எதுவும் பதிவாக வில்லை என்று உறுதி செய்தவள், கோபத்துடன் டேப் ரெக்கார்டரை துணிப் பெட்டிக்குள் எறிந்தாள். தொப்பென்று விழுந்து மெல்ல வாய் திறந்தது டேப் ரெகார்டர். கடிகாரத்தை நோக்கினாள். ‘கோபப்படாதே ஷர்மி... ‘ என்று ஆறுதல் சொன்னது கடிகாரம்.

கார் ஒலிப்பான் மீண்டும் ஒலித்தது. எரிச்சலுடன் எழுந்தவள் ‘இந்த உடலை சதையால் ஏன் செய்தான்’ என்று முணுமுணுத்துக்கொண்டே தன் கண்டைனர் அறையின் கதவைத் திறந்தாள். அனல் காற்று முகத்தில் அடித்தது.

◎

## மு. பிரபு, வேலூர்

அம்மா இறந்து கிடக்கிறார்
தலைமாட்டில் இருபுறமும்
மனைவியும்
மகளும்
அழுதுகொண்டிருக்கிறார்கள்

அஞ்சலி செலுத்த
வந்த உறவினர்களை
அழைத்துச் செல்கிறேன்

உறவினர்கள்
அஞ்சலி செலுத்திவிட்டு
எனக்கு ஆறுதல் கூறி
சென்றுக்கொண்டிருக்கிறார்கள்.

என் மகள் பாட்டியுடனான
உறவின்
நினைவுகளை பகிர்ந்தும்

பகுத்தறிவையும் பக்குவத்தையும்
ஊட்டி வளர்ந்த பாட்டியின்
இழப்பை தாங்காமல்
என் மகள் அழுதுக்கொண்டிருக்கிறாள்.

அம்மா இழப்பை
தாங்கமுடியாத எனக்கு
அம்மாவின் மறு உருவாய்
மகளிடம்

வாழ்ந்து கொண்டிருக்கும்
அம்மாவின் நினைவுகள்
என்னை ஆற்றுப்படுத்துகிறது.

◎

பிரான்சிஸ் திமோதிஸ், (இலங்கை – மலைநாடு)

# அம்மாவின் கண்கள்

சிறுமியாக இருந்த காலத்தில்;
குளிர்த்தும் வர்ணங்களில்
நட்சத்திரங்கள் பூப்பதுவும்...
மேகங்கள் கீழிறங்கி அவள்
தேகத்தில் அமர்வதுவும்...
பனியடர்ந்த சைப்ரஸ் இலைகள்
கன்னத்தில் உரசுவதுவும்...
கடலலையின் தலாட்டில்
கண்சாந்து கிடப்பதுவுமாகவே
அவளின் கனவுகள் இருந்தென்று;
இருண்டு போன அடுப்பங்கரை சுவற்றை
பார்த்தபடி,
அம்மா சொல்லிக்கொண்டிருந்தாள்.!

மேலும்;
வகுப்பறை முன் வரிசையில்
முதல்நிலை அவளென்றும்...
உயிரியல் பாடத்தில் முதல் மதிப்பெண்
அவளுடையதுதானென்றும்...
நூறு மீட்டர் ஓட்டப்பந்தையத்தில்
முதலிடம் அவளுக்கானதென்றும்
சொல்லிக்கொண்டேயிருப்பாள்..!

இப்போது அம்மா,
அடுப்பங்கரையில் சிறைப்பட்டுக் கிடக்கிறாள்.!
மீண்டுவர முடியாத தேசத்தில்
தொலைந்துபோயிருக்கிறாள்.!
நகக்கண்களில் தீக்காயங்களோடு
என் கனவுகளை சுமக்கிறாள்.
நான்;
அம்மாவின் கண்களை
கவிதைகளால் துடைக்கிறேன்.

இக் கவிதையின் ஈரத்தில்
உங்கள் இதயம் பூக்குமெனில்
அதிலொரு மலரெடுத்து
உங்களை;
ஈன்றவளின் இதயத்திற்கு பரிசாக்குங்கள்.

வட்டக்கச்சி வினோத்

# மின்சாரக் கம்பி மீது குரங்கு

இராம காவியத்திலிருந்தே
இலங்கைக்கும் எனக்கும் தொடர்பு

நான் தீயிட்டு கொளுத்திய மீதியில் செழித்துக்
கிடக்கும் இத்தீவு

தோட்டத்தில் காய்கறிகள் திருடியதுமுண்டு
தென்னையில் இளநீர் பறித்து, குறும்பைகளை
அரித்ததுமுண்டு

மின்சார கம்பிகள் மீது குடும்பத்தோடு நடை
பயின்றோம்

அந்த ஆபத்தான விளையாட்டில் சிலரை
இழந்துமுள்ளோம்

எங்கள் பாதை மீது நீங்கள் போட்ட
வேலியது,அவை எங்களை காலி செய்ததுமுண்டு


சிலவேளைகளில் இங்கு வாழ்ந்த
சிறுபான்மையினரைப்போல்
நாமும் காணாமலாக்கப்படலாம்

சிலநேரம் சீனாவுக்கு இலங்கையின் சீதனமாக
தாரைவார்க்கப்படலாம்

அங்கே பரிசோதனை கூடங்களிலே எம் வாழ்வு
முடிந்து போகலாம்

நாமும் இங்கு வாழ்ந்தோம் என்ற சின்னக்
குறிப்பையாவது எழுதி வையுங்கள்
உங்கள் எதிர்கால வாரிசுகள்
படித்து அறியட்டும்

தமிழர்களை அழிப்பது போல வரலாற்றுடன்
அழித்துப் புதைத்து விடாதீர்கள்
அவர்களைப்போல மீண்டு எழ
பூமியில் யாருமில்லை



ஐ.தர்மசிங்

# பயணம்

விலகாமல் இருக்கின்றன
இமைகள்
இணைந்தே இருக்கின்றன
இதழ்கள்

மௌனமாகவே இருக்கின்றன
நாசித் துவாரங்கள்
ஓட்டையாகவே இருக்கின்றன
செவிகள்

ஒட்டியபடியே இருக்கின்றன
கால்கள்
வெறுமையாகவே இருக்கின்றன
கரங்கள்

காட்சிகளின் பரபரப்பில்லை
வார்த்தைகளின் சலசலப்பில்லை
வாயுக்களின் நடமாட்டமில்லை
சப்தங்களின் சலனமில்லை
நடமாட முடியவில்லை
சுமைகள் ஏதுமில்லை

யார் யாரோ புறப்படுகிறார்கள்
யார் புறப்பட்டாலும்
இதில் எந்த பேதமும் இல்லை
தனிமைப் பயணம் அது
நிழல் கூட தொடருவதில்லை

அழுகையில் துவங்கி
அழுகையில் முடிகிறது
வாழ்க்கை
இடையிடையே வெளிப்படுகின்றன
இன்னொரு முகத்தின்
அவதாரங்கள்

வாழ்க்கை என்பது
சுற்றுலாப் பயணம்
மகிழ்வுதான்
பயணத்தின் இலக்கு

இன்னும் இருக்கிறது
காலம்
அன்பில் தொடங்கி
அன்பில் முடிந்து போவோமே.

◎

சுகந்தி மார்க்கண்டு, கனடா

# நல்லநாள் வந்ததே...


பாட்டெழுத ஆசைகொண்டு பலநாள் ஏங்கி
பலமுயற்சி செய்துவந்தேன் பலன்தான் இல்லை
வீட்டினிலே பயிற்சிசெய்யும் விருப்பத் தோடு
விளக்கின்முன் அமர்ந்திருந்து எடுத்தேன் ஏடு
கூட்டமாகத் தோழியரும் வந்தே நெஞ்சில்
குத்தினரே ஏளனத்தால் குறுகிப் போனேன்
நாட்டமின்றி மூடிவைத்து நாளைப் போக்கி
நல்லநாளும் வந்திடாதோ என்றேன் ஏங்கி

மலைநாட்டில் சுற்றுலாவில் சென்ற போதும்
மலைவளத்தில் மனம்மகிழ்ந்து நின்ற போதும்
சிலையாக நின்றிருந்தேன் எந்தன் நாவில்
சிறுகவிதை ஒன்றுகூடப் பிறக்க வில்லை
அலைபுரளும் கோணமலை அழகில் மூழ்கி
அமிழ்கின்ற வேளையிலும் கவிதைக் கள்ளி
உலைவைத்தாள் என்மனதை ஏற்க வில்லை
உளம்நொந்து போனேனே அந்த நாளில்

இடப்பெயர்வு வேளையிலும் எந்தன் வாழ்வில்
ஏத்தனையோ துயர்களெல்லாம் கடந்த போதும்
குடல்சுருங்கிப் பசியோடு தவித்த போதும்
குளிர்காற்று உயிரணுவைத் துளைத்த போதும்
மடத்தினிலே மகிழ்வின்றி இருந்த போதும்
மண்மூடைக் கிடங்கினுள்ளே மறைந்த போதும்
சடமாகக் கழிந்துசென்ற பொழுதின் போதும்
சரமாகக் கவியொன்று பிறக்க வில்லை

சிந்தையிலே துயரோடு இருந்த காலை
செய்தியொன்று வந்ததம்மா என்னை நோக்கி
செந்தமிழின் சிறப்புணர்ந்த சிலபேர் கூடி
செயலாக்கும் இணையவழி வகுப்பை நாடி
வந்தமர்ந்தேன் விரைந்ததுவே வகுப்பும் அங்கே
வாசமலர் தழுவிவரும் தென்றல் போல
சந்தங்கள் பலசேர்த்த பாக்கள் எல்லாம்
சாற்றுகின்ற வழிகண்டு வியந்தேன் அம்மா

◎




த. ரவீந்திரன்..

என்றேனும் கிடைக்கும் உனக்கான
தனிமையில் உவமையில்லா மொழியில்
உலவும் என் உலறலை மெல்ல அசைபோடு
மனம் ரசிக்காவிட்டாலும் கசப்பற்ற
கவிதைகளை கடந்து போகும்
வாசக மனநிலையில் வாழ்ந்திட
ஏதுவானதே என்னோடு பேசிய வார்த்தைகள்
வார்த்தைகள் தீர்ந்த மொழியின்
மரகத வார்த்தைகளின் மௌனத்தில்
வாழும் நிர்பந்தம் இந்நாளின் நிராகரிப்பு..

◎



ஜீ.சுமித்ரா, பிரான்ஸ்

# காலப்பெருவெளி

காட்டுப் பூக்களை
கண்டுகொள்ளாமல்
கடக்கும் பலருக்கும் அதன்
தன்மை புரிந்திட வாய்ப்பேது

சில்வண்டுகள் தங்களுக்கேயான மகிழ்வில் எழுப்பும்
இசையை
இரைச்சல் எனச்சொல்லும்
செவிகளுக்கு அவற்றின்
ஆத்மார்த்த பிறப்பியலை
மதித்திடத்
தெரியுமா என்ன?

ஈசலின் பிறப்பிற்கு பெருமகிழ்வு கொண்டாடிய
தருணமுண்டா? - இல்லை
அவற்றின் வாழ்வு ஒருநாளில் முடிந்ததுகண்டு
ஒப்பாரிவைத்த உலகமுண்டா சொல்லேன்?

குளவிக்கூட்டை கொளுத்தி
அழிக்கும் மனிதமற்ற
பிறப்பினங்கள் நாம்.

தேனீக்களை அழித்தேனும்
தேன் சுவைக்கும் பெரும்
பாரம்பரிய உணவுபோற்றும்
பரம்பரை நாமோ!

செடிகளைப் பராமரி
ஆனால் அதில்தான்
தங்கியிருக்கிறது
நீ
பிடுங்கவிருக்கும் சில
களைகளின் வாழ்தலும்.

ஆனாலும் காலநிர்ப்பந்தம்
களைகளைப் பிடுங்குதல்.

காலத்தின் பெருவெளி
வாழ்தலுக்காகவே விதையிட்டு விருட்சித்தது.

எதையும்
குதர்க்கம் செய்யாது கொண்டாடி மகிழ்.
காலப்பெருவெளி
உனக்கும் காத்திருக்கிறது
இரண்டிற்குமாக.....ஃ



# கூலி ஒப்பாரிக்காரர்கள்

ஆங்கிலத்தில்: அழகு சுப்பிரமணியம்

தமிழில்: கெக்கிறாவ ஸுலைஹா

என் பாட்டி சனியன்று பின்னிரவில் இறந்து போனபோது என் தங்கை, தம்பி, நான் எல்லோரும் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தோம். துயர மேளங்களின் சத்தங்களும், பாட்டி வீட்டிலிருந்து வருகின்ற அழுகை ஒலிகளுமாய் எங்கள் விடிகாலை அன்றைய தினம் புலர்ந்து விட்டிருந்தது. சட்டுச்சட்டென்று உடைகளை மாற்றிக்கொண்டு விரைந்தோம் நாம் பாட்டியின் வீட்டுக்கு. பென்னம் பெரிய சனக்கூட்டம் வேலியால் வளைக்கப்பட்டிருந்த வளவுப்பகுதியில் இருந்து முற்றவெளியெல்லாம் நிறைந்திருந்தது. அந்தக் கூட்டத்துக்கு நடுவே நகர்ந்து நகர்ந்து, பாட்டியின் குடிசையில் அம்மாவைத் தேடியபடி விரைந்தோம் நாம். கொஞ்சம் பயம் அப்பியுமிருந்தது, இதுதான் நாம் முகம் கொடுக்கின்ற முதல் சாவு வீடு எங்கள் குடும்பத்தில்.

கஷ்டப்பட்டு பாட்டியின் குடிலுக்குள் நுழைந்த எங்கள் காதுகளில் காரியங்கள் செய்யும் எஜமானின் ஓங்கியதொனி, சத்தமாய்; கேட்டது. அவர் எங்கள் மாமா உறவும்தான். ஊரில் ஒரு சின்னக் குட்டிப்பள்ளியில்;; ஆசிரியரும்கூட. கொஞ்சம் பைத்தியக்கார வகைமையும் தான் அவர். கடுமையாகவும் பெரிய தொனியிலும் தான் எப்போதும் பேசிப் பழக்கம் அவருக்கு. கோபப்பட்ட சூழ்நிலை என்றால் ஐயோ கேட்கவே வேண்டாம், ஊரே கேட்குமட்டும் கத்திக்குழறுவார் பெரிய தொண்டையில்.

காலையிலிருந்து அவர் வெகுவாக வெகுண்டு போய்த்தான் இருந்தார். ஏனெனில், கூலிக்கு ஒப்பாரி வைக்கும் ஆட்கள் இன்னும்தான் வந்து சேர்ந்திருக்கவில்லை சாவு வீட்டுக்கு. ‘‘நானே போய்க்கூட்டி வருகிறேன்’’ என்று சினத்தோடு சொன்னபடி வாசலைவிட்டு காலடி எடுத்து வைத்து நகர்ந்தார் மாமா. என் தம்பி, தங்கைகளை அங்கேயே விட்டுவிட்டு அவர் பின்னால் நானும் வரைந்து ஓடுகிறேன். நிறைய கதைகளில் கேள்விப்பட்ட இந்த கூலிக்கு ஒப்பாரி வைக்கும் கூட்டத்தினர் எப்படி இருப்பார்கள் என்று பார்த்துவிடும் ஆவல் மிகைத்த கண்கள் எனக்கு.

மண்பாதைகள் பல கடந்து ஒற்றையடிப் பாதையில் நானும் மாமாவுடன் நடந்தேன். பெரிதாக வீடுகள் எல்லாம் இல்லை அந்த வழியில். சத்தம் சந்தடியும் மிகக்குறைவாகவே இருந்தது. தொலைவில் நரிகளின் ஊளைச்சத்தம் அப்புறம் புதர்களுக்கு அப்பால் பாம்புகளின் சீறொலி எல்லாம் எனக்கு கேட்பதுபோல ஒரு நினைப்பு. ‘‘பாம்பு எல்லாம் ஒன்றுமுன்னைக் கடிக்காது. பயப்படாமல் வா’’ மாமா என்னை மன தைரியப்படுத்தினார்.

கடலோரக் குடில்கள் வரை வந்து சேர்ந்திருந்தோம் நானும் மாமாவும். கடலடியில் மீன் பிடிப்போர் வலைகளைச் சரிசெய்து கொண்டிருந்தார்கள். அவர்களையண்டி அவர்களின் மனைவியரும் காரியங்களில் உதவியபடி நின்று இருந்தார்கள். கட்டுமரங்களை கடலுக்கு வெளியில் கட்டிவைத்துவிடும் குறிப்போடும் அவர்கள் தொழிற்பட்டுக் கொண்டிருந்தார்கள். ‘‘நில்லுங்கள் பைத்தியங்களா, என் மாமா அவர்களண்டையில் விரைந்;து போய்நின்று கத்தத் தொடங்கினார். ‘‘தெரியாதா உங்களுக்கு, என் மாமியின் சாவு வீடு இன்று என்று? கீழ்த்தரமான மனுசரடா நீங்கள்! கடலடியில் வேலைகளைப் போட்டுவிட்டு அங்கே அல்லவா இன்று நின்று இருக்க வேண்டும் நீங்கள்..’’

‘‘எஜமானனே, இதோ ஆயத்தமாகி வந்து விடுகிறோம். சுணங்கியமைக்கு மன்னியுங்கள்.’’ ஒருத்தி தாழ்ந்த குரலில் சொன்னார்.

சற்று நகர்ந்து அங்கும் இங்கும் உலவிக்கொண்டே மாமா நாம் நின்றிருந்த குடிசைகளில் பின்னால் உள்ள சில குடிசைகளைச் சுட்டிக்காட்டியபடி, என்னிடம் திரும்பிச்சொன்னார், ‘‘பார், இதுதான் இந்த கீழ்சாதிப்பெண்கள் வாழும் குடில்கள்’’

வெளியே தரித்து நின்றபடி உள்ளிருக்கும் ஆட்களை நோக்கிப் பேசிய மாமா கூப்பிட்டுக் கூப்பிட்டுக் கத்தினார். இரண்டு பெண்கள் தோள்புறம் மூடப்படாத, தலை முக்காடிடாத அவர்களின் சேலைகளைச் சரிசெய்தபடி வெளியே வந்தார்கள். மணிக்கட்டிலிருந்து முழங்கை வரை வளையல்கள் கொஞ்சின அவர்கள் கைகளில். அவர்கள் நகர்ந்து வருகையில், கொலுசு, மிஞ்சிமெட்டி சத்தமும் காதில் கேட்டது. மாமா தொடர்ந்தும் கத்தினார் அவர்களிடம் கோபத்தோடு. ‘‘நான் நான்தான் செய்தி அனுப்பினேனே.. எங்கள் மாமியின் சாவு வீடு என்று தெரியாதா உங்களுக்கு? இன்னும் ஏன் வந்து சேரவில்லை நீங்கள்?’’

‘‘எங்கே மற்ற ஒப்பாரிக்காரரர்கள்?’’ சாவுவீட்டுக்குக் காரியமாற்றும் எஜமான் எங்கள் மாமா சினம்பொங்கக் கொதித்தார்.

‘‘இப்போதைக்கு இருவரும் மட்டுமே இருக்கிறோம் ஐயா, இரண்டு சகோதரியர். மற்றவர்கள் எங்கே என்று நிச்சயம் செய்து கொள்ள முடியவில்லை. ஆனால் அவர்கள்கூட வரமுடியாத நிலைமைதான். அவர்களது அம்மாவும் இன்று காலையில் இறந்துபோய் விட்டதாய் நாங்கள் கேள்விப்பட்டோம். அவர்களின் சாவு வீட்டில் அவர்களுக்கும் காரியங்கள் இருக்கின்றன போலும்.’’

‘‘ஐயோ, பைத்தியக்காரப் பஞ்சப் பரதேசிகளே, எங்கே அவர்கள் வீடு?’’ கோரி நின்றார் மாமா.

‘‘இங்கிருந்து அதிக தூரம் இல்லை ஐயா, சாரியைச் சரிசெய்து கொண்டபடி ஒரு பெண் சொல்லத்தொடங்க,

‘‘கூட்டிப்போங்கள் என்னை அங்கே’’ கோபத்தின் திரட்சியோடு கனன்றார் மாமா. இரண்டு பெண்கள் வழிகாட்டி போக, வழியே மாமா நடந்தார். ஒரு குடிலுக்கு வெளியே நடந்தபடி இருந்தவள் தாமதித்து உள்ளிருக்கும் சகோதரிகளை அழைக்க, இருவரில் ஒருத்தி சட்டென்று

வெளியே வந்து, கூர்குத்தி நின்ற தன் மார்பகங்களை சேலையால் மறைத்தபடி, தயங்கிய தொனியில் மாமா பேசத் தொடங்குமுன் அவரிடம் சொன்னாள்,

“இன்றைக்கு மட்டும் எங்களை மன்னித்து விடுங்கள் ஐயா. எங்கள் அம்மாவும் இன்று இறந்து போய் இருக்கிறார். பெருந்துயரில் இருக்கிறோம். வெளியே நிகழும் ஒரு மரண வீட்டில் கத்தியப்படி இருக்க திராணியுடையவர்களாக இன்று எங்கள் குரல்களும் இல்லை.”

“என்ன கீழ்த்தரம் நீங்கள் எல்லோரும்? என் வீட்டில் ஒப்பாரி வைக்க இருவர் மட்டும் போதுமா?; போதாது. என் மாமி பற்றி தெரியாதா உங்களுக்கு? அவர் பெயர் என்ன, புகழ் என்ன?”

பிரதிநிதியாக பேச எத்தனிக்கும் தொனியில் அங்கிருந்த ஒப்பாரிக்காரர்களுள் வேறு ஒருத்தி மறுபடியும் பேசினாள், “அவர்களை மன்னித்து விடுங்கள் ஐயா, தூய்மையான அழுகையுடன் அவர்கள் அவர்களது அம்மா இறப்புக்கு அழுதுவிட்டிருக்கிறார்கள் இன்று. நடிப்புக்கு ஒப்பாரி வைக்க முடியாதபடி அவர்கள் துவண்டு இருக்கிறார்கள்.”

கோபாக்கினியில் மாமாவின் உதடுகள்; துடிதுடிப்பதை, நான் கவனித்தேன். விழிகளைச் சுழற்றிப் பொங்கினார் மாமா. பேசிய பெண் இப்போதும் தலையைக் குனிந்தபடி அப்படியேதான் நின்றிருந்தாள். மாமாவின் அந்த உடல்மொழியையும் கண்டு, அவள்மீதும் அனுதாபங்கள் மிகைத்திருக்கும் ஒரு மனோநிலையில் என் தலையை நான் சற்று குலுக்கி கொண்டேனா, எஜமான், அதாவது சினம் கொண்டிருந்த என் மாமாவின் கோபம் ஒரு தீவிரத்தன்மையுடன், மணற்கரைகளைத் தொட்டுத் தழுவ ஓடோடி வரும் நீரலைபோல என்பால் திரும்பலாயிற்று. தலைகுலுக்கிய என்னை நோக்கி மாமா சொன்னார், “பைத்தியமா விளையாடுகிறாய் நீயும்..?” உனக்கென்ன தெரியும், உன் அப்பாவின் தோழர்கள், சட்டத்தரணிகள் சங்கப் பிரதிநிதிகள் வேறு வருவார்கள் சாவு வீட்டுக்கு. மேல் நீதிமன்ற நீதவான்கூட வருவாரல்லவா? போதுமான அளவுக்கு ஒப்பாரிக்காரர்கள் இல்லை என்றால் என்னாகும் அந்த வீடு? வெட்கக்கேடு அல்லவா.. தலையைத் தலையை ஆட்டிக் கொண்டிருக்கிறாய் நீயும்..” அந்தப் பெண் சகோதரி குனிந்து மண்டியிட்டபடிதான் நின்றிருந்தாள் மன்னிப்புக்கோரிய தோரணையில்.

“என்றும் நாங்கள் உங்களை மீறி நடக்க ஒன்றும் எண்ணவில்லை ஐயா, எங்கள் நிலைமை அப்படி.” அவர்களில் ஒருத்தி சொல்லி, “இம்முறை மட்டும் எங்களை விட்டு விடுங்கள் ஐயா.. நிச்சயமாய் இன்னொரு சந்தர்ப்பத்தில் ஒரு சாவு வீட்டுக்கு ஒப்பாரி வைக்க உங்கள் இல்லத்துக்கு கட்டாயம் வந்து நிற்போம் நேரத்துக்கு. தொண்டை வற்றிப்போகும் வரை வந்து நின்று கத்திக்குழறுவோம்.” மேலும் சொன்னாள் அவள்.

“அட பைத்தியக்காரிகளே,” கோபத்தில் கொதித்த மாமா சொன்னார், “என் வீட்டில் இன்னொரு சாவை வழிபார்த்தல்லவா இருக்கிறீர்கள் நீங்கள்.. நிச்சயம் எனது சாவு பற்றித்தான் சிந்திக்கிறீர்கள் போலும், கீழ்சாதிப் பெண்களே, நீதிமன்றம் போய் உங்களுக்கு என்ன அடி தருகிறேன் என்று பாருங்கள்.”

அவர்களது சாரியை கொத்தோடு கையில் எடுத்து மாமா சற்று தூரத்துக்கு இழுத்துக்கொண்டே வந்தார் அவர்களை. “உங்கள் கைகளை எடுங்கள் ஐயா, எங்கள் மீது இருந்து.. இதோ நாங்கள் வருகிறோம்” ஓலமிட்டு ஓலமிட்டுச் சொன்னாள் ஒருத்தி.

காரியங்கள் செய்யும் எஜமான் அவர்களை விடுவிக்க அவர்களில் நான்கு ஒப்பாரிக்காரர்கள் மாமாவைப் பின்தொடர நானும் அவர்களின் பின்னால் நடந்தேன்.

பாட்டியின் வீட்டுக்கு வந்ததும் வராததுமாக அந்தப் பெண்கள் ஒப்பாரி வைக்கத் தொடங்கினார்கள் கைகளை காற்றோடு நீட்டியபடி, தலைவிரி கோலத்துடன். அவர்களோடு தொடர்ச்சியாய் மற்ற பெண்களும் சொந்தக்காரர்களும் இணைந்து கொண்டார்கள். இரண்டு இரண்டாக, மூன்று மூன்றாக, குழுக்களாக அமர்ந்து ஒருவர் தோள்களில் ஒருவர் தலைசாய்த்து தத்தமக்கு ஏற்றவிதமாய் ஒப்பாரிகளை ஒவ்வொருவிதமாக வைத்தார்கள். கூலிக்கு ஒப்பாரி வைக்கும் அவர்கள் சற்றே தூரத்தில் இருந்தபடி காற்றில் கைகளை வீசி வீசி, நெஞ்சில் அடித்து அடித்து ஒப்பாரி வைத்தார்கள். இடையிடையே பேசிக்கொண்டும் சுலோகங்களைச் சொல்லிக் கொண்டும் ஒப்பாரிகள் தொடர்ந்தன. நிஜமாக அழுது சொல்வோரிடமிருந்து விடயங்களைப் பெற்று ஒப்பாரிப்பாட்டில் அவர்கள் முன்வைத்தார்கள். அவர்கள் ஒப்பாரியில் இனி பாட்டி எங்களில் இருந்து தூரத்துக்கு ஆவதை சொல்லி அழுதார்கள். என் மச்சான் தம்பூ அதாவது, பாட்டியின் விருப்பத்துக்குரிய பேரன் பிள்ளையாண்டி மாலைதீவில் இருந்து திரும்பும் வரைதான் பாட்டி எங்களுடன் இருப்பார்கள் என்று எவரோ சொல்லியழும் விடயத்தைக்கேட்டு, தரைவிரிப்பு மீது இதுவரை அமர்ந்திருந்த ஒப்பாரிக்காரி எழுந்து கொண்டாள் சட்டென்று. தலையைச் சிவித்து விரிகோலமாக்கி அகலக்கைகள் நீட்டி நெஞ்சில் அடித்து கத்திக்குழறி ஒப்பாரியில் சொல்லத் தொடங்கினாள் அந்த விடயத்தையே சுலோகமாக்கி இப்படி:-

“உங்கள்; பேரப்பிள்ளையாண்டான் வருகின்றான் அன்பாளரே

உங்கள் கண்களைத் திறவுங்கள் அன்பாளரே..
உங்கள் பேரப்பிள்ளையவன் வருகின்றான் இக்காலத்தில்
திறவுங்கள் கண்களிரண்டை என் பேரன்புமிக்கோரே..”

காரியங்களாற்றும் எஜமான் ஒப்பாரிக்காரர்களை எப்படி கொண்டு வந்தோம் என்று பெருமை பீற்றிக்கொண்டிருந்தார்

தன் நண்பர்களிடம். அவருடைய எதிர்பார்ப்புகளுக்கும் அப்பால் அவர்தன் செயல்குறித்து அவருடைய இந்தச்செயற்பாட்டை கண்டிக்கும் வகையில் அது மிகவும் கொடூரத்தனமானது என்று கருதிய அவரது நண்பர்கள் அவருடைய மானுடத்தன்மையற்ற இந்தச் செயற்பாடுகளுக்காக அந்த இருவரிடமும் அவர் மன்னிப்பு கோர வேண்டுமென்று வேண்டி நின்றார்கள். சாவு வீட்டுக்கு அஞ்சலி செலுத்த வந்தவர்களில் பலர் கூட, அவர்களுடைய அனுதாபங்களை அந்த இரண்டு ஒப்பாரிக்கார சகோதரியர்க்கும் சொல்லி வைத்தார்கள். என்னுடைய அப்பா இது விடயத்தில் அவர்களுக்குப் போதுமான காசு பணத்தைக் கொடுத்து இல்லம் அனுப்பி வைக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்தார்கள்.

வீட்டில் காரியங்கள் புரியும் எஜமானர் இப்போது நன்கு நிந்திக்கப்பட்டவராக நின்றிருந்தார். சகல காரியங்களும் முடியும் வரைக்கும் இருக்க வேண்டும் என்று நிர்ப்;பந்திக்கப்பட்ட பெண்கள் இருவரும் இன்னும் சற்று நேரத்துக்குப் பின்னர் போகலாம் என்று அனுமதிக்கப்பட்டார்கள். அவர்களுடைய சேவைகளுக்கான நற்கூலியும் வழங்கப்பட்டது. காரியங்கள் புரியும் எஜமான் அது விடயத்தில் தன் மீது விழுந்த கெட்டவிதமான கவனத்தை கலைக்க எண்ணி நிறைய வேலைகளை அள்ளிப் போட்டுக்கொண்டு அங்கும் அங்கும் வலம் வந்தார். மேளக்காரர்களை ஏசுவதும் துவைப்பதுமாய் இப்பொழுது அவர் கடமையை திசைதிருப்பல் செய்துகொண்டு இருந்தார். கூலிக்கு ஒப்பாரி வைக்கும் ஆட்களின் குரல்கள் கூட தேய்ந்து போய் இருந்தது. அப்புறம் அரிசி மூட்டைகள், சாம்பிராணி பைக்கற்றுகள், மற்றும் இறுதி காரியங்களுக்கு தேவையான பொருட்களை பாட்டியின் பூதவுடலம் அருகில் கொண்டு வந்து அவரே வைத்தார்.

இப்பொழுது அவருக்கு தலை சுற்றுவது போல் ஆகி, ஒப்பாரிக்காரர்களை கூட்டி வரும் வழியில் நெடுந்தூரம் நடந்த களைப்பும் ஒன்றுசேர அவர் சட்டென்று மயக்கமுற்று நிலத்தில் சடார் என்று வீழ்ந்தார். அஞ்சலி செலுத்த வந்த சிலர் அலறியடித்துக் கொண்டு அவரண்டை ஓடி வந்தார்கள். இன்னும் சிலர் ஓடி வந்து அவரை ஒரு பக்கம் கிடத்தி அவருடைய முகத்தில் தண்ணீர் தெளித்து அவருக்கு மின்விசிறி வீசினார்கள். சற்றைக்கெல்லாம் அவர் மீள எழுந்து கொண்டார்.

அடுத்தடுத்த வேலைகள் யாவும் மற்றவர்கள் கவனிக்குமாறு அங்குரைக்கப்பட்டது. அவருக்கு சற்று ஓய்வு வழங்குமாறு அவ்விடத்தில் வேண்டப்பட்டது. போகப்புறப்பட்டிருந்த ஒப்பாரிக்காரப் பெண்கள் இருவர்களும் முடியுமான மட்டும் அழுது தீர்த்ததில் குரல் கம்மி என்று ஆகியிருந்தாலும், அவர்களுடைய அடித் தொண்டையில் சக்தியை வரவழைத்துக்கொண்டு தன் எஜமானர் குறித்த இந்த சம்பவத்தையே ஒரு பதிவில் ஆக்கி மறுபடியும் அழுது பாடத்தொடங்கி இருந்தார்கள் தலையை நெற்கதிர்கள் காற்றுக்கு அசைக்குமே அந்தத் தோரணையில் அசைத்து அசைத்து.

“நற்காரியங்களின் எஜமானே, இந்த ஏழைகள் உம்மைத் தொலைக்கப்போகின்றனரா?

நீங்கள் இல்லை எனில் எங்களுக்கு, கொண்டாட்ட நாட்களில் அருளளிப்பது யார்?

பேரன் வந்திருக்கிறான் அன்பானவளே, உன் பேரன் வந்திருக்கிறான் என் அன்பானவளே..”

அவர்தம் ஒப்பாரி அழுகை சத்தம் ஓய்ந்து முடிய ஐயர்குருக்கள்மார்கள் அந்த இடத்துக்கு வந்தடைந்;தார்கள். மார்க்க அனுஷ்டானங்கள் நடந்தேறின. காரியங்கள் நடத்தும் இடத்தில் ஐயர்குருக்கள்மார்களது காதுகளிலும் வந்து வீழ்ந்தன இந்தப் பேரன் பற்றி பாட்டில் சொல்லப்பட்ட கதைகள். அவை குறித்து வியந்தார்கள். பாட்டியின் பேரன் தம்பூவை அவர்கள் வேண்டிக் கொண்டார்கள், பாட்டியின் துயில்கொள்ளும் படுக்கையின் அருகே வந்து பிரார்த்தனைகளை முன்வைக்குமாறு. நாள் முழுதும் அழுத்தி வைத்திருந்த துயரம் கண்ணீராய் வெடிக்க தம்பூ சாம்பிராணி பற்றவைத்து பிரார்த்தனைகளை ஒப்புவிததான்,

“நீ நெடுங்காலம் காத்துக்கொண்டிருந்தாய் எனக்காக” அவன் அழுதான். “என்ன விதி என்னை அப்பால் வைத்திருந்தது உன்னிலிருந்து?” சொல்லிச் சொல்லி அவன் அழுதான். “இறுதியாய் நான் வந்தபோது நீ உன் மயக்கநிலையில் உன் படுக்கையில் இருந்தாய். என்னால் உன்னோடு பேச கூட முடியாமல் அல்லவா இருந்தது...”

உண்மையான ஒப்பாரி தம்பூவின் குரலில் ஒலிக்கிறது அந்த இல்லத்தில். அந்தக் கருவை எடுத்துக்கொண்டு மறுபடியும் பாடத்தொடங்கினார்கள் கூலி ஒப்பாரிக்காரர்கள்.

“ஏன் மௌனித்திருக்கிறாய்
ஒரு பெரும் சட்டத்தரணியின் தாயாரே!
விடையளித்துவிடு இந்த அன்பானவர்களுக்காக
விடையளித்து விடு இந்த அன்பானவர்களுக்காக.
மதுரை மீனாட்சி போலானவளே,
மீனை ஒத்த கண்கள் கொண்டவளே,
உன் பேரன்புப் பேரன் வந்திருக்கிறான்
என் அன்பானவளே எழுந்திரு.
என் அன்பானவளே உன் பேரன் வந்திருக்கிறான்.

◎

தமிழரசி ஜெயதாசன்

# மங்கையர் மகிமை

மங்கையராகப் பிறப்பதற்கே
நல்ல மாதவம்
செய்திடல் வேண்டும்
என்றார் தேசிகவிநாயகம்பிள்ளை /
பட்டங்கள் ஆள்வதும்
சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள்
நடத்தவந்தோம் என்றார் பாரதி /

காலங்களின் மௌனத்தைக்
களைந்து மூடிக்கிடக்கும்
கதவுகளை முட்டித்திறந்து
போராடி முன்னேறுபவள் பெண் /
தேடித்தளர்ந்த உள்ளங்களைத்
தட்டிக் கொடுத்து
துணையாய் நின்று
தைரியம் ஊட்டுபவள் பெண் /

வாடிச் சருகாகாமல்
வாழ்வை வளப்படுத்த
வீரம் கொண்டெழுந்து
நன்கு செயற்படுபவள் பெண்/
தளராமல் ஏற்றமுடன்
இமயத்தை அடைந்திட
சோதனைகள் தாண்டியே
சாதனைகள் படைப்பவள் பெண் /

சோகத்தைப் புதைத்து
வலிகளை மறைத்து
விடியலை எதிர்நோக்கிப்
பயணத்தைத் தொடர்பவள் பெண் /
காயத்தை மறந்து
கண்ணீரைத் துடைத்து
பெண் சிங்கமாய்
வெற்றிவாகை சூடுபவள் பெண் /

பெண்கள் என்றாலே
பேதையர் என்றே
பெருங் கனவோடவர்
வாழ்தலை அறியாது
அடக்கியே வைத்தார்
அன்றைய நாளிலே /
குமுறிய கடலன்னை
பெருகிடும் வண்ணம்
பொங்கினாள் மங்கை /

இன்றைய நாளிலே
தடைகளை இட்டோர்
தாமாக விலகிட
ஒவ்வொரு துறையிலும்
கால்களைப் பதித்து
முன்னேற்றம் கண்டாள்
கண்டோர் வியந்திட
பார்ப்போர் மகிழ்ந்திட /

கொழுகொம்பில் படரும்
கொடியாய் இருந்தவள்
தனித்தே நின்றிடும்
பெருமரம் ஆயினாள் /
பழுதெனச் சொன்னவர்
பற்றிப் பிடித்தார்
குடும்பங்கள் வளரக்
குவலயம் சிறந்தது /

துணிந்தவள் வளர்ச்சியில்
தடுமாற்றம் இல்லை
வானமே அவளது
வாழ்வுக்கு எல்லை /
செய்யாது இருந்தால்
பலநூறு தொல்லை
சுற்றியே விடுவாள்
பூமியின் சில்லை /

ஆதிக்கம் செய்பவர்களை
சரணடையச் செய்திடு
வானமே எல்லையென்று
வாழ்ந்து காட்டிடு /
நாளைய விடியலும்
உனக்கென அமையும்
சரித்திரப் பக்கங்களும்
உன்னைப் போற்றட்டும் /

◎



# நூரியம்மா தர்கா

லி.நௌஷாத் கான்

“இங்க பாரும்மா கல்யாணி கவலை படாதே,உன் இத்தனை வருஷத்து வேண்டுதல் வீண் போகாது,நீ கும்பிடுற அந்த மாரியாத்தா உன்னை கை விட மாட்டா ஆனாலும் இந்த வாப்பாக்காக அந்த நூரியம்மா தர்காவுல நேந்துக்கிட்டு அரிசியில மாவு விளக்கு செஞ்சு அதை தர்காவுல எரியவிட்டு அதன் பிறகு அந்த அரிசி விளக்கை சாப்பிடும்மா அடுத்த வருஷமெல்லாம் உன் வீட்ல மழலை சத்தம் கேட்கும் என்றார் சாகுல் மரைக்கார்.”

சரிங்க வாப்பா என்று சொல்லி விட்டு பக்கத்து வீட்டு கல்யாணி அவள் வீட்டுக்கு சென்றாள்.

அவர்கள் பேசி கொண்டிருந்ததை கேட்டு கொண்டிருந்த சாகுலின் மகன் ஜைனுல் ஆபிதீன்

கல்யாணி போனதும் கோபப்பட்டு தன் வாப்பாவிடம் பேசினான்.

“இங்க பாருங்க வாப்பா நீங்க கெட்டது மட்டுமில்லாம ஷிர்க்கான காரியங்களில் கல்யாணி அக்காவுக்கும் கத்து கொடுக்குறீங்க அவங்க ஏற்கனவே கல்லை சாமியா கும்மிடுறாங்க,அவங்களுக்கு நல்ல புத்தியை சொல்லி கொடுத்து ஒரு நல்ல முசல்மானா அவங்களுக்கு தாவா பண்ணுறதை விட்டிட்டு இப்படி நீங்களே கெடுக்குறீங்களே என்றான்”.

“வாயை மூடுறா இபிலீசு,ஒரு நல்ல முஸ்லீம் என்பவன் எல்லார்கிட்டயும்

அன்பா,ஆதரவா யார் மனசையும் புண் படுத்தாம சமாதானமா ஒற்றுமையா

வாழ்பவன் தான் “.

லக்கும் தீனக்கும் வலியதீன் (உன் மார்க்கம் உன்னுடையது

அவங்க மார்க்கம் அவர்களுடையது )மூட நம்பிக்கையா இருந்தாலும்

ஒருத்தங்களோட நம்பிக்கையை கெடுக்குற பகுத்தறிவு தீவிரவாதத்துக்கு

சமமானது.

“நம்பிக்கை வச்சா அந்த கல்லும் சாமி தான்,நம்பிக்கை தாண்டா

எல்லாம்.என்னை பொறுத்தவரைக்கும் நூரியம்மா, அந்த மாரியாத்தா எல்லாம் ஒண்ணுதான்.

நம்பிக்கையோட வர்றாங்க தப்பா ரைட்டா தெரியாது அவங்க வேண்டுதல் நிறைவேறுது

எனக்கு அது போதும்.”

உன் கொள்கையில நீ உறுதியா இரு ஆனா உன் நம்பிக்கையை அடுத்தவன் மனசுல திணிக்க நினைக்காதே ஒரு காலத்துல எல்லா தர்காவுலயும் மத வேறுபாடு இல்லாமல் மனுசனா எல்லா மதத்து மக்களும் உடம்பு சரியில்லைன்னா ஓதிக்கிட்டு போவாங்க,சர்ச் பார்க்க வேளாங்கண்ணிக்கு போவாங்க,அம்மை வந்துச்சுன்னா மாரி அம்மன் கோயில்ல வேண்டிப்பாங்க நீங்க வகாபிசம் செய்ய போய் தாண்டா இங்க பிரிவினை வந்து கிடக்கு.

அவனவனை அவனவன் இஷ்டத்துக்கு அவனவன் நம்பிக்கையோட

வாழ விடு அது போதும் என்றார் சாகுல் மரைக்கார்.

“இங்க பாருடா ஜெய்னு உன் ஏகத்துவ கொள்கைகளையும் நான் குறை

சொல்லலை ரொம்ப செலவில்லாம சிம்பிளா திருமணம் செய்யுறீங்க,ஏழை

குமர்களை மகர் கொடுத்து வரதட்சணை இல்லாம கல்யாணம் பண்ணுறீங்க

அதெல்லாம் பாராட்டுதலுக்குரியது தான் ஆனா ஒருபோதும் அடுத்தவங்களோட மத நம்பிக்கையை புண் படுத்தாம ஒற்றுமையா சகோதரத்துவமா வாழப் பாருங்க என்றார் சாகுல் மரைக்கார்.”

தன் வாப்பாவின் நற்சொல் கேட்டு அவரிடம் மன்னிப்பு கேட்டு கண்ணில்

அழுகையோடு அவரை கட்டியணைத்தான் ஜெய்னு.

மறுநாள்

கல்யாணி அக்கா நூரியம்மா தர்காவில் அரிசி மாவிளக்கில் நெய்யிட்டு தீபம்

ஏற்றினாள்,அப்போது வெளியே வந்த ஜெய்னு கல்யாணி அக்காவை பார்த்ததும் புன்னகையோடு கடந்து விட்டு சென்றான்...



# மேற்கு
# (நடப்பியற் சித்திரம்)

சு.கருணாநிதி

“**க**லோ…அம்மா நான் அங்கவந்து கொஞ்சக்காலம் உங்களோட இருக்கப்போறன்.இஞ்ச இவரோட இருக்கேலாது இவருக்கு ஒருமண்ணும் தெரியாது…தாய் ஒண்டும் சொல்லிக்குடுக்கயில்ல”

‘ஏனடி… எல்லாத்துக்கும் முரண்டுபிடிக்காம விட்டுக்குடுத்து அனுசரிச் சுப்போகவேணும். அவரோட எதிர்த்துக்கதைக்காமல் பேசாமலிரு.’

“உங்களுக்குச் சொன்னால் விளங்காது

லக்சனுக்கு வீடுகூட்டத்தெரியாது…மொப்பண்ணத் தெரியாது… இறைச்சிவெட்டத்தெரியாது… சமையல் வேலையிலும், ஒண்டும்தெரியாது, காட்டிக்குடுத்தாலும் செய்யத்தெரியுதில்ல… கடைக்குப்போய் சாமான் வாங்கத்தெரியாது சாமானுகளின்ர விலைதெரியாது.. எந்த நேரமும் அம்மா அம்மா எண்டு சொல்லிக்கொண்டிருப்பார்..”.

‘பொறுமகளே…

பொறுமகளே அவசரப்படாத… நான் சொல்லுறதக்கேள்… இதுகளையெல்லாம் ஒரு பிரச்சினையெண்டு எடுத்தா வாழ ஏலாது”

“இது உங்கடகாலமில்ல இப்பநாங்க யூறோப்பில இருக்கிறம்… இதுவேற தலைமுறையம்மாஉங்கட கதையக்கேட்டுக்கொண்டு என்னால இருக்க ஏலாது.”

உலகத்தின் எண்நூறூகோடி மக்கள் சனத்தொகையில் இருநூற்றி எழுபது மில்லியன் மக்கள் அகதிகளாக புவியின் மேற்பரப்பெங்கணும் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள் இந்தக்கணக்கினுள் லக்சனின் பெற்றோரும், அவனது மனைவியின் பெற்றோரும் உள்ளடக்கம். ஐய்ரோப்பாவில் அங்கீகரிக்கப்பட்ட அகதிமனிதர்கள்.

லக்சனும் அவன்மனைவியும் ஐரோப்பாவில் பிறந்து வளர்ந்தவர்கள். லக்சனின் பெற்றோர் வாழும்நகரத்திலிருந்து நூறுகிலோமீட்டர் தொலைவில் அவன் மனைவியினது பெற்றோர் வாழும் நகரம். லக்சனுக்கு திருமணமாகி ஆறுமாதங்களாகின்றன. புதுமனைவியும் அவனுமாக லக்சனின் பெற்றோர்வீட்டிற்கு பக்கத்துத்தெருவில் வாடகைக்கு வீடெடுத்து தனிக்குடித்தனமாகினர். சுகன்யா ஆறுமாதங்களுக்குள் தன்தாயிடம் கணவன்பற்றி பலமுறைப்பாடுகளை முன்வைக்கலானாள். மகளின் குற்றச்சாட்டுகளுக்கு நேரிலும் தொலைபேசியிலுமாக பலஆலோசனைகளையும் புத்திமதிகளையும் புகட்டியிருந்தும் மகள் செவிமடுப்பதாயில்லை.

மாமியார் வீட்டிற்குப்பக்கத்தில் வீடு எடுக்கும்போதே சுகன்யா விற்கு பிடிக்கவில்லை தடுத்தும் லக்சன் கேட்கவில்லை. இருவருக்கும் தன், தன் தாய்வீட்டிற்கு பக்கத்திலிருக்கவே விருப்பம். அனால் அப்படி சாத்தியப்படவில்லை. சாத்தியப்படாது.

லக்சனுக்கு இரண்டு இளையசகோதரிகள் இவன்தான் ஆண்பிள்ளை மூத்தவன். பெற்றோர் செல்லமாகவே வளர்த்து படிப்பித்து ஆளாக்கியிருந்தனர். நல்லவேலையிலுமிருக்கின்றான். நட்புவட்டத்தினருடன் சேர்ந்து குடிக்கவோ கூடிக்கும்மாளமிடவோ பெற்றோர் அனுமதிப்பதில்லை. கடைச்சாப்பாடுகளைத்தவிர்த்து ஆரோக்கியத்திற்கு உகந்த வீட்டுச்சமையல் உணவுகளிலே வளர்ந்தவன். பெற்றோர் கைக்குள்செல்லமாகவும் செழிப்பாகவும் வளற்கப்பட்டவன்.

அவன் திருமணம்செய்த இடத்திலும் சுகன்யாவும் ஒரு அண்ணனுந்தான். தந்தையார் தண்ணியடித்து தண்ணியடித்து ஈரல் கரைந்து தண்ணியாலே இறந்து போனார். அண்ணனும் திருமணமாகி தொலைவில் வசிக்கின்றான். சுகன்யாவிற்கும் கணவனது நகரமே வதிவிடமானது.

“கலோ அம்மா… எனக்குச்சமைக்கத்தெரியாதாம் சீஸ்சையும் அரைச்ச இறைச்சியையும், எண்ணைய விட்டுத்தான் சமைக்கிறனாம், வேற சமையல் தெரியாதாம், அவர் என்னப்பாத்து எனக்கொண்டும் சமைக்கத்தெரியாதெண்டுறார்.”

“…..உனக்குச்சமைக்கத்தெரியாதெண்டு எனக்குதெதெரியும். நானும் சொல்லித்தரயில்ல…. எதுக்கும் நான் சம்பந்தியோட கதைக்கிறன் இதெல்லாம் குடும்பத்துக்குள்ள ஒருபிரச்சினையா பிள்ள….. இதெல்லாத்தையும் பெரிசாத்தூக்கிப்பிடிக்காத”

தாயார் மருமகனை நியாயவாதியாகவும் மகளை குற்றவாளியாகவுமே பார்த்து மகளைப்பணிய வைக்க பி ரயத்தனப்பட்டுக்கொண்டிருந்தார்.

சுகன்யாவின் தாய் பகுதிநேரவேலைதான் செய்துகொண்டிருந்தவர்.கணவன் இறந்தபின் தொலைக்காட்சி தொடர்நாடகங்களிலும் சுப்பர் சிங்கர் நிகழ்ச்சிகளிலும் மூழ்கி அமைதியையும், ஆறுதலையுங் கண்டு களிப்புற்று அடிமைப்பட்டு சோம்பேறியாகிவிட்டார். மகள் கல்லூரியிலும், வேலையிடத்திலும் கன்ரீனில் சாப்பிடுவதை வழக்கமாகக்கொண்டிருந்ததால் தனியொராளுக்கு வீட்டில் சமைப்பதை நிறுத்திவிட்டு தாயாரும் கடைச்சாப்பாட்டில் காலத்தை ஓட்டலானார். ஊபர் ஈற்றில் ஆடர் கொடுத்தால் உணவு வாசலுக்குவரும் வசதிக்குள் தாயும் மகளும் பழகியிவிட்டனர்.இதனால் மகளுக்கு தமிழ் உணவுவகைகள் சமைக்க தாய்கற்றுக்கொடுக்கவில்லை.மகள் கற்கவுமில்லை. ஐரோப்பிய சமையலையும் யூ ரியூப்பில் பார்த்துத்தான் சமைக்கப்பழகிக்கொண்டிருக்கின்றாள் சுகன்யா.

இரண்டுவாரங்கள் கழித்து சுகன்யா தனியாக தாய்வீட்டிற்கு வந்திருந்தாள்.நேராக எல்லா குறைகுற்றங்களையும் முன்வைத்து தாயும் மகளும் கலந்துரையாடியிருந்தனர்.

லக்சன் தன்தாய்வீட்டிற்கு அருகாமையில் வீடெடுக்கும் போதே குடும்பங்களுக்குள் முரண்பாடுகள் பிடுங்குப்பாடுகள் வரவும் வாய்ப்பிருக்குமென சுகன்யா புரிந்துகொண்டாலும் கதைத்துக்குழப்பக்கூடாதென்று நினைத்திருந்தாள். லக்சன் திருமணமாகி தனிக்குடித்தனம் வந்து ஆறுமாதங்களில், உடல்நிறையில் மூன்று கிலோ அதிகரித்திருந்திருந்தான், யீன்ஸ்சூகள் சேர்ட்டுகளும் அளவில்லாமல் போனதும், குடும்பமகிழ்ச்சியாலன்று சுகன்யாவின் சமையல்முறையென லக்சனின் பெற்றோரும் கண்டித்திருந்தனர்.

லக்சன் வீட்டுவேலைகளில் பங்கெடுப்பதில்லை. தினமும் வேலையால் வந்தால் தாய்வீட்டிற்குப்போய்த்தான் வீடு வருவதாகவும், சிலவேளை தனக்கு அறியத்தராமல் அங்கு சாப்பிட்டுவிட்டு வருவதாகவும் குற்றப்பத்திரிகைதயாரித்தாள். சுகன்யா. வேலையால்வந்து தான் தனியாகவீட்டுவேலைகளை செய்வதாகவும் லக்சன் உதவிசெய்வதில்லை என ஏகப்பட்ட முறைப்பாடுகள்.

"கலோஅம்மா...மாமா மாமியோட கதைச்சனீங்களா... என்ன சொன்னவ..."

'ஓம் பிள்ள அவை ஒருநாளைக்கு லஞ்சுக்கு வரச்சொன்னவை கதைக்கலாமெண்டு.லக்சன் குடிவெறி இல்லாத நல்லபிள்ளையெல்லா...இப்பிடிவந்தமையாது..... நீ சன்னதமாடாமலிரு பொறுமையிரு.

"இவர மாத்த ஏலாதம்மா...இவர் மாறமாட்டார். ஆம்பிளத்திமிர் அவரிட்ட இருக்கு எனக்குச்சரிவராது நான் விட்டுட்டு வரப்போறன்."

கருவிகளில் இயங்கிக்கொண்டிருக்கும் இன்றைய மனிதவாழ்வியக்கத்தில் யாவும் விரைவுபடுத்தப்பட்டிருக்கின்றன. அதற்கேற்ப மனிதர்களின் புரிதல்களின் வேகம் போதாமையால், பொறுமையற்ற நிலையிலெடுக்கும் வேகமுடிவுகள் விபரீதமாகிவிடுகின்றன. லக்சன் சுகன்யா குடும்பத்தினற்கு புரிதலுக்கும் தம்மைத் தாம் ஆள்வதற்குமான அறிவு பரிணாமமடைய ஆறுமாதங்கள் போதாது.

இருவர்களதுபெற்றோர்களும்காரணமோகாரணமின்றியோ, எதற்கும் சண்டைபிடிக்காமலும் அவசரப்படாமலும், பொறுமையையும் விட்டுக்கொடுப்பையும் பின்பற்றி அனுசரித்துப்போகும்படியும் வலியுறுத்தியிருந்தனர். அவர்கள் தம் காலத்தினதும் வயதினதும் அறிவினதும் ஆலோசனைகளை வழங்கியிருந்தனர்.

மகள்கணவனைவிட்டுப்பிரிவதைஎந்தத்தாயும்பெற்றோரும் அனுமதிக்கமாட்டார்கள்.இளையதலைமுறையினர் இன்றிதை இலகுவாக எடுத்துக்கொள்கின்றனர்.பெற்றோர்களால் பொறுக்கமுடியாதிருப்பினும் வலிந்து தம் எண்ணங்களையோ விருப்புகளையோ திணிக்கவியலாது.சகித்துப்போகவேண்டிய சமூக விஞ்ஞானச்சூழல். மாற்றம் என்பது விரைவில் நடக்குமென்று எதிர்பார்க்க இயலாதது.

வெகுவிமரிசையாக ஆடம்பரமாக நடாத்திமுடித்த திருமண நிகழ்வில் பிடிக்கப்பட்ட புகைப்பட அல்பம் ஒளிப்பட சீ. டி. இதுவரைக்கும் கைக்குவந்து சேரவில்லை. கலியாணவீடு செய்ய சுகன்யாவும் தாயும் வாங்கிய கடனும் இன்னும் அடைத்துமுடியவில்லை.அந்தப்பொறுப்பும் இருவற்கும் சுமையாகவிருக்க, மகளும் சுமையாகிவிடுவாளோ என்ற ஏக்கமும் பயமும் தாய்க்கு.

எத்தனைபேர் சேர்ந்து தீர்மானித்து, திட்டமிட்டு செலவழித்து நிகழ்த்திமுடித்த திருமணம். எவ்வளவு கற்பனைகளையும் கனவுகளையும் உள்ளடக்கி நிறைவுகண்ட இல்லறவாழ்வு. மனிதபாதுகாப்பு, சுதந்திரம், வசதிவாய்ப்புகள் இருந்தாலும் ஆணுக்குப் பெண்ணும்,பெண்ணுக்கு ஆணும் தேவையென்பதை எப்படி இவர்களுக்கு உணரவைப்பது. உணர்ந்துகொள்வதற்கு வயதும் அறிவும் போதாதா. அல்லது வேறுவழிகளை தெரிவுசெய்து விட்டார்களா. ஊகித்தறியவியலா புதிராகவே புலப்படுகிறது.

மகள் முடிவை மாற்றுவாளென்ற அசட்டு நம்பிக்கை தாய்மனதிலிருந்தாலும் அமைந்தவாழ்வை அழிப்பதாகவே அவள் மனதிற்

தோன்றியது.

◎

நேசன் மகதி

## சுவையான சுமைகள்

பால் பிடித்து
விளைந்து
வளைந்து தொங்கும்
நெல்மணிகளின்
வயிற்றில்
நிறைமாத கர்ப்பிணியின் சாயல்!

ச. சத்தியபானு

மெல்ல சிரிக்கும்
வெயிலுக்கு உதிர்ந்து
கொடுக்கிறது
உடல் மேல் வழியும்
நீர் துளிகள்
காய்ந்த மரத்தில்
உதிரும் சருகுகள்
போல வற்றிய நாவில்
வந்தமர்கிறது வேர்வை
துளிகள் சற்று உப்புடன்
உவகையாய் முகம்
சுழித்து ஏற்றாலும்
இன்னும் தொண்டை
குழியில்
உபகரித்துக்
கொண்டுதான் இருக்கிறது
நீர்க்குமிழிகள்....!



கவிஞர் சாய்சக்தி சர்வி– பொள்ளாச்சி

ஒரு நாளைக்கு இரண்டு முறையேனும்
அந்த பெயரை உச்சரித்துவிடுவாள்
அவள்
செல்லும் இடங்களிலெல்லாம்
அந்த பெயரை தவறாமல் எழுதிபார்ப்பவள்
யாரும் பார்க்காதவண்ணம் அழித்துவிடுவாள்
எப்போதும் அந்த பெயருடன் உரையாடலை
தொடங்குபாவள்
நேரங்கள் கடந்தும் உரையாடிக்கொண்டே இருப்பாள்
இன்று பெயருக்கு உருவத்தை
உருவாக்கிகொண்டிருக்கிறாள்
கால முகத்தின் அடையாளங்களைக்கொண்டு



# S.சுடர்நிலா கவிதைகள்

**படிக்கட்டு**

பேரமைதியைக் கிழித்து படிக்கட்டுக்களை எட்டி
உதைக்கின்றன பாதணிகள்
நேற்றைய இரவை நினைவுபடுத்துவதாய் காலடியில்
மை தீர்ந்த பேனா

துரித வாசிப்புகளில்
அரசியல்
மெய்யியல்
பொருளியலென
எல்லாம் கலந்த புதிய இயல் ஒன்றின் உருவாக்கம்

விடுதியின் பொது இடங்களெல்லாம்
எழுதிக்கொண்டிருந்தன இன்றைய
பரீட்சைகளை

அமர்வதற்கு இடமின்றிய என்னை
இறுதியில் பற்றிக் கொண்டன அநாதையாய்
விடப்பட்டிருந்த படிக்கட்டுக்கள்..
இரைச்சலில் உறக்கம் தொலைத்து இரவெல்லாம்
விழித்திருந்தன என்னோடு தான்

இன்று
சுருட்டிய வினாத்தாளோடு
அவசரமாய் அறை நகர்கின்றன என் கால்கள்..

பரீட்சை வினாத்தாளை எதிர்பார்த்து அதே இடத்தில்
ஆவலாய்க் காத்திருக்கின்றன
படிக்கட்டுக்கள்

**பசி**


பருத்த உடலில் தொந்தி வயிற்றுடன் கடைப்பீப்பாய்
எச்சிற் சொற்றை விழுங்க ஆவென்று திறந்திருக்கும்
அதன் வாயில் பசியின் வேகம்..

சதையற்ற எலும்புத்துண்டுகளின் சுவட்டில்
கடைவாயில் வழியும் உமிழ்நீராய்க்
கரைந்தொழுகுகின்றன சுவைநரம்புகள்..

யாரோ தின்றெஞ்சிய உணவில் கலந்திருக்கும்
உப்பும் உறைப்பும்
பீப்பாயின் நாவுகளில்
சுவற வேண்டுமென்றில்லை

அள்ளி வீசும்
உணவுக் கழிவுகளில் தீர்கிறது அதன் கொடும்பசி..

இரைப்பை நீக்கப்பட்ட வயிற்றில் செரிக்காது
தேங்கியிருக்கும் அழுகிய உணவை அளைந்தள்ளும்
பணிப்பெண்ணிண் பசியும் அடங்கியிருக்கும்
எச்சிற் தட்டை வழித்து எட்டி நின்று விசிறிப்
போகும் இழிக்கரத்தால்...



க. புனிதன்

# ஹைக்கூ

பக்கத்து வீட்டு
வைக்கோல் போர்
சொந்தம் கொண்டாடும் சேவல்

௳

பரிசலில் செல்லும்
வைக்கோல் போர் மேல்
ஒரு வண்ணத்து பூச்சி

௳

உழவனின்
கவிதை தொகுப்பு
வைக்கோல் போர்

௳

மன்னனுக்கு மற்போர்
உழவனுக்கு
வைக்கோல் போர்

௳

தினமும் அரண்மனையை
பெருக்கும் உழவன்
வைக்கோல் போர் தாளடி

௳

வைக்கோல் போர் நிறமற்றது
அதன் மேல் நிறமாய்
வண்ணத்து பூச்சி

௳

வைக்கோல் போர் மேல்
சிறுவன் விட்ட
அறுந்த பட்டம்

௳

வெயிலில் ஒளிரும் வைரம்
வைக்கோல் புல்லை
எடுத்து செல்லும் பறவை

மருதூர் மௌஜூன்

# ஏழையின் வாய்மையும் வாழ்வியலும்

உண்ண உணவின்றி
உழைத்திட வளமின்றி
கூலிக்குத் தொழில் செய்து
கிடைக்கின்ற வருமானம்
ஒரு வேளை உணவுக்கே
போதாத போது பசியோடு
போராடி

வறுமையில் வாழுகின்ற
ஏழையான மக்களுக்கு
வாழ்வியல் விழுமியங்களை வாய்மையோடு
காப்பாற்றி வாழ்ந்திடும்
வாய்ப்புக்கள் அரிதாகிப்
போகின்ற தருணங்கள்
ஏராளம்



வாழ்வியலில்
வாய்மை தவறியதால்
வழக்காடு மன்றத்தில் சட்டத்தின்
முன் நிறுத்தி இரும்புக்
கரங்கொண்டு இறுக்கிப் பிடிப்பதெல்லாம் ஏழை
எளிய மக்களைத்தான்

ஆடம்பர வாழ்வுக்காய்
அற்பமான சுகத்துக்காய்
அடுத்தவர் சொத்தை
அபகரித்து உயர்ரக வாகனத்தில்

சீரும் சிறப்புமாய் கனவான்
வேடமிட்டு அரிதாரம் பூசி நடிக்கின்ற நயவஞ்சகர்
வாழுமிந்த உலகமிது


சட்டம் இவர்களுக்கு
சட்டைப்பைப் பணத்துக்கு விலையாகிப் போகிறது

வாழ்வியலின் வளமான
வாழ்வுக்காய் விலைபேசி
விற்கின்ற சட்டத்தின்
காவலர்களும் நிறைவான உலகமையா!

◎

# ஒருபக்கம். மறுபக்கம்?

கே.எஸ்.சுதாகர்



முப்பத்தி இரண்டு வருடங்களில் ஒருவரால் என்னவெல்லாம் செய்ய முடியும்? ஒரு வேலையில் அமர்ந்து படிப்படியாக முன்னேறி மனேஜராகலாம்; திருமணம் முடித்து பிள்ளைகள் பெற்று பேரப்பிள்ளைகளையும் கண்டடையலாம்; ஒரு அழகான வீடு கட்டி, முன்னே வாகனங்களை நிறுத்தி வைக்கலாம். இப்படி மூச்சு முட்டிக் களைத்து விழும்வரை ஒருவரால் அடுக்கிக்கொண்டே போகலாம்.

ஆனாலும் இந்தக் காலப்பகுதியில் எத்தனையே மனிதர்களால் தமது சொந்த ஊரை ஒருதரமேனும் பார்க்க முடிந்ததில்லை.

இரண்டாயிரத்து இருபத்தி மூன்றாம் ஆண்டு அமலனுக்கு அந்தச் சந்தர்ப்பம் கிட்டியது. இந்துசமுத்திரத்தின் முத்து அவனை வரவேற்றது. அங்கே அந்த முத்தின் வடபகுதியில் அமலனுக்கு ஒரு வீடு முன்னொரு காலத்தில் இருந்தது.

அவனும் மனைவி தாரிணியும், மகள் சௌம்யாவும் அதைப் பார்ப்பதற்காகச் சென்றார்கள். அமலனுக்கும் தாரிணிக்கும் ஊரைப் பார்ப்பது சொர்க்கம். ஆனால் அவுஸ்திரேலியாவில் பிறந்து வளர்ந்த சௌம்மியாவிற்கு வெறுங்காணியைப் பார்ப்பதில் என்ன சந்தோசம் இருக்கப் போகின்றது? இருக்கின்றது. சிறுவயது முதல் உணவு ஊட்டுவதுபோல், தாம் பிறந்து வளர்ந்த ஊரைப்பற்றி தம் மூதாதையர் பற்றி, சிறுகச்சிறுக சொல்லியே அவளை வளர்த்திருந்தார்கள். தாங்கள் பிறந்து வளர்ந்த வரண்ட பூமியுடன், இயற்கை எழில் கொஞ்சும் இலங்கையின் ஏனைய பிரதேசங்களையும் சுற்றிக் காட்டினால் அவள் மகிழ்ச்சி கொள்வாள் அல்லவா?

அமலன் இலங்கையை விட்டுப் புலம்பெயர்ந்த போது, அன்றிருந்த நிலைமையை எண்ணிப் பார்த்தான். குலை நடுங்கிய காலங்கள் அவை. பல்கலைக்கழகத்தில் படித்த கல்வியின் அடிப்படையில், அவன் புலம்பெயர்ந்து போயிருக்கலாம். அப்பொழுது 'ஸ்கில் மைகிரேஷனில்' பலரும் கனடா, அவுஸ்திரேலியா போன்ற பல நாடுகளுக்கும் போய்க் கொண்டிருந்தார்கள். பாழாய்ப்போன 'அந்த ஒரு சம்பவம்' நடந்திருக்காவிட்டால், அமலனும் அப்படித்தான் ஏதோ ஒரு நாட்டுக்குப் போயிருப்பான். கடைசியில் நடந்தது என்னவோ 'அகதி' நாடகம்' தான்.

மெல்பேர்ணிலிருந்து கொழும்பு சென்று ஹோட்டலில் ஒருநாள் தங்கிவிட்டு, மறுநாள் காலையில் புறப்பட்டுக் கொள்வதெனத் திட்டம் போட்டிருந்தார்கள்.

அவர்களின் பயணம் மேற்கிலிருந்து புறப்பட்டு, மத்திய மாகாணமான மலையகம், பின்னர் வடமத்திய மாகாணம், இறுதியாக வடக்கு மாகாணம் என விரிந்திருந்தது.

மொத்தம் ஒன்பது நாட்களில், ஒரு சூறாவளியைப் போல சென்று முடிப்பதென திட்டம் போட்டிருந்தார்கள்.

சௌம்யா இணையவழியில் இந்தப் பிரயாணத்திற்கான முழு ஏற்பாடுகளையும், ஹோட்டல்களில் தங்குவதற்கான பதிவுகளையும் செய்திருந்தாள். பிரயாண முகவரின் பதிவின்படி வாகன ஓட்டியின் பெயர் ரஞ்சன் எனவும், அவர் தனக்குரிய தங்குமிட வசதிகளையும் உணவையும் பார்த்துக் கொள்வார் என்றும் இருந்தது. ரஞ்சன் ஒரு தமிழராக இருக்கக்கூடும் என அமலனும் மனைவியும் ஊகித்தார்கள்.

காலை எட்டு மணியளவில் ரஞ்சன் வந்துவிட்டான். நேர்த்தியான ஆடைகளில் வாட்டசாட்டமான தோற்றம் கொண்டிருந்தான் அவன். தோற்றம் முப்பது வயதிற்குள்தான் இருக்கும் என்று சொல்லியது. இவர்களின் பொதிகளை பூற்லிட்டிற்குள் வைப்பதற்கு கூடமாட உதவி செய்தான். பூற்லிட்டிற்குள் ரஞ்சனின் பொதி ஒன்று ஏற்கனவே குந்தி இருந்தது.

அமலன் சாரதிக்குப் பக்கத்திலும், மனைவியும் மகளும் பின்புறமாகவும் ஏறிக்கொண்டார்கள்.

"நீங்கள் தமிழா?" அமலன் பேச்சை ஆங்கிலத்தில் ஆரம்பித்தான்.

அவன் புன்முறுவல் செய்துவிட்டு, "இல்லை. ரஞ்சன்... ரஞ்சன் விஜயரட்னே" என்றான்.

"தமிழ் தெரியுமா?"

"கொஞ்சம்... கொஞ்சம்... ஆனா ஆங்கிலம் கதைப்பேன்."

"எனக்கும் சிங்களம் அப்பிடித்தான். கொஞ்சம் கொஞ்சம்... மனைவிக்கும் மகளுக்கும் அதுவும் தெரியாது."

"ரஞ்சன் என்ற பெயரில் தமிழர்களும் இருக்கின்றார்கள்."

“தெரியும்.”

`கூடுதலா தமிழ்ப்பெயர்களில் இருந்து கடைசி எழுத்தை நீக்கிவிட்டால், சிங்களப்பெயர்கள் வந்துவிடும். விக்கிரமசிங்க, நவரத்தின, குலசேகர, குணசிங்க, மகிந்த... ‘ சொல்ல நினைத்தான் அமலன். ஆனால் சொல்லவில்லை. மறுதலையாக அந்தப் பெயர்களுக்கு ஒரு எழுத்தைச் சேர்த்தால் தமிழ்ப்பெயர்கள் வந்துவிடும் என்றும் சொல்லலாம். நீக்குவதா? சேர்ப்பதா? நிம்மதியாக வாழ்ந்துவிட்டாலே போதும்.

வாகனம் மெதுவாக ஓட்டம் பிடிக்கத் தொடங்கியது.

கொழும்பு நகரம் - நகரத்துக்கு உரித்தான கட்டடங்கள், சன நெரிசல், வாகனச் சத்தங்கள், மழைக்கு அடங்கிப்போகும் புகை மண்டலங்கள். இவை எல்லாவற்றையும் தாண்டி, சுவடுகளை விழுங்கித் துப்பி விரைந்தோடுகின்றது வாகனம்.

பனிப்புகாரினுள் பதுங்கிக் கிடந்த - சாலையோரத்துப் பெட்டிக்கடைகளும், பழங்காலத்துக் கட்டடங்களும் ஒன்றையொன்று போட்டி போட்டுக்கொண்டு பாய்ந்து நகருகின்றன. பெட்டிக்கடைகளில் கலர் கலராக இளநீர்க்குலைகள், வாழைப்பழங்கள், கொய்யாப்பழங்கள். இடையிடையே அரையும் குறையுமான ஆடைகளில் சில மனிதர்கள்.

இந்தக் காட்சிகள் எல்லாம் தாரிணிக்கும் சௌமியாவுக்கும் புதுமை. தாரிணி இலங்கையில் பிறந்து வளர்ந்திருந்தாலும், வடக்கிற்கு அப்பாலுள்ள காட்சிகளை தரிசிப்பது இதுவே முதல் தடவை.

இரண்டு பக்கங்களும் சமதரையாகத் தோற்றம் கொண்ட பூமி, ஏற்றத்தாழ்வுகள் எதிலுமுண்டு என்பதுமாப்போல், ஒருபுறம் மேடாகவும், மறுபுறம் பள்ளமாகவும் உருக்கொள்கின்றன. வனப்பு கூட செழிப்பாகி ஏறுமுகம் கொள்கின்றது.

ரஞ்சன் கேட்கின்ற கேள்விகளுக்கு மாத்திரம் பதில் சொல்லுவான். மற்றும்படி சாந்தமே உருவானவன். கொஞ்சம் கதை பேச்சுக் குறைவு.

`யாரும் கேட்டாலொழிய வாய் திறந்து எதுவும் பேசக்கூடாது' என்று முதலாழி சொல்லிவிட்டிருப்பாரோ?

“ரஞ்சன் உங்களுக்கு இப்பென்ன வயசு?”

“முப்பது...”

“எங்கட மகள் செம்யாவிற்கு இருபத்தெட்டு...” பின்னால் இருந்த தாரிணி சொன்னாள். சௌம்யா அம்மாவின் கையைப் பிடித்து அமர்த்திக் கிள்ளினாள்.

காரிற்குள் எந்தவிதமான பாட்டுக்களும் ஒலிக்கவில்லை. இடையிடையே யாருடனோ ரெலிபோனில் கதைத்துக் கொண்டிருந்தான் ரஞ்சன்.

“தம்பிக்கு பாட்டு விருப்பமில்லையோ?” பொதுவாக கார் ஓடுபவர்கள் பாட்டை ஒலிக்கவிடுவார்கள் என்ற யோசனையில் கேட்டான் அமலன்.

“நீங்கள் வெளியே பார்த்துக்கொண்டு வரும் காட்சிகளை அது குழப்பிவிடும். உங்கள் கவனத்தைப் பாட்டு திசை திருப்பிவிடும். உங்களுக்கு விருப்பம் என்றால் போடுகின்றேன்.”

“இல்லைத் தம்பி வேண்டாம். சௌம்யா உனக்கேதேன் பாட்டு வேணுமா?”

அவள் `இல்லை' என்று தலையாட்டினாள்.

`தம்பி கலியாணம் செய்திட்டீரோ?' கேட்டறியலாம் என நினைத்தான் அமலன். ஆனால் எல்லாவற்றிலும் முந்திரிக்கொட்டை போல முந்திக் கொள்கின்றானே என அவன் நினைக்கக்கூடும் என்று விட்டுவிட்டான்.

“தம்பியின்ரை சொந்த ஊர்?” மனசு விட்டால்தானே! கேட்டான் அமலன்.

“நுகேகொட...”

“எட... நான் கடைசியா வேலை செய்த இடத்திற்குக் கிட்ட.”

ரஞ்சன் திரும்பி அமலனை உற்றுப் பார்த்தான்.

“நாவல திறந்த பல்கலைக்கழகத்திலை தொண்ணூறு தொண்ணூற்றி ஒண்டு மட்டிலை வேலை செய்தனான். அப்ப நீர் பிறந்திருக்கமாட்டீர்!”

“அப்பிடியா!” அதிசயித்தான் ரஞ்சன்.

அமலன் திரும்பி மனைவியையும் மகளையும் பார்த்துவிட்டு, “நுகேகொடைக்குக் கொஞ்சம் தள்ளி, லக்மினி, இகாரா எண்டு இரண்டு பிள்ளைகள் அப்ப அடிக்கடி படிக்க வருவினம். லக்மினி எனக்குப் பிடிச்ச மாணவி. அவையின்ரை ஊரின்ரை பெயரை இப்ப நான் மறந்திட்டன் தம்பி...” என்று ரஞ்சனின் காதிற்குள் சொன்னான். ரஞ்சன் அதற்கு ஒன்றும் சொல்லவில்லை. அவனின் உள்மனம் ஏதோ ஒன்றை ஆழ அசை போட்டது.

கடைசி உரையாடலின் பின்னர் காரிற்குள் அமைதி நிலைகொண்டது.

கார் வேகமாகப் போய்க் கொண்டிருந்தது. என்றாலும் மனிதமனத்திற்கு ஈடு குடுக்க முடியுமா என்ன... அமலனின் சிந்தனைகள் பின் நோக்கி நகர்ந்து தொண்ணூறாம் ஆண்டுகளில் சஞ்சரிக்கின்றது.

௪

அப்பொழுது அமலன், நாவல என்ற இடத்தில் இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் கொம்பியூட்டர் பிரிவில் செயல்முறைப் பயிற்றாசிரியராக வேலை செய்து கொண்டிருந்தான். கணினி ஆய்வுகூடத்தில், பாடசாலைப் படிப்பை முடித்தவர்கள் தொடக்கம் வேலை செய்பவர்கள் வரையில், வயது பேதமின்றிப் படித்து வந்தார்கள். அதனால் ஆய்வுகூடம் பல்கலைக்கழக நேரத்திற்குப் புறம்பாக, காலை ஏழரை மணியில் இருந்து மாலை ஐந்தரை வரை திறந்திருக்கும்.

கொம்பியூட்டரின் அடிப்படைக்கல்விதான் அப்போது அங்கே சொல்லிக் குடுக்கப்பட்டது. மாணவர்களின் வரவைப் பதிய வைப்பது, அவர்களுக்குத் தெரியாததைச் சொல்லிக் குடுப்பது என பாடவிதானம் மட்டுப்படுத்தப் பட்டிருந்தது.

பல்லின மக்களும் வந்துபோகும் இடத்தில், அமலனுக்குப் பிடித்த பெண்ணாக லக்மினி இருந்தாள். பள்ளிப் படிப்பில், தரம் பன்னிரண்டை முடித்தவுடன் எதிர்காலக் கல்வியின் ஒரு அஸ்திவாரமாக கணினி அறிவை வளர்த்துக் கொள்ள அவள் அங்கே வந்திருந்தாள். அவளைவிட சற்று வயசான தோற்றத்தில் இன்னுமொரு பெண்ணும் அவளுடன் கூட வந்து போனாள்.

லக்மினி வரும் நாட்களில் அமலன் குதூகலமாக இருப்பான். அனேகமாக வாரத்தில் இரண்டு நாட்கள் அவள் வருவாள். ஆரம்பத்தில் அவளைப் பார்த்தபோது, அவள் தமிழோ சிங்களமோ என்ற மயக்கம் அமலனுக்கு இருந்தது. இள வயதில் சிங்களப் பெண்ணுக்கும் தமிழ்ப் பெண்ணுக்கும் வேறுபாட்டைக் காண முடிவதில்லை.

லக்மினி வரும் நேரமாகப் பார்த்து, அமலன் மேசையில் போய் அமர்ந்து விடுவான். ஏதோ பிஷி போல தன்னைக் காட்டிக் கொள்வான். வெளியே கலகலப்பாக வரும் அவர்கள் கொம்பியூட்டர் றூமிற்குள் வந்ததும் அமைதியாகி விடுவார்கள். உள்ளே வந்ததும் இருவரும் தமது அறிமுக அட்டைகளை நீட்டுவார்கள். இருவரது உடலில் இருந்தும் ஒரேவிதமான நறுமணம் வீசும். அமலன் முதலில் லக்மினியின் அறிமுக அட்டையை விட்டுவிட்டு, மற்றவளிடம் வாங்கிக் கொள்வான். அவளின் பெயரைப் பதிந்து கொள்வான். ஆனால் அவள், லக்மினி வரும்வரைக்கும் பிசின் பூசி ஒட்டினமாதிரி லக்மினியின் பக்கத்திலேயே நிற்பாள். அமலன் லக்மினியின் அறிமுக அட்டையை வாங்கி அதில் இருக்கும் அவளின் படத்தைப் பார்ப்பான். பின் லக்மினியை உற்று உற்றுப் பார்ப்பான். அவர்கள் இருவருக்கும் அமலனின் செய்கை சிரிப்பாகவிருக்கும். உதட்டுக்குள் சிரித்துக் கொள்வார்கள். இருவரினதும் வதிவிடங்கள் சிங்களக்கிராமமான நுகேகொட என்றிருந்தது. பின் இருவரும் அங்கிருந்தபடியே கொம்பியூட்டர் அறையை நோட்டம் விடுவார்கள். எங்கே இரண்டு கொம்பியூட்டர்கள் அருகருகாக ஆளில்லாமல் இருக்கின்றதோ அங்கே போய் இருந்து கொள்வார்கள்.

லக்மினி படிப்பதற்கான எல்லாவிதமான ஆயத்தங்களுடனும் கரிசனையுடனும் வருவாள். வரும் நாட்களில் அழகழகான ஆடைகளுடன், கொஞ்சம் ஸ்ரைலுமாக இருப்பாள். தலை அலங்காரம்தான் அவளின் தலைக்கு கொஞ்சம் பெரிசாக பாரமாக இருப்பது போல் தோன்றும். `டயானா' வெட்டு போல், அதற்கு இன்னும் கொஞ்சம் பூசி மெழுகி சோடனைகள் செய்திருப்பாள். கொஞ்சம் வசதியான குடும்பத்துப் பெண் போலவே தோற்றம் காட்டினாள். அவளின் களங்கமற்ற புன்னகையும் நாணமும் கிளிப்பேச்சும் வசீகரிப்பவை. மற்றவள் அங்கு ஏன் வருகின்றாள் என்பது அமலனுக்கு இன்னமும் புரியவில்லை. கூடத் துணைக்கு வருகின்றாளோ என்ற சந்தேகம் அமலன் மனதில் எழும். லக்மினியுடன் பார்க்கையில் அவளது நண்பியின் கணினி அறிவு சுத்த சூனியம். கவர்ச்சியான ஆடைகளுடன், மார்புகள் தள்ள, ஆண்களின் மனதைக் கிளறும் `பம்பளிமாஸ்' வனப்புக் கொண்டவள் அவள்.

மேசையில் இருந்தபடியே லக்மினியின் அறிமுக அட்டையை எடுத்து விடுத்துவிடுத்துப் பார்ப்பான் அமலன். படத்தில் கொஞ்சம் பெரிய தோற்றமாக இருக்கும் அவள், நிஜத்தில் மெல்லீசாக இருப்பதைக் கண்டு பிடித்தான். அங்கிருந்தபடியே எல்லா மாணவர்களையும் சுற்றிப் பார்த்து நோட்டமிடுவான் அமலன்.

லக்மினி அங்கிருந்தபடியே அமலனுக்குக் கண் எறிகின்றாள். ஏதோ புரியவில்லை என்பதை அமலன் தெரிந்து கொண்டான். கொஞ்ச நாட்களாக லக்மினியுடன் வரும் பெண்ணுடன், தன் சக நண்பன் மணி மினைக்கெடுகின்றான். இப்போதுகூட மணி அந்தப் பெண்ணுக்கு ஏதேதோ சொல்லிக்குடுத்து, தொட்டுத்தொட்டுக் கதைத்து சிரித்தபடி இருக்கின்றான். அவளின் உடல் அசைவுகளில் குப்புற விழுந்துகொண்டான் மணி. லக்மினி, மணியிடம் தனது சந்தேகத்தைக் கேட்காமல், தன்னையே பார்த்துக் கொண்டிருப்பது அமலனுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கின்றது.

கணினி சம்பந்தமான கேள்விகளுக்கு பதில் சொல்லும்போது, லக்மினி ஆவலுடன் தன் குறும்பு நிறைந்த கண்களால் அமலனை நோக்குவாள். அமலனும் அவளுக்குப் புரியும் வகையில் மிகவும் இலகுவாகச் சொல்லிக் குடுப்பான். ஒரு காலத்தில் மிகவும் கெட்டித்தனமாக வரக்கூடிய பெண் என்பதை அவளது அறிவுபூர்வமான பதில்கள் சொல்லின.

ஒருநாள் அமலன் மேசையில் வந்து அமரும்போது, மணியும் பக்கத்தில் வந்து இருந்து கொண்டான். லக்மினியும்

தோழியும் வந்து, தங்களைப் பதிவு செய்துவிட்டுக் கொம்பியூட்டர்களில் போய் அமர்ந்துகொண்டதும், மணி பேச்சைத் தொடங்கினான்.

"மச்சான்... இகாரா படு சுப்பரடா"

அமலனுக்கு ஒன்றும் புரியவில்லை. மணியின் முகத்தைப் பார்த்தான்.

"இகாரா எண்டு சொல்லுறது ஆர்... உன்ரை கேர்ள் ஃபிரண்டின்ரை ஃபிரண்ட் தான்."

"உது எத்தினை நாளா நடக்குது மணி?"

"நேற்று அரைநாள் லீவு போட்டிட்டு எங்கை போனனான் தெரியுமோ? இகாராவின்ரை வீடு வரைக்கும், பஸ்சிலை அவளோடை பக்கத்திலை இருந்து போனனான்."

"பிறகு?"

"நுகேகொட வரைக்கும் அவளோடை போட்டு, அவள் பஸ்சிலையிருந்து இறங்கி தன்ரை வீட்டை போக, நான் அங்கையிருந்து பஸ் ஏறி என்ரை வீட்டை போனனான்."

"நீ இஞ்சை படிப்பிக்கிற ஒரு மாஸ்ரர் எண்டதை மறந்து போனாய் போல! உது இக்கணம் எங்கை போய் முடியப் போகுதோ? அது சரி... நீ அவளோடை இருக்கேக்கை லக்மினி எங்கை இருந்தவள்?"

"அவளை முன்னுக்குப் போய் இருக்கச் சொல்லிக் கலைச்சுப்போட்டு, நானும் இகாராவும் பின் சீற்றிலை இருந்தனாங்கள். மச்சான் நான் இண்டைக்கும் அரை நேரத்தோடை வேலைக்கு முழுக்கு. நீயும் ஒரு அரை நாள் லீவைப் போடன்..."

"நீ என்ன சொல்லுறாய்?"

"இரண்டு பேரும் லீவைப் போட்டிட்டு, ஜாலியா இருப்பம் எண்டு சொல்லுறன். நான் இகாராவோடை, நீ லக்மினியோடை. அவள் பாவமல்லே..."

"மச்சான் இந்த நேரத்திலை இந்த நாட்டிலை என்ன நடந்து கொண்டு இருக்குது எண்டதை யோசிச்சுப் பாத்தியா? பிடிபட்டியோ சங்கறுத்துப் போடுவான்கள். பெம்பிள பாவம் உன்னைச் சும்மா விடாது. நான் உதுக்கெல்லாம் வரமாட்டன்."

அன்றிலிருந்து மணியின் நாடகம் அவ்வப்போது தொடர்ந்தது. அமலனை தினமும் அரித்துக் கொண்டு இருந்தான். அருக்கூட்டினான். அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகருமல்லவா? மணி அமலனுக்கு அடிமேல் அடி வைத்தான். அம்மி தகர்ந்தது. மனசு நெகிழ்ந்தது.

இரண்டு நாட்கள் கழித்து, இகாராவும் லக்மினியும் முன்னே செல்ல மணியும் அமலனும் கோழிக்கள்ளர்கள் போல பதுங்கிப் பதுங்கி பின்னாலே சென்றார்கள். திரும்பிப் பார்த்த லக்மினியின் கண்கள் அகல விரிந்தன. நான்கு பேரும் நுகேகொட பஸ்சினுள் ஏறிக்கொண்டார்கள். மணியும் இகாராவும் பின்புறமாகச் சென்று ஒரு மூலையில் அமர்ந்துகொண்டார்கள். அமலன் லக்மினியின் தோளில் தட்டிவிட்டு மற்ற மூலையில் போய் மசுந்தினான். லக்மினி பஸ்சின் நடுவில் கம்பியைப் பிடித்தவாறே நின்றிருந்தாள். "இவள் ஒரு பால்குடி" சொன்னவாறே இகாரா போய் லக்மினியை இழுத்துவந்து அமலனிடம் தள்ளிவிட்டாள்.

அருகே நெருக்கிக்கொண்டு, ஆளை ஆள் உரசியபடி இருக்கும் போதுதான் லக்மினியை அமலனால் வடிவாகப் பார்க்க முடிந்தது. அவனை விட நாலைந்து அங்குலங்கள் உயரத்தில் பதிவாக இருந்தாள் அவள். மெல்லிய தேகம் என்றாலும் அவயவங்களின் அழகுக்குக் குறைவில்லை. நீள்வட்ட முகம். அன்பைத் தாராளமாக அள்ளித்தரும் அகன்ற கண்கள். மெல்லிய உதடுகள். வலது பக்கத்து உதடுகளின் முடிவில் தேன் குடிப்பதற்கு ஏதுவாக ஒரு சிறு மச்சம். கூரிய மூக்கு. பளிங்கு போன்ற கன்னங்கள், ஒரு மாசு மறு கிடையாது. கண்ணாடியில் பட்டுத் தெறிக்கும் சூரிய ஒளியில் காதுகள் மென்சிகப்பாகத் தோன்ற, சோணைகளில் ஜிமிக்கிகள் நடனமாடுகின்றன. அவள் அழகில் தனது மனதைப் பறிகொடுத்து மயங்கிக் கிடந்தான் அமலன்.

"ஒய ஹொந்த லஸ்ஷனய்..."

அவள் சிரித்தாள்.

"லக்மினி என்றால் என்ன அர்த்தம்?"

"இலங்கையின் முத்து..." அவள் குரலில் பதட்டம் தெரிந்தது.

"இலங்கை, இந்து சமுத்திரத்தின் முத்து. நீ இலங்கையின் முத்து..." அவன் குரலில் பரவசம்.

அவள் வெட்கத்தில் குழைந்தாள். இரண்டு கைகளையும் வயிற்றின் முன்பாகம் இடுப்புக்குக் குறுக்காக மடித்துக் கட்டியிருந்தாள். அமலனின் மனம் மடை திறந்த வெள்ளம் போல் பாய, லக்மினியின் கையை மெதுவாகப் பற்றினான். அக்கணத்தில் அவள் உடல் குலுங்கி ஒரு தடவை நடுங்கியதை அவனால் உணர முடிந்தது. லக்மினி அவனைத் திருப்பிப் பார்த்துவிட்டு முகத்தை வேறு திசை நோக்கி வைத்திருந்தாள். பொய்க் கோபத்தில் அவளின் முக அழகு மிளிர்ந்தது. சலனமற்ற அவள் மனம் எதையோ நினைத்து சஞ்சலம் கொள்கிறது.

அமலன் மணியைக் கடைக்கண்ணால் பார்த்தான். அவனும் இகாராவும் ஜாலியாக இருப்பதாகப் பட்டது. இகாரா கண்களை மூடி, மணியின் சுகத்தில் மோனநிலை கொண்டிருந்தாள்.

லக்மினியை மெதுவாக அணைத்தவன், அவளைப் பக்கப்பாட்டிற்குத் திருப்பினான். திரும்ப மறுத்த அவளைக் கொஞ்சம் பலாத்காரமாக இழுத்து அணைத்து, அவள் கன்னங்களில் முத்தமிட்டான். அவள் கண்கள் கலங்கி, இமைகளில் நீர் கசிந்திருந்ததைக் கண்டதும், திடீரென அவள் மீதான பிடியைத் தளர்த்தினான்.

எல்லாப் பெண்களும் ஒரே மாதிரி இருப்பதில்லை. ஒன்றாக வந்தாலும், சினேகிதர்களாக இருந்தாலும் இயல்புகள் வேறு வேறுதான் என்பதை உணர்ந்தான் அமலன்.

பஸ்சை விட்டு இறங்கியதும், லக்மினி அமலனைத் பார்க்காமலே விறுவிறென்டு போய்விட்டாள். இகாரா தான் இருவருக்கும் கை காட்டிவிட்டுச் சென்றாள்.

அதற்கடுத்த கிழமை இருவரும் படிக்க வரவில்லை. இனிமேல் வரமாட்டார்கள் என அமலனும் மணியும் நினைத்தார்கள். ஆனால் மறுவாரத்திலிருந்து அவர்கள் மீண்டும் வரத் தொடங்கினார்கள். ஒன்றாக வந்தவர்கள் இருக்கைகளில் தள்ளித்தள்ளி அமர்ந்தார்கள். எதையும் முகத்தில் வெளிக்காட்டிக் கொள்ளாமல் இருவரும் படித்துவிட்டுப் போனார்கள்.

படிப்பு முன்புபோலத் தொடர்ந்தது. மணியினதும் இகாராவினது நாடகமும் இரகசியமாகத் தொடர்ந்தது. அமலன் ஒரு நாளில் தனது விளையாட்டை முடித்துக் கொண்டான்.

நாட்களாக லக்மினியின் முகத்தில் மீண்டும் புன்னகை அரும்பியது. அந்தப் புன்னகையில்கூட ஒரு ஏக்கம் இருந்ததாகவே அமலனுக்குத் தெரிந்தது. நிறையக் கேள்விகள் கேட்பாள். அமலனும் சளைக்காமல் பதில் சொல்லிக்கொண்டே வந்தான். குரங்கு மனம் இன்னுமொருநாள் அவளின் கைகளைப் மெதுவாகப் பற்றிய போது. அவள் கைவிரல்கள் படபடத்து மேசையில் தாளம் போட்டன. அமலனின் மனம் குற்றவுணர்வினால் நிலைகொள்ளாமல் சுழல்கின்றது. 'காதலை மெதுவாகவே வளர்த்துக் கொள்ள வேண்டும்' என்பதைப் புரிந்து கொண்டான் அமலன்.

நாட்கள் நகர்ந்தன.

யூன் 21, ஒரு வெள்ளிக்கிழமை காலை தான் JOC (Joint Operations Command ) குண்டுவெடிப்பு நடந்தது. இராணுவத்தினரின் இணைந்த தொழிற்பாடுகள் அலுவலகத்திற்கு முன்னால் நடந்த கார்க் குண்டு வெடிப்பில் அறுபதிற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டிருந்தார்கள். அன்று வேலை முடித்து வீட்டுக்குத் திரும்பிப் கொண்டிருந்தபோது அமலன் இராணுவத்தினரிடம் பிடிபட்டான்.

புத்த விகாரையைக் கடந்து, பாதையில் அரண் அமைத்து வாகனங்களை மறித்து சோதனையிட்டுக் கொண்டிருந்த இராணுவத்தினர், அமலனைத் தடுத்து நிறுத்தினார்கள். வேலை செய்வதற்கான அடையாள அட்டையைக் காட்டியபோது, அதைப் பறித்துத் தூக்கி வீசிவிட்டு, கன்னத்தில் அறைந்து வாகனத்தில் ஏற்றினார்கள். உள்ளே அவனைப் போல பலரும் குந்தி இருந்தார்கள். இவை எல்லாவற்றையும் நிஷ்டை கலைந்து நியாயம் கேட்க முடியாமல் சாந்தசொரூபியாக இருந்து பார்த்துக் கொண்டிருந்தார் புத்தர்.

அதன்பிறகு தீவிரவாத விசாரணைப் பிரிவான நான்காம் மாடியில் சில நாட்கள் அமலன் இருந்தான். சித்திரவதைகளையும் விசாரணைகளையும் அனுபவித்தான். 'இனி ஒன்றுமே நடக்காத காரியம்' என்று அமலனுக்குப் புரிந்துவிட்டது. சும்மா தானும் தன்பாடும் என்று திரிந்தவனை உள்ளே தள்ளி சித்திரவதைகள் செய்து பட்டமும் சூட்டினார்கள். பின்னர் குண்டுவெடிப்பிற்கும் அவனுக்கும் தொடர்பில்லை என விசாரணைகளில் தெரிய வந்ததும், விடுதலை செய்தார்கள். ஆனால் தினமும் பொலிஸ் ஸ்ரேஷனிற்குச் சென்று கையொப்பமிட வேண்டும் எனவும், தேவை ஏற்படின் விசாரணைக்கு வரவேண்டும் என்றும் கட்டளையிட்டார்கள். தொடர்ந்து பொலிஸ் ஸ்ரேஷன் சென்று வந்த அமலன், 'தலை தப்பியது தம்பிரான் புண்ணியமென' ஒருநாள் நாட்டை விட்டு விடுதலையாகி ஓடித் தப்பினான்.

உள்ளே நிறைந்து கிடக்கும் லக்மினியின் நினைவுகளை அசை போட்டுப் பார்க்கின்றான் அமலன். ஒரு சம்பவம் வாழ்க்கையை எப்படி அடி தலை மாற்றிப் போட்டுவிட்டது. பள்ளியில் ஒன்று, பல்கலைக்கழகத்தில் ஒன்று, வேலையில் ஒன்று – இன்று நிஜமாகிப் போய்விட்ட இன்னொன்று. வாழ்க்கையில் ஒவ்வொரு ஆணுக்கும் பெண்ணுக்கும் இறுதியாக ஒன்று அமைவதற்கு முன்னர் எத்தனை பேர்கள் இடையில் வந்து போவார்கள்? இறுதியாக ஒன்று கிடைத்த பின்னரும் இன்னும் அலைபவர்கள் எத்தனை பேர்? அமலனின் மனம் வெட்கித் தலை குனிகின்றது.

அமலன் கொழும்பில் வேலை செய்து கொண்டிருந்த காலங்களில், அவனுக்கென்று ஒரு வாழ்க்கைத் துணையை, அவனது பெற்றார்கள் தேடித் திரிந்தார்கள். பிறகு நடந்தது என்ன? அமலனின் பெற்றோர்களால் என்றுமே அவனது மனைவி தாரிணியை பார்க்க முடிந்ததில்லை. அதே போல பெற்றவர்களின் இறப்பிற்குக்கூட அமலனால் போக முடியவில்லை.

புதிதாக ஒரு துணை வந்து, அதுவும் அவனுக்கு மிக நெருக்கமாக ஒட்டியபோது, லக்மினி பற்றிய நினைவுகள் மெல்ல மனதின் ஓரத்திற்கு சென்று கொண்டன.

தாரிணியின் அன்பிலும் உபசரிப்பிலும், இன்று மெழுகாய் உருகிவிட்டான் அமலன்.

ு

“அப்பா... இஞ்சை பாருங்கோ சீனறியை...” ஆச்சரியத்தால் சௌம்யாவின் கண்கள் அகல விரிந்தன. அமலனின் சத்தம் வராது போகவே, “அப்பா சரியான நித்திரை” என்றாள்.

தாரிணி சீற்றுக்குள்ளால் கையை நுழைத்து அமலனுக்குக் கிச்சுக்கிச்சு மூட்டினாள்.

“இந்தாள் இப்பிடியே தூங்கி வழிஞ்சா ரஞ்சனுக்கு நித்திரைதான் வரும். பிள்ளை நீ போய் முன்னுக்கு இரு...” சௌம்யாவைப் பார்த்து தாரிணி சொன்னாள்.

“றைவிங் செய்யேக்கை நான் ஒருநாளும் தூங்க மாட்டன்” என்றான் ரஞ்சன்.

இவர்களின் கலாட்டாவில் சிந்தனை அறுந்த அமலன், கண்ணைக் கசக்கியபடியே சுற்றுமுற்றும் பார்த்தான். சில மலைகள் ஒதுங்கிப் பதுங்கி பின்புறம் ஓட, பனித்தூவல் சூழ்ந்த செழிப்புடன் கூடிய பிரதேசமென எங்குமே பச்சைப்பசேல் என்றிருந்தது மலையகம்.

“கண்டி வந்திட்டுது” என்றான் அமலன்.

ு

## நிறுத்தம் ஒன்று : மலையகம்

கண்டியில் நின்றபடியே, புகழ் பூத்த இடங்களான புத்தரின் புனிதப் பல் உள்ள ஸ்ரீ தலதா மாளிகை, பேராதனைப் பல்கலைக்கழகம் என்பவற்றைப் பார்த்தார்கள். இரவு உணவருந்திவிட்டு, கண்டி இராசதானியின் கடைசி தமிழ் மன்னன் ஸ்ரீவிக்கிரம ராசசிங்கனால் அமைக்கப்பட்ட குளத்தைச் சுற்றி காலாற நடந்தார்கள். கண்டி நகரம், கொழும்பைவிட நெரிசலாக இருந்தது போல அவர்கள் உணர்ந்தார்கள். கண்டிய நடனத்தை அவர்களால் கண்டுகளிக்க முடியவில்லை.

அங்கு நின்ற பொழுதில் நுவரெலியா சென்று தேயிலைத் தொழிற்சாலை, மற்றும் 'சீதா எலிய' என்ற இடத்தில் உள்ள சீதை அம்மன் கோவில் என்பவற்றையும் பார்த்தார்கள். 'சீதா எலிய' என்ற இடம்தான் இராவணனால் சீதை சிறை வைக்கப்பட்டிருந்த அசோகவனம் ஆகும்.

ு

## நிறுத்தம் இரண்டு : மத்திய மாகாணம்

இரண்டு நாட்களில் இயற்கை எழில்கொஞ்சும் மலையகத்தை விட்டுப் புறப்பட்டுக் கொண்டார்கள். தம்புள்ள, சிகிரியா என்ற இடங்களினூடாக அனுராதபுரம் போவற்கு முடிவு செய்தார்கள். நேரம் போதாமையினால், சோழர்கள் உருவாக்கிய பொலன்நறுவை என்ற இடத்தைத் தவிர்த்துக் கொண்டார்கள்.

ஆழ்ந்த உறக்கத்தில் இருந்து விழிப்படைகின்றன கிராமங்கள். கடும் பச்சையாகவிருந்த காட்சிகள் மெல்ல மறைந்து, இளம்பச்சை நோக்கி நகரத் தொடங்கின. இடைப்பட்ட நகரங்கள் அவ்வளவு சுறுசுறுப்பாக இல்லை.

ரஞ்சன் கூட இரண்டு மூன்று நாட்களின் பின்னர் கொஞ்சம் தோழமையுடன் பழகத் தொடங்கியிருந்தான். அடிக்கடி அந்த இடங்களுக்கு வந்து போயிருந்ததால், தனக்குத் தெரிந்த சில சாப்பாட்டுக்கடைகளையும் அறிமுகம் செய்தான். அவர்கள் பார்க்கத் தவறிய சில இடங்களையும் சுட்டிக் காட்டினான்.

தம்புள்ள குகைக்கோவிலும், சிகிரியாவும் நில மட்டத்திலிருந்து பன்மடங்கு உயரம் கொண்டவை என்பதால் ஒரே நாளில் பார்ப்பதைத் தவிர்க்கச் சொன்னான் ரஞ்சன். இரண்டுமே ஏறுவதற்கு களைத்துப் போவதால், இரசித்துப் பார்க்க முடியாமல் போகும் என்பது அவனது பயண அனுபவம்.

மாத்தளை மாவட்டத்தில் இருந்த தம்புள்ள குகைக்கோயில் பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருந்தது. சுற்றவர காடுகள் சூழ்ந்தது. அவர்கள் அங்கே போனபோது மேளம் போன்றதொரு இசைக்கருவியை இசைத்துக் கொண்டிருந்தார்கள். உயரமான மலையின் உச்சியில் குடையப்பட்ட குகைக்குள் ஓவியங்களும், சயனத்தில் – தியானத்தில் என நூற்றுக்கும் மேற்பட்ட புத்தர் சிலைகளும், விஷ்ணு – பிள்ளையார் போன்ற இந்துசமய தெய்வங்களின் சிலைகளும், சில மன்னர்களின் சிலைகளும் இருந்தன. எல்லோரும் சொல்வது போல அது ஒரு 'பொற்கோவில்' தான்.

மறுநாள், முதலாம் காசியப்பமன்னன் எதிரிகளிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவெனக் கட்டிய சிகிரியா கோட்டையைப் பார்க்கச் சென்றார்கள். முன்னே பெரியதோரு அகழி நீண்டு விரிந்து கிடந்தது. கோட்டையின் வாயிலில் சிறு குளங்களும், நீண்டு ஒடுங்கிய கேணிகளும் இருந்தன. மலையின் அடியில் உறங்கிக் கொண்டிருக்கும் சிங்கமொன்றின் பாதங்கள் பயமூட்டியது. கனவு நகரத்தைப் பார்ப்பதற்கு செங்குத்தாக பல படிகள் ஏறவேண்டியிருந்தது. குறுகிய ஒடுங்கிய வழிகளினூடாக, கை பிடித்து ஏற இடையிடயே ஏணிகளும், இடையிடையே ஓய்வெடுக்க இடங்களும் இருந்தன. மேலே ஏற ஏற சுற்றிச் சூழ்ந்திருக்கும் அடர்ந்த

காடுகள் தெரிகின்றன. பச்சைப் பசேலென்ற போவைக்குள் பதுங்கியிருக்கும் சொர்க்கம் அது.

கோட்டையின் உச்சியில் நீர் வற்றிப்போகாத குளம் ஒன்றும், ஏற்ற இறக்கங்கள் கொண்ட நிலப்பிரதேசமும் இருந்தன. அறுநூறு பேர்கள் வரையில் தாராளமாக நிற்கலாம். திரும்பி இறங்கும்போது அழகிய வேலைப்பாடுகள் கொண்ட இயற்கை வர்ணங்களால் வரையப்பட்ட சுவர் ஓவியங்களையும் பார்க்க முடிந்தது. அந்த ஓவியங்களை தேவதைகள் என்றும் காசியப்பனின் மனைவிகள் என்றும் சொல்கின்றார்கள். அஜந்தா ஒவ்வியங்களின் சாயலில் உள்ள இந்தப்பெண்களை இராவணன் காலத்து பணிப்பெண்கள் என்று சொல்வாரும் இருக்கின்றனர்.

சிகிரியாவைப் பார்த்ததில், அமலனுக்கு சமீபத்தில் வாசித்த `சுகந்தி என்கின்ற ஆண்டாள் தேவநாயகி' நாவல் மனதினில் வந்து போனது. இராஜராஜ சோழன், இராசேந்திரன், தேவநாயகி என்பவர்களைச் சுற்றிப் படரும் அந்த நாவல், இலங்கை இந்தியா நாடுகளைக் களமாகக் கொண்டது.

உங்கள் எல்லோருக்கும் தற்போதும் வாழ்ந்து வருகின்ற ஆறாவது மகிந்த மன்னனைத் தெரியும். ஆனால் அமலன் வாசித்த நாவலில், மன்னன் ஐந்தாம் சேனனின் சகோதரனான, ஐந்தாம் மகிந்தன் வருகின்றான். கேளிக்கைகள் நிறைந்த அவன், நாட்டைச் சரிவர ஆளமுடியாமல் கலவரங்கள் வெடித்ததால் உருகுணைக்குத் தப்பி ஓடினான். அந்த நேரத்தில் சோழர்கள் அனுராதபுரத்தைக் கைப்பற்றி, பொலன்நறுவை வரை தமது ஆட்சியை விஸ்தரித்துக் கொண்டார்கள். சில வருடங்கள் உருகுணை இராட்சியத்தை ஆண்ட மகிந்தன் பின்னர் நடைபெற்ற யுத்தங்களின்போது முதலாம் இராஜராஜசோழனிடம் பிடிபட்டுக்கொண்டான். சோழநாட்டிற்கு நாடு கடத்தப்பட்ட அவன், பின்னர் அங்கேயே இறந்தான்.

சிகிரியா இன்று ஒரு புனித நகரம். ஒரு காலத்தில் கேளிக்கைகள் பல நிறைந்த கனவு நகரம். சோழர் படையெடுப்பின் போது பிணங்கள் கொத்தித்தின்னும் கழுகுகள் நிறைந்த மயானபூமி.

௳

மறுநாள் புறப்பட்டு அனுராதபுரம் நோக்கிச் சென்றார்கள்.

இங்கே மன்னன் துட்டகைமுனுவினால் அமைக்கப்பட்ட ருவான்வெலிசாய தாதுகோபுரம், புனித வெள்ளரசு மரத்தைக் கொண்ட ஸ்ரீமகாபோதி, இவை இரண்டுக்கும் இடையே உள்ள 1600 தூண்களைக் கொண்ட லோவமகாபாய, அபயகிரி விகாரை போன்ற பல புராதன இடங்கள் இருக்கின்றன.

இசுருமுனிய கோவிலில் பூந்தட்டுகளும் தீபங்களுமாக எங்குமே வெள்ளைத்துணி போர்த்திய மனிதர்கள் காணப்பட்டார்கள்.

பகலில் இந்த இடங்களைப் பார்த்துவிட்டு ஹோட்டலுக்குத் திரும்பிக் கொண்டிருந்தபோது, "இங்கே இதைப் பாருங்கள்" என்று ரஞ்சன் ஒரு தாதுகோபுரத்தைச் சுட்டிக் காட்டினான். தூரத்தே ஒரு தாதுகோபுரம் புதிதாக ஜொலித்தது.

"இது மகிந்த கட்டியது. சண்டஹிரு செய என்று பெயர்..."

"சண்டை..." என்று பின்னால் இருந்த தாரிணி இழுக்க ரஞ்சன் சிரித்தான்.

"கார் ஓடிக்கொண்டிருக்கேக்கை ஒண்டையும் உருப்படியா பாக்கேலாது. புசுக்கெண்டு போயிடும்." தொடர்ந்து தாரிணி சொன்னாள்.

மகிந்த கட்டிய சண்டஹிரு செய தாதுகோபுரமும் அப்பிடித்தான் புசுக்கெண்டு போனது. ரஞ்சனும் அதைப் பார்க்கப் போகின்றீர்களா என்று கேட்கவில்லை. இவர்களும் அதில் ஆர்வம் கொள்ளவில்லை.

"மகிந்த எப்படி இருக்கின்றார்?" அமலன் கேட்க ரஞ்சன் புன்முறுவல் செய்தான்.

மனிதப் படுகொலைகளால் மகுடம் சூட்டிய ராஜபக்ஷ குழுவினர் சமீபத்தில் பெரும் நெருக்கடிக்கு ஆளாகியிருந்தார்கள். தலைநகரை மக்கள் முற்றுகையிட்டிருந்தார்கள். மக்கள் போராட்டத்திற்கும் தொடர் முற்றுகைக்கும் ஈடு குடுக்க முடியாமல் இறுதியில் ஓடித் தப்பினார்கள்.

"தமிழ் இனத்தை மாத்திரம் எதிர்த்துக் கொண்டிருப்பவர்கள் நரை தட்டிப் போனாலும் ஆட்சியில் இருப்பார்கள். அந்தத் தொழிலுடன் தன் இனத்து மக்களையும் சுரண்டிப் பட்டினி போடுபவர்கள் கண்காணாமல் போய்விடுவார்கள்." கொஞ்ச தூரம் கார் ஓடியபின்னர், அமலன் கேட்ட கேள்விக்கு ரஞ்சன் பதில் சொன்னான்.

வரலாற்று நதியும் காலங்காலமாக இதையேதான் சொல்லிச் செல்கின்றது.

ரஞ்சன் முதன்முதலாக வாய் திறந்து அரசியல் பேசியது அதுவே முதல் தடவை. தவிர அந்தப் பயணத்தில் யாரும் அரசியல் பேசவில்லை. அவர்கள் உள்ளூர் பிரச்சினைகளும் கதைக்கவில்லை, உலகப் பிரச்சினைகள் பிற்றியும் அலசவில்லை.

இரவு ஹோட்டலில் நின்றபோது, அமலன் `சண்டஹிரு செய' பற்றி கூகிளில் தட்டிப் பார்த்தான்.

|| 2009 இல் முடிவடைந்த இலங்கையின் உள்நாட்டுப்போரில் இலங்கை ஆயுதப் படைகளின் வீரமரணம் அடைந்த வீரர்களின் நினைவாக இந்த ஸ்தூபி கட்டப்பட்டது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் 2010 இல் அடிக்கல் நாட்டப்பட்டு, 2021 இல் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. கி.பி 301 இல் கட்டப்பட்ட ஜேதவனாராமாய விகாரைக்குப் பின்னர், இலங்கையில் கட்டப்பட்ட மிகப்பெரிய ஸ்தூபி இதுவாகும். ||

பதினொரு வருடங்களில் ஜனாதிபதி இடம் மாறியிருந்ததைத் தவிர உருப்படியான வேலைகள் எதுவும் நடக்கவில்லை என்பதையே அது சொன்னது.

ல

## நிறுத்தம் மூன்று : வடமாகாணம்

வட பகுதியை நோக்கிச் செல்ல, ஈரலிப்பாக இருந்த நிலங்கள் எல்லாம் மெதுமெதுவாக வரண்ட பூமியாகின்றன. வீதியில் தார் சூடேறி ஆவி பறக்கின்றது. காற்றினால் அலைக்கழிக்கப்படும் கழிவுகளும் புழுதியும் ஆவியுடன் போட்டி போடுகின்றன. வவனியா, கிளிநொச்சி ஊடாக கார் யாழ்ப்பாணம் நோக்கி விரைகின்றது.

வயது முதிர்ந்த கிழவியுடன் வாலைக்குமரி ஒருத்தி நடை பயில்வது போன்ற தோற்றம் இன்று. சிதைந்த கட்டடங்களும் அதன் மருங்கே புதியனவும், இரண்டு பக்கங்களும் காடுகளும் செம்பாட்டுப்புழுதியும் இடையே நவீன மயமாகி வழுக்கிச் செல்லும் தார் வீதியும் என மாய்மாலம் காட்டுகின்றது.

ரஞ்சன் தான் தொழில் துவங்கியதற்கு இதுவரை நான்கு தடவைகள் தான் யாழ்ப்பாணம் வந்ததாகச் சொன்னான்.

அன்றைய இரவு யாழ்ப்பாண நகரத்தில் தங்கிவிட்டு, மறுநாள் அமலனும் தாரிணியும் தாம் வசித்த ஊர் நோக்கிச் சென்றார்கள். அழகான பச்சை போர்த்திய மரமொன்றின் பட்ட கொப்புகளில் ஒன்றாக அவர்கள் கிராமம் இருந்தது.

தெல்லிப்பழையிலிருந்து சற்று வடக்காக, புழுதி படிந்த செம்பாட்டு மண் ஊடாக காரில் போவதற்கு அமலனுக்கு விருப்பம் இருக்கவில்லை. ரஞ்சனின் உட்கிடக்கை என்னவென்றும் தெரியவில்லை. அமலன் கார் பழுதாகிவிடும் எனச் சொன்னபோது ரஞ்சன் அதற்கு உடன்பட்டான். ரஞ்சன் காருக்குள் இருக்க இவர்கள் மூவரும் ஒரு ஒட்டோவில் பயணித்தார்கள்.

பள்ளமும் திட்டியும் குழிகளும், இரண்டுபக்கக் கரைகளில் பீநாறிப்பற்றைகளும் என, ஒரு காலத்தில் பாதங்கள் நடந்து திரிந்த பாதை இன்று மறைந்து கிடக்கின்றது. முப்பது ஆண்டுகளுக்கும் முன்னால் மனிதர்கள் வாழ்ந்த சுவடு ஏதும் இல்லை. செருப்பில்லாமல் பள்ளிக்கு நண்பர்களுடன் நடந்து சென்ற பாதை. இன்று பாதையும் இல்லை, நண்பர்களும் இல்லை. எங்குமே புதர்கள் மண்டி, வீடுகள் இடிந்து, வெற்றுக்காணிகளாக காடு பற்றிக் கிடக்கின்றது ஊர்.

அமலனின் வீட்டிற்குப் போய்ச் சேர்வதற்கிடையில், ஆக மூன்றே முன்று வீடுகள் மாத்திரம் புதிதாக முளைத்திருந்தன. அதுவும் அரைகுறையில் தள்ளாடிக் கொண்டிருந்தன. போர் முடிவடைந்து பதின்னான்கு வருடங்களில் இவ்வளவு தான் நாட்டின் முன்னேற்றம்.

ஒரு காலத்தில் எப்படியிருந்த ஊர்? தார் வீதியொன்று இருந்ததற்கான அடையாளம் ஏதும் இன்றில்லை. சந்ததிகள் பெருகி, வேரூன்றிய நிலம் சாபல்யம் பெற்று மூளியாக இருக்கின்றது. இருந்தவர்களில் இறந்தவர்கள் போக, இருப்பவர்கள் எல்லாம் இன்று ஆளுக்கொரு மூலையில்.

முதுசமொன்றின் எச்சமாக ஓணான் ஒன்று தலையை ஆட்டி வரவேற்கின்றது. அதன் எச்சரிக்கை இனி ஓட்டோவும் உள்ளே போகாது என்பதுதான். `கல்லும் முள்ளும் காலுக்கு மெத்தை' என்ற ஐயப்பன் பாடலால் மிகுதித் தூரத்தைக் கடந்தார்கள்.

பிறந்து வளர்ந்து வாழ்ந்த வீட்டிற்குள், இத்தனை வருடங்கள் கழிந்தும் உள்ளே போக முடியவில்லை. வீடு அரையும் குறையுமாக இடிந்து, வளவு முழுவதும் காடேறி இருக்கின்றது. வீட்டிற்குள் இருந்து இரண்டொரு மரங்கள் கிழம்பி வானத்தை எட்டிப் பார்க்கின்றன. வளவிற்குள் செல்லாதவாறு, யாரோ விஷமிகள் உடைந்த பிசுங்கான் துண்டுகளை முன்புறம் பரவிப் போட்டிருக்கின்றார்கள். உள்ளே என்னத்தை வைத்திருப்பார்களோ? ஒருவேளை வருவது தெரிந்திருக்குமோ?

அமலனின் கைகள் நடுங்குகின்றன. உடல் சிலிர்க்கின்றது. முப்பத்தி இரண்டு வருட ஏக்கம், இன்று கடல் கடந்து வாசல்வரை வந்து நிற்கின்றது. அவனது பெற்றோருக்கு அதுவும் இல்லை.

“இதுதான் சௌம்யா நான் பிறந்து வளந்த வீடு...” நா தழுதழுக்க மகளிடம் சொன்னான்.

“வந்தனாங்கள்... உள்ளே போய்ப் பார்ப்பம் அப்பா...”

“வேண்டாம் பிள்ளை... ஏதாவது மிதிவெடிகள் இருந்திட்டுதெண்டால் பிறகு சிக்கல்... திரும்பிப் போவம்.”

சௌம்யா தனது மொபைல்போனால் உடைந்த வீட்டை வெவ்வேறு கோணங்களில் படம் எடுத்துக் கொண்டாள்.

“அப்பாவும் அம்மாவும் போய் ஒண்டா நில்லுங்கோ.”

பிறகு ஒரு ஷெல்பி எடுத்துக் கொண்டார்கள்.

ஓட்டோக்காரன் அவர்களைப் பார்த்தான்.

"தம்பி போவம்..."

"ஊரைவிட்டு ஓடிப் போகும்போது எல்லா வீடுகளும் நன்றாகத்தானே இருந்தன! ஆளில்லாத ஊருக்கு ஏன் 'ஷெல்' அடித்து எல்லா வீடுகளையும் உடைக்க வேண்டும்?" அமலன் தாரிணியைக் கேட்க ஓட்டோக்காரன் சிரித்தான்.

திரும்பி வந்து காருக்குள் ஏறினார்கள். ரஞ்சன் தனது மொபைல்போனிற்குள் மூழ்கியிருந்தான். சௌம்யா தான் எடுத்த படங்களை ஒவ்வொன்றாக ரஞ்சனுக்குக் காட்டினாள். அவன் அதைப் பார்த்துவிட்டு, முகத்தைத் தொங்கப் போட்டவாறு ஒன்றும் சொல்லாமல் இருந்தான்.

ஹோட்டலில் இறங்கும்போது மாலை ஐந்து மணியாகிவிட்டது. "எல்லாம் பார்த்தாயிற்று. நாளைக் காலை கொழும்புக்குப் புறப்படுவோம்" என்றான் அமலன்.

"இனி ஒன்றும் பார்ப்பதற்கு இல்லை என்றால், இன்று இரவே கொழும்பு போவதைப்பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?" எனக் கேட்டான் ரஞ்சன்.

அப்படியொரு கேள்வியை ரஞ்சன் கேட்டது அவர்கள் எல்லாரையும் ஆச்சரியப்பட வைத்தது. அவர்கள் வீடு போய்ப் பார்த்து வருவதற்குள் ஏதோ ஒன்று ரஞ்சனுக்கு நடந்திருக்கின்றது. அவனுக்கு யாழ்ப்பாணத்தில் அன்று தங்குவதற்கு பெரிதும் விருப்பம் இருக்கவில்லை என்பதை அவர்கள் உணர்ந்து கொண்டார்கள்.

"இல்லை ரஞ்சன். ஒரேயடியாக கார் ஓடுவது கூடாது. இரவு றெஸ்ற் எடுத்திட்டு அதிகாலை புறப்படுவோம்." அமலன் சொன்னபோது, "ரஞ்சன் ஏதாவது அவசரமா?" எனக் கேட்டாள் தாரிணி.

அவன் இல்லை என்று தலையாட்டினான்.

"ரஞ்சன் இன்று இரவாவது எங்களுடன் உணவு சாப்பிடலாமே?" எனக் கேட்டபோது, அதற்கும் அவன் மறுத்துவிட்டான்.

௳

மறுநாள் அதிகாலை புறப்பட்டுக் கொண்டார்கள். கொழும்பு வருவதற்குள் வவனியா, நீர்கொழும்பு என்ற இரு இடங்களில் மாத்திரம் உணவு அருந்துவதற்காக இறங்கிக் கொள்வதென முடிவு செய்தார்கள்.

நீர்கொழும்பில் அவர்கள் விரும்பிய ஹோட்டலுக்கு உணவருந்தச் சென்றபோது நேரம் மதியத்தைக் கடந்துவிட்டிருந்தது. அவர்கள் அரை மணி நேரத்திற்குள் சுடச்சுட உணவு சமைத்துத் தருவதாகச் சொன்னார்கள்.

அந்த வேளைக்குள் ரஞ்சன் சாப்பிட்டுவிட்டு திரும்பியிருந்தான். அவன் அந்த ஹோட்டலுக்கு வந்து றொயிலற் பாவித்துவிட்டுத் திரும்பும்போது அமலன் அவனைக் கூப்பிட்டான்.

"ரஞ்சன் சாப்பிட்டாயிற்றா?"

"ஓம்."

"அப்படியெண்டா ஒரு ரீ குடித்துவிட்டுப் போங்கள்."

அதையும் மறுப்பது சரியில்லை என யோசித்த ரஞ்சன் உடன்பட்டான். ரஞ்சனுக்கு ஒரு ரீ ஓடர் செய்தார்கள். அந்த வேளையில் தனது மொபைல்போனைத் தட்டிப் பார்த்துக் கொண்டிருந்த ரஞ்சன், ஒரு படத்தை அமலனிடம் நீட்டி "எனது குழந்தை" என்றான்.

"நீர் மரி பண்ணிவிட்டீரா? சொல்லவேயில்லையே?"

ரஞ்சன் சிரித்தபடியே, "மூண்று வருடங்கள் ஆகிவிட்டன. இது எனது பெண் குழந்தை. வாற வியாழக்கிழமை குழந்தைக்கு இரண்டு வயதாகின்றது." சொல்லியபடி படங்களை ஒவ்வொன்றாகத் தட்டிக் காட்டினான்.

"படத்தில் எனக்குப் பக்கத்தில் நிற்பவர் அப்பா. மனைவிக்குப் பக்கத்தில் நிற்பவர் அம்மா. அம்மாவுக்குப் பக்கத்தில் அவரின் தங்கை. அவர் திருமணம் செய்து கொள்ளவில்லை. எங்களுடன்தான் இருக்கின்றார். நுகேகொட சர்வதேச பாடசாலையில் அதிபராக இருக்கின்றார்."

தனது பெற்றாரைப் பற்றிச் சொல்லாமல், அம்மாவின் தங்கையைப்பற்றி ஏன் சொல்லவேண்டும்? வியப்பில் ஆழ்ந்த அமலன் ரஞ்சனிடமிருந்து மொபைல்போனை வாங்கிக் கொண்டான். ரஞ்சனின் அம்மாவின் தங்கையை உற்று நோக்கினான். கை தேர்ந்த ஓவியனின் படைப்பாக வந்திருக்கவேண்டிய ஓவியம் ஒன்று, இன்று புகையில் தெரிந்த முகமாகத் தெரிகின்றது. அமலனின் கண்கள் சுருங்கி விரிகின்றன. அதன் ஆழக்குழிக்குள் ஏதோ மர்மமாய் அசைகின்றன. அந்தப் படத்தை விரித்து விரித்துப் பார்த்த அமலன், அவளின் வலதுபக்க உதடுகளின் முடிவிடத்தை நெருங்கியதும் திடுக்கிட்டு மொபைல்போனை ரஞ்சனிடம் குடுத்துவிட்டான்.

ரஞ்சன் அடுத்த படத்தை நகர்த்தினான். அதில் ரஞ்சனும் மனைவியும், மனைவியின் பெற்றோரும் நின்றார்கள்.

ரஞ்சனிடம் ரெலிபோனை வாங்கி தாரிணியும் சௌம்யாவும் மாறி மாறி அந்தப் படங்களைப் பார்த்தார்கள்.

"அழகான சுட்டிப் பெண். என்ன பெயர்?"

"அனிக்கா" ரஞ்சன் சிரித்தான்.

ரஞ்சனின் தேநீரும், அவர்களின் சாப்பாடும் ஒன்றாக வந்தன. ரஞ்சன் தேநீரை அருந்திவிட்டு, "நீங்கள் ஆறுதலாக வாருங்கள். நான் காருக்குள் இருக்கின்றேன்" சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

"இஞ்சாருங்கோ... ரஞ்சனின்ரை பிள்ளைக்குக் கொஞ்சம் காசு குடுங்கோ. வாற கிழமை பேர்த்டே என்று சொன்னமாதிரிக் கிடந்துது" சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது தாரிணி சொன்னாள்.

"ரஞ்சன் நல்ல பெடியன். நான் முதல்லேயே அவனுக்குக் கொஞ்சம் காசு குடுப்பம் எண்டுதான் யோசிச்சனான். அவன் வாங்குவானோ எண்டுதான் தயக்கமா இருந்துது. இப்ப குழந்தை ஒரு சாட்டா வந்திட்டுது"

கார் கொழும்பை வந்தடைந்தது. ஹோட்டலுக்கு முன்னால் பொதிகள் இறக்கப்பட்டன. பிரயாணக் களைப்பில் இருந்த தாரிணியும் சௌம்யாவும் தமது பொதிகளைத் தூக்கிக்கொண்டார்கள்.

"மறக்காமல் காசைக் குடுத்திட்டு வாங்கோ" அமலனின் காதிற்குள் கிசுகிசுத்த தாரிணியும், சௌம்யாவும், ரஞ்சனிடமிருந்து விடைபெற்றுக் கொண்டார்கள். ஹோட்டலிற்குள் சென்று உள் இருந்த இருக்கைகளில் அமர்ந்தார்கள்.

அமலனுக்குக் களைப்பைவிட மேலானதொன்று ரஞ்சனிடம் கேட்பதற்கு இருந்தது. அந்தப் புகைப்படம் அப்படியே உயிர்பெற்று வந்து அமலனின் மனத்திரையில் நக்கூரமிட்டு நிற்கின்றது.

"ரஞ்சன்... உங்கள் உதவிக்கெல்லாம் மிச்சம் நன்றி." சொல்லியபடியே ஒரு காகித உறை ஒன்றை அவனது கைக்குள் திணித்தான் அமலன்.

"இதென்ன இது?" மறுத்த ரஞ்சனிடம், "உங்கள் குழந்தையின் பிறந்தநாள் வருகின்றதல்லவா... அதை சிறப்பாகக் கொண்டாடுங்கள்" என்றான் அமலன்.

'ரஞ்சன்... உங்கள் அம்மாவின் தங்கையை நான் முன்னர் சந்தித்திருக்கின்றேன்' சொல்ல நினைத்தான் அமலன். ஆனால் சொல்லவில்லை.

"ரஞ்சன்... என்ன கவலையா இருக்கின்றீர்கள்? என்னிடம் சொல்ல ஏதாவது இருக்கின்றதா?"

"இல்லையில்லை... ஒரே களைப்பு. அவ்வளவும் தான். இன்று படுத்து நாளை எழும்பினால் எல்லாம் சரிவந்திடும்."

அவர்களிடையே ஒரு தற்காலிக அமைதி நிலவியது. நன்றியுடன் கை குலுக்கி இருவரும் விடைபெற்றுக் கொண்டார்கள்.

◎


கி. கவியரசன்
செங்கம்
திருவண்ணாமலை மாவட்டம்


# கி. கவியரசன் கவிதைகள்

எத்தனை கனமாக இருந்தாலும் சரி
இந்த அலைகள்
கடலுக்குள்
இழுத்துச் சென்று விடுகின்றன
மனதிலிருப்பதை எல்லாம்.....

ஓ

எவ்வளவு அமைதியாக நின்றாலும்
நம் காலடியில் இருக்கும்
மண்ணை அரித்து அரித்து
நமது கால்களையே
மூடிவிடுகிறது கடலலை....

ஓ

கடற்கரையில் நடப்பவர்கள்
வெகு சுலபமாக
நுழைந்து விடுகிறார்கள்
கடந்த காலத்தினுள்.....

ஓ

எல்லாக் காலடித்தடங்களையும்
அழித்து விட்டுச் சென்ற
இந்த அலைகள்....

உனது காலடித்தடத்தை மட்டும்
எடுத்துக் கொண்டு
செல்கிறது...

◎

கவிஞர்.இரா.சீ.பாலகுமார்.M.A.,
சந்தோசபுரம்.சென்னை

# அள்ளிஅணைத்திடவேஆசையும் வந்ததடி.....!.

முன்கோபத்தில் பேசிக்கிறாய டி அத்த மவளே
மான்விழிகண்ணாலப்பார்த்தே மயக்கிறியே
ஆசையாப் பேசலாமா ஆத்தோரம் போவோமடி
மனசுமே ஏங்குதடி மீனாட்டம் துள்ளுதடி

சிவப்பு உடம்புக்காரிரோசாப்பூ சேலைக்காரி
கொலுசுசத்தம் சிணுங்குதடி ஓடோடி வாயடி
ஒன்னாபேசிடுவோம் மல்லிப்பூ த் தாறேனடி
கருங்கூந்தல் அழகடி கொஞ்சிப்பேசுவாயடி.

மல்லிகப்பூ வாசமடி மச்சானை மயக்குறியே
இடையும் சிறுத்திருக்கு சேலைக்கொசுவமிருக்கு
செவந்திருக்கு மேனியிலமஞ்சள் வாசமடி
கூழும் கறியும் சமைச்சு போடுவாயாடி.

ஒன்னோட நெனப்புலதான்பொழுது போகுதடி
பரிசம் போட உன் வீட்டுக்கு வாறேனடி
உன்ன என் சொந்தமா ஆக்கிக்கிறேனடி
தைமாசமும் வருது தாலிக்கட்டக் காத்திருக்கேனடி.

சமைஞ்சவளே சரீன்னு பச்சக்கொடிக் காட்டிடு
காந்தப்பார்வைவீசியே குறுநகைக் கொண்டாயே
ரோஜாமாலைஉன் கழுத்தில்போடுவேனடி
அள்ளிஅணைத்திடவே ஆசையும் வந்ததடி.

◎

கந்தையா தில்லைவிநாயகலிங்கம்
அத்தியடி, யாழ்ப்பாணம்

# அலையாடும் அழகு

“அலையாடும் அழகு குமரியின் வனப்பே
விலையற்ற அவளின் கவர்ச்சிச் சிரிப்பே!
உலை வைக்கும் மங்கையின் கண்ணே
அலை எடுத்து எவரையும் மயக்குமே!”
“சேலைத் தாவணியில் மனதைக் கவருதே
மாலை அணிந்த அணங்கின் வடிவமே!
சோலை நடுவில் எழில் பொழியுதே
கலை மகளின் அன்புத் தோற்றமே!”
“தலை முடி தோளை வருடவே
சிலை போல அழகாய் நிற்கிறாளே!
வாலைப் பருவம் தாண்டிய தருணியே
தலைவனைக் காண ஏக்கம் ஏனோ?”
“நிலை தடுமாற்றம் தரும் தையலே
குலைந்து வீழ்த்தும் அணங்கும் நீயோ!
ஓலை மடலில் எழுதும் கவிதையோ
வலையில் சிக்கா மானும் நீயோ!”
கந்தையா தில்லைவிநாயகலிங்கம்

◎



# முபாரக் கவிதைகள்

மழையை நேசிப்பதில்லை
குடையைத் தொலைத்தவன்,
வெயிலை
நேசிப்பதில்லை
காலணியைத் தொலைத்தவன்,
நிலவை
நேசிப்பதில்லை
விழிகளைத் தொலைத்தவன்,
உறவுகளை
நேசிப்பதில்லை
நிம்மதியைத் தொலைத்தவன்,
வெற்றியை நேசிப்பதில்லை
நம்பிக்கையைத் தொலைத்தவன்,
உன்னை நேசிக்கவில்லை
காதலால்
தன்னைத் தொலைத்தவன்!

ஓ

சண்டை போட்டவுடன்
சமாதானம்
செய்துகொள்ளும்
குழந்தைகள்
மட்டுமே,
அறிந்திருக்கிறார்கள்...
மனித வாழ்வின் நிலையாமையை!

ஓ

துயரங்களை
கடப்பதற்கு
மதுவை
தேடிக்கொண்டிருக்கிறார்கள்...
மது தரும் துயரங்களை
கவிதையாக்கிக்
கொண்டிருக்கிறேன்!

ஓ

சுற்றியிருந்த
விலங்குகளை
கல்லெறிந்து துரத்திவிட்டு,
குட்டிநாய்க்கு உணவு
வைக்கிறான்...
கருணையை காட்ட கூட,
இங்கு கல் தேவைப்படுகிறது!

# அமரர் கவிஞர் புசல்லாவை நீ. தர்மலிங்கம் கவிதைகள்

**சகலமும் கண்ணனிடம்**

அன்பு சுரப்பது அன்னையிடம் - நல்
அறிவு பிறப்பது தந்தையிடம்
உலகம் தெரிவது பள்ளியிலே
உயர்வு பெறுவது நற்செய்கையிலே

இல்லறம் சிறப்பது இணைகையிலே – அதன்
கற்பனை மலர்வது தனிமையிலே
சாதனை புரிவது முயற்சியிலே
வேதனைப் படுவது முதுமையிலே

மாணிக்கம் இருப்பதும் மண்ணுக்குள்ளே – உயர்
வைரம் கிடைப்பதும் கரித்துண்டினிலே
மனிதம் வாழ்வது அன்பினிலே
கடவுள் மறைந்து வாழ்வது நெஞ்சினிலே

செந்தாமரை வளர்வது சேற்றினிலே – ஞான
சித்தர்கள் வாழ்க்கைக் காட்டினிலே
முத்திப் பெறுவது இறைபக்தியிலே
முக்காலம் தெளிவது அறிவுச் சித்தியிலே

அஹிம்சை இருந்தது அண்ணலிடம் - அறிவும்
போதனை பிறந்தது புத்தனிடம்
சத்தியம் நிலைத்தது ராமனிடம்
சகலமும் உதித்தது கண்ணனிடம்

௳



## இரவு

உச்சிமலை செப்பனிட்டு
உடைத்த கல்லில் பாதை செய்து
பச்சைச்செடி நட்டுவைத்த
பாட்டாளிப் பெண்ணே

முற்றிய காம்புடைத்து உன்
கட்டைவிரல் தேய்ந்ததடி
காலமெல்லாம் மலையேறி உன்
கால்மூட்டும் ஓய்ந்ததடி

தண்டட்டி இருந்த காதில்
இன்று தகரத்தோடு மின்னுதடி
முன்னோர் தேடிவைத்த
வெண்கலப் பாத்திரங்கள் போச்சுதடி

இருந்ததெல்லாம் அழிந்தபின்னே
இன்று அருந்துவது இறப்பர் தட்டில்
வளம் கொளிக்கும் நிலமாக
வர்ணிப்பார்கள் மலையகத்தை
பலமிழந்த உன்வாழ்வைப் பார்ப்பார் எவருமில்லை

ஓரக்கண்ணால் பார்க்கிறாங்க
உன் மலையகத்தை ஒதுக்குறாங்க
கூலி சனங்கள் என்று
குறைவாய் மதிக்கிறாங்க

வீட்டுக்குள்ளே மின்விளக்கு
வெளிச்சத்தை தந்தாலும் - இந்நாட்டில்
மலையக மக்கள் வாழ்வில்
பகல்போதும் இரவுதான்

ை


## கலையகமாய்..

தென்றலில் நீராடித் தேகங் குளிர்ந்தொருத்தி
வெண்முகிலைத் துகிலாக்கி மேனியில் போர்த்தி
தன்பருவத்தை இரவுக்குப் பலிகொடுத்து
கண்ணயர்ந்தாள் கருமைநிறம் பூண்டாள்
துங்கிமூடித் தூங்கிக் கிடந்தவளை
அங்கம் வருடி அருணன் சிரித்தான்
தங்கம் பூசித் தன்முகம் மலர்ந்தாள்
எங்கும் பசுமை எழிலைப் பகிர்ந்தாள்
தந்தியில்லா வீணைகள் தும்பிகள் மீட்டின
குந்திக் கிளையில் குயில்கள் பாடின
அம்புயம் மலர்ந்து அவளை நோக்கின
கும்பலாயோசைகள் குருவிகள் எழுப்பின
புடர்ந்த வாகைக் குடைபிடிக்க
பக்கம் நின்று சவுக்கு அணிவகுக்க
அடர்ந்த தோகை மயில் விரித்தாட
அவள் மடியில் துள்ளின மானினங்கள்
இவள் மாணிக்கத் தங்க வைரங்களை
தன் வயிற்றில் மறைத்துக் காத்திருப்பாள்
ஊற்றெடுத்தோடும் ஓடைகளை
தன் பாதத்தில் சலங்கையாய்ப் பூண்டிருப்பாள்
பசித்தவர் புசித்திடக் கனி கொடுப்பாள்
உணவுப் பயிர்கள் விளைந்திட மடிவிரிப்பாள்
உழைப்பவர் சலிப்பால் உறங்குதற்கு
உறைவிடமாகி இவள் உபசரிப்பாள்
மாதிவள் பெயரோ குறிஞ்சிமங்கை
மலைக்காடென ஓர்க்காலம் வழங்கப்பட்டாள்
இன்று மாற்றுப் பெயர் பெற்றாள் மலையகமாய்
நாளை மாறுவாள் பெயர் கூறுவாள் கலையகமாய்

இலங்கை மலையக கவிதை உலகில் முக்கிய அடையாளமாகத் திகழ்ந்த இக் கவிஞரின் கவிதைகளை பிரசுரிப்பதில் காற்றுவெளி பெருமை கொள்கிறது.

*நன்றி:*
அ.லெட்சுமணன்.
சோமசுந்தரி மணியன்

◎



கு.பிரபு (கனடா)

# திராவிடம்

ஒற்றைப் பூதத்துக்கு
ஒளிந்து மறைய குடிசை கட்டி
பெயரும் வைத்தோம்
பூதத்தோடு வாழ்க்கைப் பட்டவர்
புதிய குடில்களில் வாழத்துணிந்தார்
அவரவர் பெயர்களில் குடில்கள்
அமைத்தனர் அவர்கள் மட்டும்
வாழ்வை நடத்தினர்
ஆதிக் கூடிலோ அனாதையாய் ஆனது
மீதி தமிழரோ முடங்கிக் கிடந்தனர்
தனிப்பெயர் வைத்து தமிழாய் வாழ
துருப்பிடித்த திராவிடம் தடையாய்
அரிதார முகங்களால் ஆட்சியும் நடந்தது
ஆண்ட பரம்பரை நம்பியே மாண்டது.
மீண்டெழுந்திட முக்கித் தவித்தனர்
மீட்பர் நாமென மூடி மறைத்தனர்
ஆதிச்ச நல்லூரில் அகன்று கிடந்தது
கீழடிக் கிடங்கில் கீழே வாழ்ந்தது
மீதியாய் மிச்சமாய் சிந்துவில் கண்டது
ஆதித்திராவிட மொழியென்றுரைத்தனர்
அகழ்வை மூடியே முடிவுரை தந்தனர்
ஆதியில் எங்கடா திராவிடம் இருந்தது
ஆயிரம் ஐம்பதை தாண்டிய தமிழடா
ஆதிக்குடியெங்கள் அன்னைத்தமிழடா
போதித்த பொய்யெலாம்
புகையென மறைந்திட ஆதவன்
தீயாய் எழுந்திடும் தமிழடா
தீண்டாய் எங்கள் இன்பத்தமிழை
மாண்டாய் நீயினி மண்ணோடு மண்ணாய்
பேண்ட தமிழின் பிள்ளைகள் பற்பல
மொழியாய் இனமாய் பலவாய் இன்னும்
திராவிடச் சட்டியைச் சுமப்பதுமில்லை
ஆரிய பூதமென்றோதுங்கவுமில்லை
ஆதியாய் அநாதியாய் அன்னைத் தமிழினி
அவனியில் மலடர்ந்திடும் பாரினி
திராவிடம் திராவிடம் தீதெனக் கொள்வோம்
தீர்ந்தது பீடை தெருவினில் எரிப்போம்
பாய்ந்திடும் குருதியில் தமிழினை
பாய்ச்சி வேங்கடம் குமரியில்
விதைத்தவர் நாங்கள்
மீண்டோம் மீண்டோம் விருச்சமாய்
நாங்கள்

தங்கேஸ்

# சொற்களின் சிறகுகள்

அடுக்கப்பட்ட சொற்களின் மீது இடறிவிழுகிறேன்
சோழிகள் போல அவைகள் உருண்டோடுகின்றன

“நினைவுகள் போல
அவை சிதறி ஓடும்” என்று
நினைத்திருந்தேன் நான் என்கிறேன்

“அவைகள் வாழ்க்கை போலவே
உருண்டுகொண்டேயிருக்கின்றன”
என்கிறாய் நீ

பம்பரம் போலவா?
என்று தான் முதலில்
நான் கேட்க நினைத்தேன்
“ஆனால் மேகங்களுக்குள் உருண்டோடும்
நட்சத்திரங்களைப்போலவா” என
அதற்குள் கேள்வியை மாற்றிவிட்டேன்


“நட்சத்திரங்கள் தலையணை உறைக்குள்
மாட்டிக்கொண்ட விதைகள் போன்றவை”
என்கிறாய் நீ

“ஒரு நாள் இல்லாவிட்டாலும் ஓர் நாள் காற்றில்
பறந்து போக வேண்டியவைகள் தானே அவைகள்”
என்கிறேன் நான்

“காற்றில் பறந்து போகாதது எதுவுமில்லை”
ஆனால் எனக்கு என்னவோ சிறகுகள் முளைத்த
சருகுகள் தான் சொற்கள்‘ என்கிறாய் நீ

இறுதியாத்திரையில் இருகரம் விரித்து காற்றில்
கிறுகிறு வண்ணம் சுற்றும் சிறகுகளையே வைத்த
கண் வாங்காமல் பார்த்துக் கொண்டு இருந்தவன்
மெல்ல கரங்களை விரிக்கிறேன்

“ஆனால் ஏற்கனவே நீ பறந்து கொண்டுதானே
இருக்கிறாய் ‘’
என்கிறாய் நீ




◎

கவிஜி

# ஒரு துயர சின்னம்

தன் நிலம் நோக்கி
நகர்ந்து கொண்டிருக்கும்
கப்பலும்
ஒரு பறவை தான்
நீள்வட்டம் நேர் பாதை
என
ஒன்றுமில்லா
மௌனத்துக்கு ஏங்கும்
அதன் குரல்
கழுத்து நோக கதறும்
அதன் ஒலித்தடம்
சோர்ந்த வெளியில்
வாலாட்டி தவிப்பதை
காண்கிறோம்
அலையடிக்கும் அனலடிக்கும்
கானலோடு காலமும்
அடிக்க
சற்று நேரத்தில்
கரை வந்து சேரும்
அதன்
சொந்த நாட்டு ஆவல்
பசித்த பொழுதை
பத்திரப்படுத்தி
வந்து கொண்டிருக்கும்
அதன் பெருந்துக்கத்தை
இனிதான் பாடும்
தரைதட்டி நிற்கும்
ஒரு துயர சின்னத்துக்கு
காத்திருக்கிறது
நிலம்



கி.சரஸ்வதி

ஒரு வருடலில் அன்பைப் புரிந்து கொள்கிறது
நாய்க்குட்டி

தட்டிக் கொடுத்ததும் தலையை ஆட்டி ஒப்புக்
கொள்கிறது பசு

விரல் நீட்டியதும் ஏறி அமர்ந்து விடுகிறது பசுங்கிளி

எத்தனை வெளிப்படுத்தினாலும்
அன்பின் மொழியைப் புரிந்து கொள்வதில்லை
பகுத்தறிவு விலங்கு

## ந.வீரா(திமிரி)

வானம்
பெரிதா..?
பூமி பெரிதா..?
சண்டையில்
மழைதான்
வந்து சமாதானப்படுத்துகிறது..

வேர் பெரிதா..?
கிளை பெரிதா..?
பூ
வந்து
பிரச்சனையை
தீர்த்துவைக்கிறது.

கடல்
பெரிதா..?
கரை
பெரிதா..?
அலை வந்து
உடன்படிக்கை
செய்கிறது..

வெயிலா..?
மழையா..?
வானவில் வந்து
வண்ணப் பஞ்சாயத்து
செய்கிறது..

நீயா..?
நானா..?
வாழ்க்கையில்
கடைசியில்
மரணம்
வந்து
முடித்துவைக்கிறது..


◎

கலை

# மயிர்கள்

தலைவரே
இல்லாமல்
தனித்துவமான வாழ்வை
வாழ்ந்துப் பயிராகிறது
ஐந்தறிவு உயிர்கள்...
திரளோருக்கான
தியாகிகளைத்
தன் சாதி அடையாளமாகப்
பிடிங்கிக் கொண்டு
சாமானியருக்கும் சாதி வெறியைப் பறிமாறுகிறது
ஆறறிவு மயிர்கள்!!

◎



## இளையவன் சிவா

ஆதாரத்தைத் தொலைத்துவிட்ட விமானப்
பயணியென
வேரின் உறிஞ்சுதலை விரட்டிவிட்ட மண்ணென
வானப்பரப்பில் சிறகினை வெட்டிக்கொண்ட
பறவையாய் மணமற்று நிறமற்று
கிளையில் பூக்காது வாடும்
மொட்டாய்
வெற்றுத் தாள்களைத் தாங்கிப் பிடிக்கும்
வார்த்தையற்ற நூலாய் விருட்சங்களற்றும்
விலங்குகளற்றும்
பாலையாய்க் கிடந்த
வனத்தினுள் பரிதவிக்கிறேன்.


ூ

இருளுக்குள் ஒளிரும்
பூனையின் விழிகளாய்
மனதுக்குள் ஊற்றெடுக்கிறது நம்பிக்கைச் சுடர்
தொலைவானத்தின்
தொடு எல்லை போல நீள்கிறது வாய்ப்புகளின்
ஊஞ்சல். அலைபுரளும் கடலுக்குள்
ஊசலாடும் படகினில்
தொங்கிடும் கயிராய் வளர்கிறது தேடல்களின்
உலகம்.
நிலையாமை வாழ்வினில் நிலைக்கும் வரை
பேணுகிறேன் எழுத்துகளின் சங்கமத்தை.

ூ


இதழுக்குள் ஊற்றெடுக்கிறது அன்பின் அறுசுவை
முத்தமென. அடைபடும் விரல்களுக்குள்
ஒட்டிக்கொள்கிறது ப்ரியத்தின் வாசனை குருதியென.
நெருக்கத்தின் நினைவுகளில் புன்னகைக்கிறது
பயணத் தருணங்கள் மலரென.ய் இளைப்பாற்றும்
தேநீரில் உணர்ச்சிகளின் சொல்லாடல் ஒளிர்கிறது
நறுமணமென.
சினத்தின் கரத்தினுள்
சிதைந்திடும் பொழுதினில்
எனை மீட்டெடுக்கும்
உன் மௌன வேள்வியின் கடவுள்களை வருக
என்கிறேன்.

◎



பாக்யபாரதி, தருமபுரி

# சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்



நீ பலகோடி
சொத்துகளுக்கு
அதிபதியாக இருக்கலாம்!

வானில் செல்லும் விமானங்களுக்குக் கூட
சொந்தக்காரராக இருக்கலாம்!


அதற்காக எல்லோரும்
உனக்குக் கீழ்தானென்று
உதாசீனப்படுத்தாதே...

உயர்வதற்கு பயன்பட்ட
ஆறாவது அறிவு
உதவுவதற்கு
தடைபோடுகிறதா?

பணக்கட்டின் மேல்
கால் விரித்து
கனவு காண்பவனுக்கும்
வெறுந்தரையில்
கால் சுருக்கி
படுத்திருப்பவனுக்கும்
வயிறென்பது ஒன்றுதான்
பசியென்பது ஒன்றுதான்
அதைப் போக்குவது சோறொன்றுதான்!

எப்போதும்
நினைவில் கொள்...
இவ்வுலகம்
எவ்வளவு பெரிய
வளர்ச்சியை அடைந்தாலும்
ஏர்த்தொழிலின்
பின்னால்தான்
சுழல முடியுமென்பதை!

◎



# ஓடக்காண்பது பூம்புனல் வெள்ளம்

அன்பாதவன்

**தா**ய்மண்ணே வணக்கம்

தோள்கிளி,அம்மனிடம் சைகையில் கேட்டது:' அழகிசொக்கியின் அலகிலா விளையாட்டுக்கு,அளவே இல்லையா அம்மையே..?'

'கூடலரசன் ஆடல்வல்லானிடம் கேட்க வேண்டியதை எளியவள் என்னிடம் வினவலாமா பசுந்தோழியே'- குறும்புன்னகை பூத்தாள் இடதாள் @

மீனாட்சி அம்மன் கோவிலில் இருந்து திரும்பி வந்தவர்களுக்கு காத்திருந்தது சூடான, சுவையான மதிய உணவு.

உணவருந்திய அமிர்தனும், அழகியும் அறைக்கு சென்று உடைமைகளை உரியவாறு அடுக்கி, இழுவைப் பெட்டியை இழுத்துக் கொண்டு கீழே வரவேற்புக்கு வந்தனர்.

வரவேற்பு பகுதியில் அமர்ந்திருந்த ஒவ்வொருவரிடம் கரங்குவித்து, கை குலுக்கி விடை பெற்று முடித்தவர்களுக்கு ஆனந்த் கொடுத்தது ஒரு இனிப்பான சர்ப்ரைஸ்.

"அமிர்தன் சார்... எங்க குழு சார்பாக எல்லோருக்கும் அரை கிலோ அல்வாவும் மிளகுசேவும் கொடுக்கச் சொல்லியிருக்காங்க இது உங்க பங்கு"

"நன்றி ஆனந்த்.... இந்த பாண்டியர் பயணம் எங்க வாழ்க்கையில மறக்க முடியாத ஒரு திருப்புமுனைப் பயணமா அமைஞ்சுடுச்சி... அடுத்து ஏதும் டூர் ப்ரோக்ராம் இருந்தாலும் தகவல் சொல்லுங்க...."

"நிச்சியமா சார்.... அடுத்து வேறு பயணம் ஒண்ணு திட்டமிட்டு இருக்கோம்.. இன்னமும் முடிவாகல... ஆனதும் சொல்றன்.... மேடம்... உங்க சென்னை டிக்கெட் என்னாச்சு"

"நேத்தே கேன்சல் செஞ்சிட்டேன்... ஆனந்த்...! சார் கூட மாட்டுத் தாவணி போய் அங்கயிருந்து விழுப்புரம் பஸ்ல...."

"ஒக்கே... என்ஜாய்... மேடம்... மகிழ்ச்சி... நல்லது பாத்து பத்திரமா போயிட்டு வாங்க"

பார்வதி மேடத்துக்கும், வேதாசலம் சாருக்கும் தனிப்பட்ட முறையில் நன்றி சொல்லி காசிநாதனின் கரங்குலுக்கி விடைபெற்றது இணையரின் ஆட்டோ!

மாட்டுத்தாவணி... ! சென்னை செல்லும் நடைமேடையில் நின்றிருந்தது மஞ்சள் நிற எக்ஸ்பிரஸ் பேருந்து...

"சார் விழுப்புரம் வரலாமா..."

"அப்பர் பெர்த் தான் இருக்கு... பரவாயில்லையா..."

"எவ்வளவு சார்ஜ்.....?"

"550 ரூபா... எத்தனை டிக்கெட்.....?"

"ரெண்டு" - பணமும் பயணச்சீட்டும் கைமாற,"மூனாவது வரிசைல.... 18,19...."

"நன்றி சார்" 18, 19 –ல் 61, 42ம்......!

பேருந்து புறப்பட்டது... மாமதுரை சாலைகளின் கட்டடங்கள், மனிதர்கள் பின்னோக்கி செல்ல....

"நேற்று வரை நீ யாரோ... நான் யாரோ

இன்று முதல் நீ வேறோ... நான் வேறோ...

காணும் வரை நீ எங்கே... நானெங்கே

கண்ட முதல் நீ இங்கே நானிங்கே...." -சன்னமான ஒலியில் பி.பி. ஸ்ரீனிவாஸ் குரல்

"பாரேன்... நம்மள அப்படியே எக்ஸ்ரே எடுத்த மாதிரி பாட்டு பாடுது"

"எங்கேயே பொறந்து... எங்கேயோ வளர்ந்து, எப்படியோ வாழ்ந்து... எப்படியோ ஒண்ணு சேந்துருக்கோம்.....ம்.. ம்... பிரியாத வரம் வேண்டும் பெருமானே" - குறும்பு குரலில் அழகி.

"என்னையே வரமாகத்தருகிறேன் தேவி... ஆனா.. இப்போ கொஞ்ச நேரம் தூங்குவோமா..."

ೞ

## 02.மதுரா விஜயம்

அமிர்தன் பேருந்து நிலையத்தை அடைந்த போது தான் கைபேசி ஒலித்தது. சென்னையிலிருந்து ஆனந்த்!

-வணக்கம் ஆனந்த்.. என்ன இந்த நேரத்துல...

-பஸ் ஏறிட்டீங்களா...ன்னு தெரிஞ்சுக்கத்தான்!

"ஏறி உக்காந்தாச்சு! பத்து மணிக்கு புறப்பாடு! விடியல் மூணரைக்கு மதுரை...

-நல்லது! மாட்டுத்தாவணி எறங்கி ஆட்டோ பிடிச்சு, ஹோட்டல் ஜே.கே.-ரெசிடென்சிக்கு வந்துடுங்க! நாங்களும் எக்மோர்ல தான் இருக்கோம்.பாண்டியன் எக்ஸ்பிரஸ் தான்... பாக்கலாம் மதுரைல...

-நல்லது 'ஆனந்த்! சந்திக்கலாம்... குட்நைட்.

-குட்நைட்

பேருந்தில் ஏறி, பயணச்சீட்டும் வாங்கி உறங்க யத்தனிக்கும் நான் அமிர்தன்!

ஓய்வு பெற்ற வங்கி அதிகாரி! சென்ற ஜூன் மாதம் தான் பணி ஓய்வு! வயிற்றுப் பிழைப்பின் பொருட்டு, மகாராஷ்டிரம்,கேரளம், கர்நாடம், கடேய்சியாய் சென்னையில் பணியாற்றி விழுப்புரம் நகரில் வசித்து வரும் தனியன்!

'ஆம் தனியன்! 2020 கொரொனா என் வாழ்வோடு கொடூரமாய் விளையாடியது... 30 வருஷமாய் உடனிருந்த துணைவியைத் தூக்கிச்சென்றது! பெற்று வளர்த்த பிரிய மகளிர் இருவரும் தொட்டு அழவும் வழியின்றி தூரம் தடுத்தது! வாழ்வில் பெருந்துணையாக இருந்தவள் சட்டென படுக்கையில்! காய்ச்சல்... இருமல்! தனியார் மருத்துவமனைகள் அனுமதிக்கவும் இல்லை முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரியில் சிபாரிசில் இடம் பிடித்து மருத்துவ மனைக்குள் உயிரோடு சென்றவள் சடலமெனச் சொல்லி சாம்பலைத் தந்தார்கள். தீ நுண்மி! எரித்தது அவளை மட்டுமல்ல....! என் வாழ்க்கையையும் தான்! மகள்கள் இருவரும் அமெரிக்காவில் வேறுவேறு மாநிலங்கள் குடும்பத்தோடு இருப்பதால், இங்கு நான் தனியனாய்! உறவுகளும் நட்புகளும் தான் இப்போதையத் துணை! இருக்கவே இருக்கும் நூலகம், புத்தகம், இசை, தொலைக்காட்சி, கைபேசி போகால் இருக்குமா பொழுது!

அப்போது தான் முகநூலில் இந்த விளம்பரம் கண்ணில் பட்டது. பாண்டியர் சுற்றுலா! அட புதுசா இருக்கே! மதுரை, கீழடி, கழுகுமலை, அழகர்கோவில், தென்காசி, திருக்குற்றாலம் நெல்லை மாவட்ட புகழ்பெற்ற ஆலயங்கள் என பாண்டியர் வரலாற்றோடு தொடர்புடைய இடங்களுக்கு மூன்று நாள் பயணம்.

தொடர்புக்கு ஆனந்த். தொடர்பினேன்! நம்பிக்கை வாக்கியங்கள் விதைத்தவர் சென்ற பயணங்களின் திருப்தி அறிக்கைகளைப் பகிர்ந்தார். சரி.... போய்த்தான் பார்ப்போம்.... குற்றாலம் தவிர பிற பகுதிகள் பார்க்காத்வை. புதிய மனிதர்கள்! புதிய இடங்கள்! நிச்சயம் புத்தனு பவமாக இருக்கும்! போய்க் கொண்டிருக்கிறேன்.

உறக்கம் வரவில்லை! சன்னலைத் திறந்தால் குளிர்க்காற்று! மூடினால் புழுக்கம்... இட நெருக்கம்! இது வழி நில்லாப் பேருந்தாம்! 1 ட்டு 1 அதாவது விழுப்புரத்தில் ஏறினால் மதுரை மாட்டுத்தாவணி தானாம். கூடவே உடன் வரும் உபாதையான சிறுநீர் போகத் தவிப்பு!

ஆனால், வழியில் நின்றதும் நல்லாதாகப் போச்சு! மணப்பாறை நெடுஞ்சாலையில் பெருக்கிகள் ஒலித் துப்பும் ஏதோ ஓர் பேக்கரி + தேநீர்க் கடை.

“ சார்... வண்டி அஞ்சு நிமிஷம் நிக்கும்

பாத்ரூம் போறவங்க எறங்கி போகலாம்

சீக்கிரம் வந்துடுங்க” - நடத்துநரின் அன்புக் கட்டளை'

பேருந்தில் இருந்து, அவசரமாய் இறங்கியவன் சாலையின் ஓர் இருள் பிரதேசத்தில் அவசரம் தணித்தேன்! ஆஹா! ஆனந்தம் சுகம்! நிதானமாய், 'ரெண்டு சால்ட் பிஸ்கட் ஒரு ஸ்ட்ராங் டீ' ப்பா! இளங்குளிருக்கு இதமாய்த் தேநீர் வந்தது!

“எல்லோரும் ஏறியாச்சா... போலாம் ரைட்” - ஏறி அமர்ந்தவன எப்போது உறங்கினேன். தெரியவில்லை விடித்து பார்க்கையில் மதுரை... மாமதுரை! தென் மதுரை! பயணங்கள் சுவாரஸ்யமானவை.

உ

“ பிரயாணிகள் கவனத்துக்கு,

சென்னை எழும்பூரிலிருந்து, செங்கல்பட்டு, விழுப்புரம், விருத்தாசலம், திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல் வழியாக மதுரை வரைச் செல்லும் பாண்டியன் விரைவு வண்டி இன்னும் சில நிமிடங்களில் 3-வது நடைமேடையிலிருந்து புறப்படும்.”

புறப்பட்டது! பாண்டியர் வரலாற்று பயணத்தில் பங்கு கொள்பவர் 21 பேரோடு, பயண நிர்வாகியான ஆனந்த், வரலாற்றுப் பயணத்தினை விரிவாய் விளக்கிட மேடம் பார்வதியும் கொண்ட குழுவினர் III AC 3- TIERl-இல் அடைக்கலமாயினர். குழு என்பதால் டிக்கெட் பரிசோதனைக்கு தேவையில்லை... ஆனந்த் தான் இனி அனைவருக்கும் care taker.

தாம்பரம் வருவதற்குள் பலரும் உறக்கத்தில், பாண்டிய ராஜாக்களோடு கனவு கண்டுகொண்டிருக்க, ஒருத்திக்கு மட்டும் தூக்கம் வரவில்லை.

அவளுக்கு அட்டவணையில் பெயருண்டு தான்! நாம் அழகி என்றே அழைப்போம். அழைப்பதற்கு தோதானக் காரணப் பெயர்தான்.

'தன்' னென்ற ஏசி-யின் குளிர்க்காற்று உடலெங்கும் பரவியிருக்க ஏதோ ஓர் பரவச நிலையை அடைந்திருந்தாள் அழகி!

என் தனிமையைக்கடந்தேகுகின்றன மேகத்திரள்கள் மிகஅலட்சியமாய்.. மிக மிகவும்...கண்டும் காணாமல் நகர்கிறேன்,என் தனிமை கண்டு கை கொட்டி நகைக்கும் நஷத்திரங்களை...கையாலாதவளாய்...என் தனிமையின் மீது பொழியும் மழை வாஞ்சையா...வன்மமா?அடர் ஆரண்யவழி பயணத்தில் இணையாக வருகிறது தேயாமதி..துணையாய்த் துளியொளி! உணர்கிறேன்... வலுவானதென் தனிமை. வேரும் விழுதுமாய் காலம் தின்று செரித்த தருவென..

“எத்தனைச் சுகம்! இந்தப் பயணம்... இந்த ஏகாந்தம் இந்தக்குளிர், குளிருக்கு துணையாய்ப் போர்வை... தனிமையும் கூட ஒரு வசதிதான்... அவனிடமிருந்து விடுதலை வாங்கியபின் தான் சுதந்திரக் காற்றுதனை சுவாசிக்கவே முடிகிறது

நெஞ்சில்உரமும் நேர்மைத்திறமும் இல்லாதவஞ்சகன் அவன்! சொல்லால் அடித்தது மட்டுமின்றி, பெல்ட்டாலும் விளாசுவான்.. மனுசனா அவன்!

வண்டி பாலாற்றுப் பாலத்தில் பயணிக்க.. கூடுதல் சப்தம்!

அழகி கண்ணாடி வழியாக பாலாற்றைப் பார்த்துக் கொண்டு வந்தாள் நிலவின் ஒளியில் ‘பளிச்’ சென்று மணல்திடல் மின்னுவது புதுசாய்த் தெரிந்தது... வெள்ளைத் தாவணி ஒன்றை காய வைத்தது போல ஏதோ ஒரு இடத்தில் நீர்ப் பயணம்.. தூரத்தில் மணல் லாரிகளின் முகப்பு விளக்கு கூட்டம்.

இந்த தேசத்தில் மட்டும் தான் நதிகள் எனும் பொக்கிஷங்களை கபளீகரம் செய்வது நியாயமென அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. நாலைந்து பேர் ஒரு பெண்ணைப் பாலியல் பலாத்காரம் செய்வது போல இருந்தது.

வண்டி பாலம் கடந்ததும் சப்தம் குறைந்தது!

‘அவனை நினைப்பதுகூட பாவம்! எத்தனைக் கனவுகளோடு திருமணம் என்ற உறவினில் கலந்தேன். என் வழியாக வந்த நகைகளும் பொருட்களும், என் சம்பளப்பணமும் என்னவாச்சு என்றே தெரியவில்லை! கேட்டால் அடி.... உதை... என தினசரி வன்முறை தான்! அவன் வாயிலிருந்து வரும் வசவு வார்த்தைகளுக்கு எல்லையே இல்லை....

ஆன்லைன் சூதாட்டத்தில் பேராசையால் தினமும் இழந்தவனுக்கு உடம்பு அரிப்புக்கு மட்டும் குறைவில்லை ஒவ்வொரு ராத்திரியும் அந்த காட்டெருமை... என்னுடம்பை மேய்ந்து குறட்டை விட்டு தூங்கும்.

ஒரு நாளாவது... உனக்கு பிடிக்கிறதா... வேணுமா... வேணாமா.. தேங்க்ஸ்.... என எதையாவது கேட்டிருப்பானா... சொல்லியிருப்பானா. அவனுக்கு நான் ஒரு காமம் தணிக்கும் எந்திரம். என்னுடம்பு அவனுடைய சொத்தாம்.. அதனால் எப்போது வேண்டுமாலும் அனுபவிப்பது அவன் உரிமையாம்... குடிகார கம்னாட்டி! நல்ல தாய்க்கு பிறந்தவனா...அவன்! ஒற்றைப் பிள்ளையைத் தறுதலையாய் வளர்த்து என் தலையில் விடிந்தது இடி! கல்யாண இடி! கருகிப் போனதென்னவோ என் வாழ்க்கை தான்! நான் தான்...! எத்தனை நாள்... எத்தனை வருஷம்.. எவ்வளது துன்பம்... வலி...! நல்ல வேளை குழந்தையென ஒன்று உருவாகவில்லை! என்னோடு சேர்ந்து அந்த சிசுவும் சின்னாபின்னமாப்பட்டிருக்கும்.

எப்படியோ, விவாகரத்தால் தப்பித்தேன்! விடுதலை கிடைத்தது. நல்ல காற்றை சுவாசிக்க முடிகிறது!

பாண்டியன் எக்ஸ்பிரஸ் வேகம் குறைகிறது... வண்டி நிற்கப் போவதற்கான முஸ்தீபு! விழுப்புரம் சந்திப்பு - என்ற மஞ்சள் போர்டு.

பெட்டியில் இருந்து இறங்கினாள் அழகி!

ட்டீ... சாயா... சாயா... பாலேய்... சப்பாத்தி, தோசேய் குரல்கள்..

ஒரு பெரியவரிடம் பால் வாங்கினாள்! நிதானமாய்ப் பருகிட பச்சை ஒளிர்ந்தது. எஞ்சின் குரல் கொடுத்து ‘ஏறும்மா சீக்கிரம்’ என்றது. ஏறி இடமவர்ந்தவளுக்கு தெரியாது. இந்த ஊருக்கு தனக்கும் ஒரு தொடர்பு உண்டாகப் போகிறதென... பயணங்கள் விசித்திரமானவை!

ஒ

### 03.பாண்டியர் முத்து

ஹோட்டல் ஜேகே...ரெசிடென்சி ! மதுரையில் புகழ்பெற்ற நான்கு நட்சத்திர விடுதியாம். வாசலும், முகப்பும் சுத்தமாக இருந்தது. அமிர்தன்... விடுதிக்குள் நுழைந்ததுமே வரவேற்பில் இருந்தவர் வாஞ்சையுடன் விசாரித்தார்.

“பாண்டியர் முத்து குழுவா.... குட் மார்னிங்... சார்”

“வெரி குட் மார்னிங்... ஆமா... என் பெயர் அமிர்தன்”

“ரூம் நம்பர் 114, உங்க ஆதார் அட்டை இருக்கா சார்...”

கேட்டு வாங்கியவர், நகல் எடுத்துக்கொண்டு, பதிவேட்டில் பெயர், கைபேசி எண் விவரம் மற்றும் கையொப்பம் வாங்கி கொண்டு அறை சாவியை அளித்தார்.

“சார்... ரெஸ்ட் எடுங்க.. 6.00 மணிக்கு காபி/ டீ கிடைக்கும்.. 8 மணிக்கு டிபன்... ரெடியாயிடும்... உங்க கூட இன்னொருத்தர் தங்குவார்... “குட் டே சார்”

“நன்றி” - தன் இழுவைப்பெட்டியை இழுத்து கொண்டு அறைக்கு சென்றான் அமிர்தன்.

அறை சுத்தமாகவும் விசாலமாகவும் இருந்தது. இரண்டு தனித்தனிக் கட்டில்கள்.. நீர்க் குடுவை, காபி மேக்கர்.. டீவி... என வசதிகளுக்கு குறைவில்லை.

மணியைப் பார்த்தான்.. 4.25.....! 3.10க்கு மாட்டுத்தாவணியில் இறங்கியவன் மேல் சுழன்றது தூக்கம்...

களைப்பில் கண்ணயர்ந்தவனை எழுப்பியது அழைப்பு மணி!

அரைத் தூக்கத்தில் கதவு திறக்க ஆச்சர்யம்! அறைக்கு வெளியே ஒரு நடுத்தர வயது பெண்...

"எக்ஸ்கியூஸ் மீ.. இந்த ரூம் நம்பர் என்ன...?"

"இது 114 மேடம்.. உங்களுக்கு எந்த ரூம் அலாட் ஆகியிருக்கு"

"119....."

"அட... இந்த ரூம் எதிர்க்கவே இருக்கே..."

"ஓ... சாரி... உங்களை டிஸ்டர்ப் பண்ணிட்டேன்..."

"இட்ஸ் ஒக்கே மேடம்..." - என்றவன் அறைக்கதவை மெல்ல மூடிவிட்டு கழிவறைக்குள் சென்றான்.." மீண்டும் அழைப்பு மணி

"யெஸ் கமிங்" என்றபடி அவரசரமாய் வெளிவந்தவன் கதவைத் திறந்து உள்ளே வந்தவரைப் பார்த்து மகா ஆச்சர்யமடைந்தான்.

சென்னையில் பணியாற்றிய போது, தி.நகர் கிளையில் அவனுடன் பணியாற்றிய காசிநாதன்! காசாளராக பணியில் சேர்ந்து காசாளராகவே பணி ஒய்வு பெற்ற காசிநாதனின் தனித்த அடையாளம் ஜிப்பா வேட்டி... தாடி...!

வங்கியில் காசிநாதனின் செல்லப் பெயர் ஜிப்பா காசி!

"வாங்க... காசி..." ஆனந்த அதிர்ச்சி... "தெரியுதா... நாந்தான் அமிர்தன்"

"ஏந்தெரியாம.... காட்ரேட் அமிர்தன்...! எப்படி இருக்கீங்க.. சமீபத்துல தான் ரிட்டர்ட் ஆனிங்களா... க்ரூப்-ல பாத்தேன்... எப்படி இருக்காங்க குடும்பத்தினர்... இலக்கியப் பணியெல்லாம் நடக்குதா..."

பழைய நாட்களின் படையெடுப்பில்.. சம்பவங்களின் சர வரிசை... நினைக் கூறல் நிமிஷங்கள்....

"கொஞ்சநேரம் படுப்போம்... குளிச்சிட்டு கௌம்ப சரியாய் இருக்கும்"

தனியாய் வந்தவனுக்கு அறிமுகம் ஆனவர் துணையாய் கிடைத்த திருப்தியில் குட்டி தூக்கம்...

விழித்தன் முன், விபூதி குங்குமம் மிளிர, 'பளிச்' சென தயாராகி நின்றிருந்தார் காசிநாதன்..

"ம்... கௌம்புங்க...டிபன் சாப்ட்டு... எட்டரைக்கெல்லாம் பஸ் வந்துடுதாம்"

"இதோ.... சில நிமிஷங்கள்.."

தொலைக்காட்சி செய்திகள் காதில் விழ குளிக்கச் சென்றான். 15 நிமிஷத்தில் அமிர்தனும் தயாராக, 'போகலாமா...'

ரெஸ்ட்டாரெண்டில் அதிக கூட்டமில்லை... ஒருவர்.. இருவராய் வர ஆரம்பித்தார்கள்.பீங்கான் தட்டில் வேண்டியதை எடுத்துக் கொண்டு வாசலை நோக்கி அமர்ந்தவனுக்கு மீண்டுமொரு இன்ப அதிர்ச்சி! விடியலில் வந்த தேவதை.. ரெஸ்ட்டாரன்ட்க்குள் நுழைந்து கொண்டிருந்தாள்.

அமிர்தன் மனம் துள்ளியது..."இந்த நான் இனிய நாள்!".ஏனோத் தெரியவில்லை... அவளை மீண்டும் பார்க்க வேணும் போல இருந்தது அமிர்தனுக்கு.

"கடல் பார்க்க சுகம்... மலை பார்க்க சுகம்

கண் பார்க்க சுகம்.. பெண் பார்க்க சுகம்" - யாரோ திரைப்படப் பாடலாசிரியன் ரசித்து தான் எழுதியிருக்கான்.

பெண் பார்க்கும் படலம்! இளஞ்சிவப்பு.. அதென்ன பிங்க் நிறத்தில் பஞ்சாபியும் வெள்ளையில் பெரிய பூக்கள் நிறைந்த குர்தாவும் அணிந்து... உணவு சேகரித்துக் கொண்டிருந்தாள்... இளஞ்சிவப்பு இனியா...

"சார்.. காசி சார்... சவுக்கியமா..."

"அட.. தோ பார்ரா... வாம்மா... நல்ல இருக்கியா... வா.. இங்கேயே இடமிருக்கு..." என்று அழகியின் பெயர் சொல்லி அழைத்து எனக்கு எதிர் இருக்கையில் அமர வைத்தார் காசி.

"நல்லா இருக்கிங்களா.. வீட்ல மாமி பொண்ணுங்கல்லாம் சவுக்கியமா... சோழா டூர்க்கு அழச்சிண்டு வந்தீங்க... இதுக்கு மட்டும் அவங்கள விட்டுட்டு வந்துட்டீங்க..."

"எம்மா... கடுகு... பொறிஞ்சு தள்ளாத... எங்காத்து மாமி பொண்ணுகள பார்க்க யூ எஸ் போய்ட்டா... ரெண்டுமாசம் ஆகுது.. அப்பப்பா... என்னா ஒரு வேகம்... அவசரம் ! பைதபை... இவரு அமிர்தன்... என்னோட பேங்க்ல ஒன்னா வேல பாத்தவரு... சமீபத்துல தான் சீஃப் மேனேஜரா ரிட்டயர் ஆகி இருக்காரு.. விழுப்புரத்துக்காரரு... பெரிய எழுத்தாளரு.."

"பெரிய எழுத்தாளருன்னா... கேபிடல் லெட்டர்ஸ்ல மட்டும் எழுதுவாரா...சாரி சார். சும்மா ஜோக்.. தான்... சென்னைல.. மியாட் ஹாஸ்பிட்டல்ல... அக்கவுண்ட் செக்ஷன்ல... ஒர்க் பண்றன்... உங்களை சந்திச்சதுல மகிழ்ச்சி.."

'அட! அழகிகளுக்கும் தேவதைகளுக்கும் கூட பெயர் இருக்குமா" காலை சிற்றுண்டி.. வெகு ருசியாக இருந்தது!

ஜே.கே. விடுதியின் வெளியே நின்றிருந்தது சொகுசுப் பேருந்து சாய்வு இருக்கைகள், குளிர்சாதன வசதி என ஒய்யாரம் தான். ஏறி இடம் பிடிக்கும் வண்ணத்துப்பூச்சிகளாய் இருக்கைகள் தேடி அமர்ந்தனர். முதல் இருக்கையில் ஆனந்த் வலதுபுற முதல் இருக்கையில் பார்வதி மேடம்... உடன் தொல்லியல் வல்லுநர் வேதாசலம் அனைவரும் ஏறிட மொத்தம் 22 பேர்...

“வெற்றிவேல்! வீரவேல்” - ஆனந்த் தான் முதல் இருக்கையில் இருந்து கோஷமிட்டார்... இந்தப் பயணங்களில் இது ஓர் சடங்கோ...

பழையப் பயணர்கள் உற்சாகக் குரலிலும், புதியப் பயணர்களின் குரல் முனகல்களிலும்... எதிரொலிக்க பேருந்து புறப்பட்டது.

பார்வதி மேடம்.... தான் உரையைத் தொடங்கினார்.

“ழுடிடின அடிசா¡பே வடி யடட.... எல்லோருக்கும் காலை வணக்கம்... நான் பார்வதி.....ஊயடட அந ஞயவர! - இந்த ட்டுரோட கைட்...

இந்தப் பயணத்தில் நாம் பாண்டியர்களின் சிற்பம், ஓவியம், பாசனமுறைகள், கோயில் கட்டுமானங்கள் இருக்கிற இடங்களைப் பார்க்கப் போறோம்.

இன்னைக்கு கீழடி..பிற்பகல் கிளம்பி அழர்கோவில் நம்ம கூட மிஸ்டர் வேதாசலம் வந்திருக்கார்... நம்ம கூட! ஆர்க்கியாலஜி டிபார்ட்மெண்ட்ல பல வருஷம் பணிபுரிந்த அனுபவம் கொண்டவர். பாண்டியர் குறித்த நூல்களும் எழுதியிருக்கிறார்! அவரை நாம முழுசாய்ப் பயன்படுத்திறது நம்ம பயணத்துக்கு நல்லது! இப்போ உங்ககிட்ட ஒரு க்ஷடிடிமடநவ- கொடுப்பாங்க! சுருக்கமான பாண்டியர் வரலாறு... ஆங்கிலமும் தமிழும் கலந்து,நானே தயாரிச்சது. பேருந்து பயணங்களின் போது நான் பாண்டியர் குறித்து விவரமா சொல்வேன்!” சார்தான் மிஸ்டர் வேதாசலம்!” பார்வதி மேடத்துக்கு பக்கத்தில் இருந்தவர் எழுந்து நின்று அனைவரையும் வணங்கினார்.

௳

## 04.கீழடியில் மாமதுரையின் மேலடி

நெடுஞ்செழியன் ஆட்சியில் மதுரை நகர் மாண்பு மிக்கு விளங்கிற்று. நகரைச் சுற்றி ஆழ்ந்த அகழியும் அதையடுத்து மிகவுயர்ந்த மதிற் சுவர்களும் இருந்தன. மதிலின் தலையில் போர்க்குரிய படைப் பொறிகளும் படைவீரர் இருந்து காக்கும் ஞாயில்களும் அமைக்கப் பெற்றிருந்தன ; பாண்டி வேந்தர் பெற்ற வெற்றிக் கொடிகள் பல ஆங்காங்கே வானளாவ உயர்த்தப் பட்டிருக்கும். நரக வாயிலின் மேனின்ற மாடம் மலைபோல் உயர்ந்து தோன்றிற்று ; மேனின்ற மாடம் மலைபோல் உயர்ந்து தோன்றிற்று ; வையையாறு போல மாவும் மாக்களும் இனிது செல்லுமாறு அகலமும் உயரமும் கொண்டு வாயில் இலங்கிற்ற அதனைக் கடந்து உள்ளே சென்றால் அகலமான தெருக்கள் காட்சியளிக்கும். அவற்றின் இருமருங்கும் நின்ற பெருமனைகளும் மாளிகைகளும் சில்காற்றும் வெயிலொளியும் புகுந்து உலவும் பலகணி பெற்றுக் காண்பார் கண்கட்கு விருந்து செய்தன. மனைகளில் ஏற்போர் ஏற்க ஈவோர் ஈய இன்பமும் பொருளும் அறநெயியில் இயங்கின. கூத்தும் இசையும் விழவும் வேள்வியும்மிக்கு விளங்கின.

பேருந்து கீழடியை நெருங்கியது! தொல்லியல் துறையில் பணியாற்றி இந்த பாண்டியர்ப் பயணத்துக்காக பிரத்யோகமாக அழைத்து வரப்பெற்ற அய்யா வேதாசலம் தன் விரிவான உரையைத் தொடங்கினாள்.

“கொஞ்சம் எல்லோரும் அமைதியா... கிட்ட வந்து நில்லுங்க...

இந்தக் கீழடி கிராமம் மதுரைக்கு அருகாமையல இருந்தாலும், தற்போது சிவகங்கை மாவட்டத்துக்குள்ள அடங்கி வர்ரது. கீழடி ஆய்வு, நாட்டோட தொல்லியல் ஆய்வு வரலாற்றிலேயே முக்கியமான மைல்கல்லாப் பாக்கப்படுது.

அதோ தெரியறதே ஆறு சதுரக்குழிகள் இருந்து தான் பல்வேறு பொருட்கள் திகடச்சது.... கீழடியில் கிடைச்சிருக்கிற செழிப்பான அதே சமயம் மறுக்க இயலாத நர்கமயமாக்கல் தடங்கள் தென்னிந்திய வரலாற்றை மட்டுமல்லாமல் ஒட்டு மொத்த இந்தியத் துணைக் கண்டத்தின் வரலாற்றை மறு ஆய்வுக்கு உட்படுத்தியிருக்கு”

“பழசைல்லாம் மறக்கணும் தான் நான் இந்த பயணத்துக்கே வந்தன்! இங்க என்னடான்னா ரொம்ப பழசையெல்லாம் தோண்டி எடுக்குறாங்களாம்” - முணு முணுத்தபடி அகழ்வு பன்னங்களை ஒட்டி கட்டப்பட்ட வண்ணப் புகைப்படங்கள் அடங்கிய. பேனர்களைப் பார்க்க நகர்ந்தாள் அழகி...

கூட்டத்தில் இருந்தன் அமிர்தனும் மெல்ல நழுவி இந்த தனிமையைப் பயன்படுத்தி அவளிடம் ஒரிரு வார்த்தைகளாவது பேசிவிட எண்ணி அவனுக்கு எதிர்புறத்தில் தொடங்கி, சற்றே வேகமாக நகர்ந்து அவளருகில் செய்ய முயற்சித்தான்.

கூட்டத்தில் இருந்து ஒரு சேல் கேள்வியொன்றை எழுப்பியது... “இந்த ஆய்வு மூலமா நமக்கு என்னென்னவிவரங்கள் தெரிய வர்ரது சார்...?”

வேதாசலம் சார் கேள்வி வந்த திசை பக்கம் திரும்பினார். “நல்ல கேள்வி! இந்த கீழடிப் பண்பாடுன்றது... கிட்ட தட்ட 2000 ஆண்டு பழமை வாய்ந்த பண்பாடு.... இந்த

ஆய்வுல... அன்றையத் தமிழர்களோட வேளாண் அறிவு, கால்நடை வளர்ப்பு, கட்டத் தொழில் நுட்பம், கட்டுமானப் பொருட்களோடப் பயன்பாடு, தமிழ் பிராமி, தமிழி எழுத்து வகைகள், நெசவு, கைவனைத்திறமை, வணிகம், அணிகலன், விளையாட்டு, பொழுதுபோக்கு, வாழ்வியல்முறைன்னு ஏகப்பட்ட புது விஷயங்கள் கிடைச்சது... அதெல்லாமே ஒரு புதிய கதவைத் திறந்துன்னு சொல்லலாம்... கீழடி ஆய்வுகள்ள கிடைச்ச பொருட்களை வச்சி ஊருக்குள்ள அருங்காட்சியகம் ஒண்ணு உருவாக்கி இருக்காங்க... அங்க இன்னமும் சுவாரஸ்யமான விஷயங்கள் உங்களுக்கு கிடைக்கும்.

எதிர்திசையில் புறப்பட்ட அமிர்தன் சற்று வேக வேகமாய் நடந்து அழகிக்கு அருகில் சென்று விட்டான்...

“பாத்து... கவனம்... பள்ளத்துல விழுந்துடப் போறீங்க....”

“இன்னொரு முறை தெரிஞ்டே விழுவாங்களா யாராவது...”

“புரியலன்னா ஒண்ணும் குந்தகமில்ல... பாருங்க... அந்த காலத்துலயே தங்க நகை யெல்லாம் செஞ்சிருக்காங்க....”

“பெண் என்றால் பெண்”

“என்னது...” அழகியின் குரல் அதட்டல்.

“அதில்லீங்க... பானை கெடச்சிருக்கு, ஒரு கெடைச்சிருக்கு.. என்னன்னவோ பொருளெல்லாம் கெடச்சிருக்கு... உங்க கண்ணுக்கு தங்க நகை மட்டும் தெரியறதே....”

“ம்ம்.. சட்டியும் பானையும் வச்சிட்டு நானென்ன சமைக்கவா போறன்... ஹாஸ்டல் சோறு... எனக்கென்ன வேற வேணும்..”

“சார் கௌம்புவோம்... மியூசியம் போகலாம்.... பஸ்ல ஏறுங்க...”

உரையாடலை உடைத்தது ஆனந்த்தின் குரல்..

கீழடி அருங்காட்சி-யகம் உண்மையில் மிக சுவாரஸ்மானது தான்...

வெவ்வேறு வகையிலானப் பொருண்மைகளில் தனித் தனி அறைகளில் பூமிக்கடியில் இருந்து கிடைத்த பொக்கிஷங்கள் பாதுகாப்புடன் பார்வையாளருக்கு காட்சிப் பொருளாய் வைக்கப்பட்டிருந்தன.

பள்ளி மற்றும் கல்லூரி மாணவர் கூட்டம் நாலைந்து பேருந்துகளில் வந்திறங்கியிருந்தது.

பழசைப் பார்ப்பது இருக்கட்டும் நம்ம புதுசு எங்கே இருக்கு நோட்டமிட்டான் அமிர்தன்.

தொல்லியல் துறை விற்பனையகத்தில் கீழடி குறித்த நூலை வாங்குபவளை நெருங்கினான்.

“அடேய்... நீ யூத்து இல்லடா... யூத் மாதிரி” அசரீரீ-யில் சத்யராஜ் நக்கலாக சிரித்தார். காதலுக்கு கண்ணில்லை... என்பார்கள்.. வயது கூடவா இல்லை...

‘முதல் மரியாதை-யில் சிவாஜி செய்தால் சரி... நான் செய்தால் தப்பா? போங்கடா... உங்க கேள்வியும் நீங்களும்... என் வழி... தனி வழி” என உள்ளுக்கு உறுதி வாசித்தவன் மெல்ல அவளிடம் பேச்சு கொடுத்தான்.

“கீழடி பத்தி ஒரு புக் வந்திருக்கு... 50 ரூபாயாம்... ஐநூறு ரூபா கொடுத்தா சில்லறை இல்லன்றாங்க....”

“இந்தாங்க எதுக்கு சிரமம்... இருக்கட்டும் பரவாயில்ல”

“இதுல என்ன சிரமம்... மொதல்ல புஸ்தகத்த வாங்கிட்டு வாங்க... நம்ம குரூப் எல்லாம் உள்ளே போயிட்டாங்க...”

‘கீழடி’ - வைகை நதிக்கரையில் சங்க கால நகர நாகரீகம்’ - நூல் 50 ரூபாய்க்கு அதிகமான மதிப்பைக் கொண்டிரந்தது. சிறப்பான புகைப்படங்கள்... விரிவானத் தகவல்கள்.

காட்சியகத்தின் பல அறைகளை வேக வேகமாக கடந்தவள் அணிகலன் மற்றும் மணிகள் அறையில் நின்றாள்! அவள் மணியை ரசிக்க, அமிர்தனோ அம்மணியை ரசித்தான்.

தங்கத்தில் காதணிகள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த இடத்தில் நின்றவள்...” இந்த டிசைன் நல்லாருக்குல்ல...” என்றாள்.. அவன் அவளைக் கண்டு புன்னகைத்தான்.

அரங்கங்களை சுற்றிப் பார்த்து விட்டு வெளியே வர ஆனந்த-தின் அன்பு அழைப்பு...

“ சார் உங்களுக்காகத் தான் வெயிட்டிங்.... மியூசியம் பின்னணியில் ஒரு குரூப் போட்டோ எடுத்துடலாம்.. வாங்க... வேகமா வாங்க மேடம்...”

“சார் இன்னும் கொஞ்சம் க்ளோசா நில்லுங்க”

இந்த முறை புன்னகை அழகியிடமிருந்து....!

‘எது நடக்கிறதோ- அது

நன்றாகவே நடக்கிறது!’

05.சுட்டபழமா...சுடாத பழமா...?

பழமுதிர்சோலை

கீழடி-யில் புகைப்படப் படலம் முடிந்து மீண்டும் மதுரை ஜேகே விடுதி மதிய உணவு!

சிறு ஓய்வு.

'ஏன் என் மனம் அவளை நாடியே ஓடுகிறது! என் தனிமையின் தேடலா... முதுமையில்

காதலா. ஆனால் ஏதோ ஒன்று அவளை என் பக்கம் ஈர்க்கிறதே... அதென்ன.. அதன்

பெயரென்ன...'

'அமிர்தனுக்குள் யோசனைக் குமிழ்கள்....

காசிநாதன் லேசானக் குறட்டையோடு உறங்கியே விட்டார்.

நான்கு மணிக்கு ஆனந்த் அழைப்பு!

காஃபி, சிற்றுண்டி... பின் பேருந்தில் ஐக்கியம்! அழகர் மலை பயணம். காசியை

எழுப்பி, முகம் கழுவிக் கிளம்பி பேருந்து ஏறிய, 'அவலிருகில் பெங்களூரில் இருந்து

வந்திருக்கும் செல்வி உட்கார்ந்து விட்டார்.

'டுடிஎந னுநடயலநன in டுடிஎந னுநாநைக' - எனும் புதுமொழியைத் தன் புத்திக்கு

சொன்ன அமிர்தன், பாரு மேடம் பக்கத்தில் அமர்ந்தான்.

வைகை

"பழமுதிர் சோலையில் தான் முருகன் அவ்வையிடம் கேட்ட 'சுட்ட பழமா.... சுடாத

பழமா' - கேள்வி" வேதாசலம் சார்.

அழகிக்குள் ஒரு சந்தேகமும்ந்தது... "நான் சுட்ட பழமா... சுடாத பழமா...?"

கள்ளழகர் சன்னதியில் அதிக கூட்டமில்லை! சுந்தரராஜன் புரவியின் மீது அமர்ந்து

கள்ளழகராக காட்சி தந்தார். அ/ரகர் கோயிலை வீட்டு வெளியே வந்தால் அழகே ஒன்று

சேர்ந்தார் மோல் வண்ணங்களால் அலங்கரித்த தேர்....!

கம்பீரத் தேருக்கு முன்னால் நின்று புகைப்படச் சுடுதல்... அமிர்தனும் அழகியும்

விதிவிலக்கா.

ஜே.கே. ரெசிடென்சி விடுதியில் இரவு உயவு 'அபாரம் பரிமளம்' வகை! சைவம்

அசைவம் என பிரித்து மேய்ந்திருந்தார்கள்.

அறைக்குள் வந்து படுத்த அழகிக்கு உறக்கம் வரவில்லை. உடனிருந்த செல்வி மேடம் உறங்கிவிட்டார்கள்.

குண்டு வீச்சில் பலியான நகரம் :
உதயமெது அஸ்தமனமெது என்றறியாமல்
ஓடுமென் மனக்குதிரை திசை தெரியாமல்
குண்ட வீச்சுக்குப் பலியான நகரமாய்
காயப்பட்டிருக்கிறது மனசு
இரக்கமில்லா ஏவுகணை வார்த்தைகளால்
இதயம் முழுக்கப் பிணங்கள்
நம்பிக்கைக் கட்டிடங்களின்
இடிபாடுகள் எங்கெங்கும்
சிதைந்து சிதிலமானது
சிந்தனை யோட்டம்
நிர்ச்சலன சவமாய் நிம்மதி
ஆளுமைகளின் அதிகார அராஜகத்தில்
சுயத்திற்குச் சோதனை
சுவாசப் பைகளில் விரக்தி
வெளியிடுவதோ வேதனை
அமாவாசையாய் இருள் குவிய
குழும் மனச்சோர்வு பனிப்புகையாய்
உதயமெது அஸ்தமனமெது என்றறியாமல்
ஓடுமென் மனக்குதிரை திசை தெரியாமல்

ஓ

## 06. தென்னிந்தியாவின் எல்லோரா'

பாண்டியமுத்தின் இரண்டாம் நாள் இனிதே தொடங்கியது. காலை காஃபி யாத்திரை முடிந்ததுமே ஆனந்த்-தின் கட்டளைக்குரல் : " டிலே பண்ணாம சீக்கிரம் கிளம்பி பஸ்ல ஒக்காந்துக் கோங்க ஃப்ளீஸ்" குந்திக் கொண்டது சுற்றுலாக் கூட்டம்.

வழியில் கோவில்பட்டி அருகே சாலையோரக் கடையொன்றில் தேநீர் ஓய்வு! தமக்குப் பிடித்த இனிப்பு, மிட்டாய் வகைகளை வாங்கி கொண்ட பின் பயணம் தொடர.... வாங்கிய நொறுக்குகள் வலம் வந்தன.... பேருந்துள்

ஏதோ ஓர் சுற்றில் அழகி நேரடியாக அமிர்தனிடம் தான் வாங்கிய இஞ்சி முரப்பாவை நீட்டினான்..."அட.... காரமும் இனிப்பும் கலந்த சுவை.... தேங்க்ஸ்...."

"பெண்கள் வாழ்க்கை மாதிரி...."

“யப்பா... எல்லாத்துக்கும் ஒரு தத்தவ விளக்கமா... தாங்கலதாயே!” பேருந்து கழுகுமலையே நெருங்கி கொண்டிருந்தது.

“அதோ அந்த மலைதான்.”- ஆனந்த்...

அதை மலையென்று சொல்ல இயலாது... சற்றே பெரிய குன்று என்று சொல்லலாம். வெட்டுவான் கோவில் - கீழே உள்ள பூங்கா வாசலில் பேருந்து நிற்க, வேதாசலம் சார் குரல் அழைத்தது.

“எல்லோரும் இறங்கியாச்சா... அப்படியே... அந்த புளிய மரத்தடியில கூடி நில்லுங்க...”

கூட்டம் ஆவலுடன் அவர் முகத்தைப் பார்த்தபடி காத்திருந்தது. தொண்டையைத் செருமிக் கொண்ட வேதாசலம் உரையாற்றத் தொடங்கினார். அமிர்தன் அழகி நின்றிருந்த திசைக்கு எதிர்த்திசையில் நின்று அவளைப் பார்த்தபடி நின்றிருந்தான்.

“கழுகுமலையோட பண்டைய காலத்து பெயர்... ‘அரைமலை... இந்த மலையோட கிழக்குப் பகுதியில வெட்டுவான் கோயில் இருக்கு... இந்த மலையில குடைவரைக் கோயில் மட்டுமல்லாம அதிக எண்ணிக்கையில சமணத் தீர்த்தங்கரர்களோட புடைப்பு சிற்பங்களை பார்க்கலாம்... தமிழகத்துல வேற எங்கேயும் இவ்வளவு சமணச் தீர்த்தங்கரர்ங்களோட புடைப்பு சிற்பங்களை பார்க்கலாம்... தமிழகத்துல வேறஎங்கேயுமே இந்தளவுக்கு சமணச் சிற்பங்கள் இல்லைன்னே சொல்லலாம்....

கி.பி.8ம் நூற்றாண்டுல மாறஞ்சடையன் என்கிற பாண்டியமன்னனால கட்டத் தொடங்கி முற்றுப்பெறாமல் விடப்பட்டது... வரலாற்றுல பலகேள்விகளுக்கு பதில் கிடைக்காமலேப் போகலாம்”

அழகி அப்போது தான் கவனித்தாள்... அமிர்தன் தன்னையே கண்ணிமைக்காமல் பார்த்து கொண்டிருப்பதை!

“வெட்டுவான்கோயிலோட தனிச்சிறப்பு என்னன்னா... பெரும்பாறை ஒன்னை மட்டும் மேலேயிருந்து குடைஞ்சு செதுக்கி கட்டியிருக்கிற கோயில்... ஆனா... முழுமைப்பெறாத கோயிலா நின்று போயிட்டுது! ‘எல்லோரா’ கேள்விப்பட்டிருப்பீங்க... இந்த வெட்டுவான் கோயில் ‘தென்னிந்தியாவின் எல்லோரா’ன்னு அழைக்கப்படுகிறது. பொதுவாக கட்டங்களை ஆலய கோபுரங்களைக் கட்டும் போது பூமிக்கடியில் அஸ்திவாரம் அமைத்து கீழிருந்து மேலாக கட்டத் தொடங்குவதான் வழக்கம்... ஆனால் வெட்டுவான் கோவிலோ மேலிருந்து கீழாக செதுக்கி கட்டப்பட்டுள்ளது.

அஸ்திவாரம் எதுவும் இல்லாமல் பாறையை ‘பா’ வடிவத்தில் 7.50 மீட்டர் ஆழத்துக்கு வெட்டி யெடுத்து அதன் நடுப்பகுதியை கலசமாகக் கொண்டு சிகரம், தளம், கூரை பின்பு சுவர்கள் என மேலிருந்து கீழ் நோக்கி குடையப்பட்டிருப்பது தான் இந்த வெட்டுவான் கோயிலோட சிறப்பு.... மட்டுமல்லாமல் தமிழ்நாட்டிலேயே இது போல வேறெங்குமே இல்லை என்பது தனிச்சிறப்பு.இந்த கோபுரத்தில் அமைந்திரக்கும் சிலைகள் அனைத்தும் ஒரே பாறையில செதுக்கப்பட்டவை.... நீங்க மேலப் போயி பாக்குறப்போ ஆச்சர்யப் படுவீங்க.....”

படியேறத்தொடங்கினர்... பாண்டிய முத்துகள்! கழுகுமலைவெயில்... காலையிலேயே தன் வேலையைக்காட்டியது... குன்றேறும் குமரன், குமரிகள் வியர்வை வழியே ‘புஸ் புஸ்’ என மூச்சு விட்டு உச்சியை அடைந்தனர்.

ஆச்சர்யம்! மகா ஆச்சர்யம்.. வேதாசலம் சார் சொன்னது குறைவு தான்... எப்படி தோன்றியது இந்த யோசனை.. எவன் செய்தான் இந்த சாதனை.

அமிர்தன், எல்லோரையும் போலவே கோபுரத்தைச் சுற்றி வந்தான்... உச்சியில் இருந்து கழுகுமலை ஊரின் வீடுகளும், விவசாய நிலங்களும் பறவைப்பார்வையில் தெரிந்தன. குன்றுக்கு கீழிருந்த குளத்தில் பச்சை நிறப்பாசியில் பிரதிபலித்தான் காலைச் சூரியன்.... அழகி எங்கே என்று தேடினான்... அவளோ பெங்களூர் செல்விமேடத்துடன் சமண சிற்பங்கள் நோக்கி நடந்து கொண்டிருந்தாள். அவனும் தொடர்ந்தான்.

”நெடுமாறன் பாண்டிநாட்டு அரசுபுரிந்து விளங்கியகாலத்தில் சமண சமயம் சிறப்புறப் பரந்திருந்தது. மதுரை நகரைச் சூழவுள்ள ஆனைமலை நாகமலை ஆகிய பகுதிகளில் சமண சமயச்சான்றோர் தங்கிச் சங்கங்கள் அமைத்துத் தம்முடைய சமயப்பணி செய்தொழுகினர். அவர்களது அறவுரையைக் கேட்ட வேந்தனான அரிகேசரி நெடுமாறன், தானும் அவற்றை யேற்றுச் சமணனாகி, அச்சமயத்தின் வளர்ச்சிக்கு நன்குசெய்து வரலானான். நாட்டில் சமணசமய ஒழுக்கம் தலைமைநிலை எய்திற்று. அரசன்எவ்வழி குடிகள்அவ்வழி என்ற கொள்கைக்கேற்ப, நாட்டு மக்களில் மிகப்பலர் சமணசமயத்தை மேற்கொண்டனர்.

இந்த சமணப் புடைப்பு சிற்பங்கள் எல்லாமே பராந்தக நெடுஞ்சடையான காலத்துல, உருவாக்கினவை. சமணர் பள்ளி ஒண்ணும் இங்கு இருந்ததா கல்வெட்டுகள் சொல்வது”-பார்வதி மேடம் தன் வழிகாட்டிப் பணியை வழிமொழிந்தார்.

தீர்த்தங்கரர் சிற்பத் தொகுப்பை மறைத்தபடி புரிதாய்க் கட்டியிருந்த ‘மலைகாத்த அய்யனார்’ கோவில் படிகளைத் தாண்டி... ஒரு பழைய விளம்பரம் பலகை.

மகாவீரரின் பொன்மொழிகள்

பிற உயிர்களுக்கு தீங்கு செய்யாதே
பொய் பேசலாகாது
திருடாதே
சிற்றின்பம் தவிர்
உடைமைகள் மீது ஆசை அறு
மது தீங்கு

அந்தப் பலகைக்கு அருகில் தான் காலிக்குப்பிகள் குவிந்து கிடந்தன. கூடவே உடைந்த வளையல்களும்... உபயோகித்து கிடாசிய ஆணுறைகளும். அய்யனார்கோயில் வாசலருகே... பலியிடப்பட்ட ஆட்டுரத்தத்தின் மெழுகல்... திட்டாய் உறைந்திருந்தது.. கருஞ்சிவப்பாய்... சற்று தூரத்தில் இரண்டுஆடுகள் கட்டிப்போடப்பட்டிருந்தன. பெரிய குடும்பமொன்று படையலுக்காய் வந்திருக்கலாம்... பெண்கள் அடுப்புமூட்டி தங்களைப் புகைக்குள் கரைத்துக்கொண்டிருந்தனர்.ஆண்களின் குரல் மட்டும் சற்று தூரத்திலிருந்து கேட்டது.

“அய்யனார் கோயில் குதிரையை மற்றும் முகப்பை மறைத்தபடி ஒரு பெரிய உபயதாரர் போர்டு...” கே. குழந்தைசாமி கே. கஸ்தூரி வடக்கு வீதி, கழுகுமலை.

படிக்கட்டுகளில் வெண்மையும், சிவப்புமாய் வர்ணங்கள், பெரியஆலமரம், மண்தொடும் விழுது கூட்டம்.

“அந்த படிகட்டுகளைப் பாருங்க... ரத்தம் வழியறத மாதிரியில்ல..”-- அழகிதான் தொடங்கினாள்.

“ஆமா... நீங்க சொன்ன பிறகு தான் எனக்கு தோணுது” - அமிர்தனின் சாகச ஜால்ரா.

“ஒரு விஷயம் கவனீச்சிங்களா... கிட்ட தட்ட 1000 வருஷமா இந்த தீர்த்தங்கரர் திருவுருவச் சிலைங்க... இங்கேயே இருக்கு... ஆனா திடீர்னு ஒரு அய்யனார் கோயில்... கட்டப்படுது... அதுவும் சமணச்சிற்பங்களை மறைச்சு... இப்படியேத்தான் எங்க சமண மதம் கொஞ்சகொஞ்சமாய் அழிஞ்சது...”

“அட! நீங்க சமணமா...... ஜெயின்னு சொல்வாங்களே... அவுங்களா...”

“ஜெயின்-னு பேர் வச்சிகிட்டதல்லாம் வடக்கத்தியான்ங்க... தமிழ்நாட்டுல காஞ்சிபுரம் பக்கம், செஞ்சிபக்கமெல்லாம் சமணமதத்தை சார்ந்தவங்க இன்னமும் அருகரை வழிபட்டுகிட்டுதான் இருக்காங்க.”

‘எனக்கு இது புதுசெய்தி... செஞ்சி மேல்மலையனூர் பக்கம் நயினார்..ன்னு சொல்வாங்க... அவுங்கல்லாம் சமணத்த சார்ந்தவங்கன்னு கேள்வி பட்டிருக்கேன்.”

”சரி எறங்குவோமா... கொடும கொடுமன்னு கோயிலுக்குப் போனா அங்க ஒரு கொடும ஜிங்கு ஜிங்குன்னு ஆடுச்சாம்... நம்மதுயரத்த மறக்க ★டூர் வந்தா... இந்த கண்ராவியெல்லாம் கண்ணுலப் பட்டு தொலைக்குது....” - அலுத்துக் கொண்டாள் அழகி...

“ படியில் பாத்து எறங்குங்க.....” என்றபடி கை நீட்டினான் அமிர்தன் பாறைப் படிகள் கரடுமுடராக இருந்தன.. கொஞ்சம் தவறினாலும் ரத்தசேதம் நிச்சயம்... ’என்ன இந்த மனுசன்! அநியாயத்துக்கு அனுசரணையா இருக்காரே... நம்பிக்கை தரரா... நம்பி கை கொடுக்கலாமா..’ - எண்ணிலடங்கா யோசனை அழகிக்குள்.

‘பிடிச்சுக்க ஒரு விரல் கிடைச்சா நல்லதுதானே... எல்லாருமேவா அந்த அயோக்யனப் போல இருப்பாங்க...’- கையை நீட்டினாள் அழகி’

அவள் கையை இறுகப்பற்றி, அவளோடு மெல்ல படியிறங்கினான் அமிர்தன்.

‘வாழ்க்கையில ரொம்பவும் கஷ்டப்பட்டு வந்திருக்ரீங்கன்னு நெனக்கிறேன்.’

அமிர்தனின் முகத்தை... கண்களை நேராகப் பார்த்தாள் அழகி.

‘நானுறங்கும் நாள் வேண்டும்
சாய்ந்து கொள்ளத் தோள் வேண்டும்
என் கண்ணில் நீர் வேண்டும்
சுகமாக அழ வேண்டும்’ - ரஜினிப் படப் பாடல் துண்டு மனதுள் ஓடியது.

‘இந்தாளை நம்பலாமா... இவனும் வழக்கமா ஆண்தானா.... அன்பும் அனுசரனையும் நிஜந்தானா... நம்மகதையை நம்பி இவரிடம் சொல்லலாமா..’ கேள்விவலையில் அழகி!

‘என் கிட்ட சொல்லாம்னு தோணுச்சுனா சொல்லுங்க... வந்ததுலருந்து பாக்குறன் ஒரே இறுக்கமா இருக்கீங்க.... அதனால தான் கேட்டேன்’

“வாழ்க்கைன்ற சாட்டையில பல அடிகள் வாங்குனவ நான்... நம்பி ஒருத்தனுக்கு கழுத்த நீட்டின(ன்)! மஞ்சள்கயிறையே சுருக்குகயிறா மாத்திட்டான்... நெதமும் சந்தேகம்.. குடி.. அடி..... வார்த்தைக் குதறல்... வாழ்க்கையோட இயலாமைகள் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் காலைக் கட்டிப் போடும் கயிறா... இருந்தது... என்னோட சிறகுகள் வெட்டப்பட்டு கூண்டுப்பறவையா... வாழ்ந்தன்!”

“அடடா! கேக்கவே கஷ்டமா இருக்குதே...”

“நல்ல வேளையா கொழந்தைங்க ஏதும் பிறக்கல...

ஒரு வழியா விவாகரத்து வாங்கி... ஒரு வேலைக்கெடச்சு... இப்போதான் கொஞ்சம் சுதந்திரக் காத்து சுவாசிக்க முடியுது"

"எங்க வேலன்னு சொன்னீங்க..."

'மியாட்-ல... அக்கவுண்ட் செக்ஷன்ல இருக்க(ன்).... பக்கத்துலயே ராமாபுரத்துல லேடீஸ் ஹாஸ்டல்ல தங்கி இருக்கன்'

தரைக்குவந்தவர்களுக்கு காத்திருந்தது காலைச் சிற்றுண்டி. உள்ளூர்க் குடும்பமொன்று, இட்லி, பொங்கல், பூரி, வடை-யென தயாரித்துக் கொணர்ந்து பரிமாறக் காத்திருந்தனர்.

பயணர்கள் மலையேறி இறங்கியக்களைப்பில் மூச்சுவாங்க... நின்று தங்களை ஆசுவாசப்படுத்திக் கொண்டனர்.

வேதாசலம் சார்... தொண்டையைச் செருமிக் கொண்டு தொடங்கினார்.

"இந்த கழுகுமலை சமணர் படுகைகள்... கி.மு. 768-800 ம் வருஷத்துல... பாண்டிய மண்ணன் பராந்தக நெடுங்சடையன் காலத்துல திகம்பர சமணத் துறவிகள் தங்கி சமண சமயத்தைப் பரப்பிய இடம் இந்த மலையோ உச்சியில் உள்ள வட்டெழுத்துக் கல்வெட்டு பராந்தக நெடுஞ்சடையின் ஆட்சி காலத்துல இங்கன... ஒரு சமணர் பள்ளி உருவாக்கப்பட்டு சிறப்பா நடத்தி வந்ததைச் சொல்றது..இந்த சமணச்சிற்பங்கள் எல்லாமும் புடைப்புச் சிற்பங்கள்ன்ற வகையில செதுக்கப்பட்டவை.. கிட்டத்தட்ட 150 சிற்பங்களாவது இருக்கும். இந்த இடம் ஒரு சமண மையமா இருந்திருக்கணும்.

"பள்ளி, ன்ற கான்செப்ட்டே சமணர் காலத்துல தான் அறிமுகப்படுத்தி இருப்பாங்கன்றது உண்மையா சார்..." பார்வதி மேடம் தான் கேட்டது.

" மிகச் சரியாச் சொன்னீங்க.... மேடம்"

உணவுப் பரிமாறிய உள்ளூர்க்காரர்க் குரல் :

"அய்யா இந்த வெட்டுவான் மலை சம்பந்தமா ஒரு செவிவழி கதை இருக்கு சொல்லலாங்களா...."

"அடடே... சொல்லுங்க சொல்லுங்க..."

"பாண்டிய நாட்டுல அந்த நாள்ல.. புகழ் பெற்ற சிற்பி ஒருத்தரு இருந்தாருங்க... உயிரில்லாத கல்லுக்கும் உயிர்க் குடுக்குற வித்தை தெரிஞ்ச மனுசன்... அவரு!

அவருக்கு ஒரு மகன் இருந்தான்! ரெண்டு பேரும் ஒரு நாள் பக்கத்துல ஒரு கோயில் திருவிழாவுக்கு போனாங்க....! திருவிழாக் கூட்டத்துல... அவரோட மகன் தொலைஞ்சு போயிட்டான்...! அழுது பொலம்புராரு... வேண்டாத கடவுளில்ல... போவா கோயில்ல...! ஆனா விதி... யார விட்டது! காணாப் போன மவன் போனவன்தான் கெடக்கவேயில்ல! வருஷம் பல போச்சுது...காலம் உருண்டு பெரண்டது! மகனை எழுந்து வூட்லயேக் கெடந்த சிற்பிய... மத்த சிற்பிங்கல்லாம் ஆறுதல் சொல்லி இந்த 'அரைமலை'க்கு கூப்ட்டுட்டு வந்தாங்க.. அவரும் அங்கிருந்த முனிசாமிங்களுக்கு.. சிற்பங்களைச் செதுக்கிகொடுத்துட்டிருந்தார்.

ஒரு நாளு... அந்த சிற்பிகிட்ட வந்த சில பேர்... அதோ பாருங்க.. அந்த மலையில ஒரு சின்னப்பையன்.. இளஞ்சிற்பி என்னா அருமையா செதுக்கி வித்த காமிச்சுகிட்டு இருக்கான். என்னா நேர்த்தி... என்னா அழகு.. என்னா கற்பனை..ன்னு கொளுத்திப் போட்டாங்க....

பெரியவரு, காண்டாயி... அந்தப் பையனத்தேடிப் போனாரு... அந்தச் சின்னவன் சிற்பமே கவனமா தன்னோட வேலைய மூழ்கி இருந்தா... பெரியவரு வந்தது கவனிக்கல...

அவனோ பின்னாடியேப்போனவரு, கையிலிருந்த உளியால அவனோட மண்டையிலேயே ஒரே அடி...

"அப்பா" ன்னு அழறான் மொகத்தப் பார்த்தா காணாமல் போனமவன். அதோட.... அந்த கோபுர வேல நின்னு போனதா ஐதீகம்...அதனால்தான்...இதுக்கு 'வெட்டுவான் கோவில்' ன்னு பேர் வந்ததுன்னு பேசிக்கிறாங்க"

கதையும் பரிமாறியச் சிற்றுண்டி போலவே சுவையாகவே இருந்தது. ஆனாலும் பேருந்து புறப்பட்டு தானே தீரணும், பொதிகைக்கூதல் நோக்கிப் புறப்பட்டது பேருந்து. குற்றாலத்தில் பொதிகை ரிசார்ட்டில் தங்கல்,மதிய உணவும் திருப்தியான உறக்கம் தந்தது.

௳

## 07. ஓடக்காண்பது பூம்புனல் வெள்ளம்

குற்றால அருவிக்குளியல் மட்டும் எப்பவுமே திகட்டுவதேயில்லை அமிர்தனுக்கு...அஃதோர் ஆனந்தம்! அது சொற்களில் கூடுகட்டவியலா சுகம்! ஆனாலும் அருவியிலிருந்து வெளியே வந்தான்!

வெளியே வந்தவன் தனக்குள் சொல்லிக் கொண்டான் :

"ஆச தீர சுகிச்சவனுமில்ல....!

அழுக்கு போவக் குளிச்சவனுமில்ல.....!"

ஆடைகளை வைத்திருந்த மேடைக்கருகே சென்றவன் துவாலையை எடுத்து துவட்டினான். களியூட்டும் அருவிக்குளியல் சளி பிடிக்கவா செய்யும்! சிலதெல்லாம் சடங்கு!சம்பிரதாயம்!

சாரல் காற்று சற்றே குளிர்க்கொடுத்தது.... வானத்தில் முழுநிலவு பிரதான அருவியில் சந்தோஷமாய் நீராடியவர்களைப் பொறாமையுடன் பார்த்துக் கொண்டிருந்தது.!

கறுப்பு பாறையிலிருந்து வெள்ளி நீர்... சடசடவென பேரோசையுடன் கொட்டிக் கொண்டிருந்தது. பார்க்கவே ரம்யம்!

அப்போது தான் கவனித்தான்....அழகியும் குளித்தது போதுமென கூட்டம் விலக்கி வெளிவந்து கொண்டிருந்தாள்!

அமிர்தனுக்குள் இனம்புரியா மகிழ்வின் அருவியோசை! மனசின் சலசல...! காதலின் தட் தட் தட்! இசைக்கு எழுத்துண்டா....!

துண்டை எடுத்து தலைத் துவட்டிய படியே... அவனருகில் வந்தாள்..

"அதுக்குள்ள குளிச்சிட்டீங்களா..."

"ம்ம்! போதும்... னு தோணுச்சு! அதான் வெளிய வந்துட்டன்!"

"ஆமா! சரியாச் சொன்னீங்க! எங்கேயாவது ஓரிடத்தில் நிறுத்தி வெளியில வரத்தான வேணும்! நான் அருவிக் குளியலச் சொன்னன்"

- உரையாடலின் போதே அழகியின் உடல் குளிரில் வெடவெடத்து நடுங்கியது லேசாய்...!

மெல்ல நகர்ந்தவன் ஆடைக்குவியலில் இருந்து தனது சால்வையை எடுத்து வந்து அவள் மேல் போர்த்தினான்.

"மயில் குளிருக்கு இந்த பேகனின் போர்வை"

"ம்ம்... கவியருவியா...! தேங்க்ஸ்...., குளிருக்கு இதமாத்தான் இருக்கு"

"பாதுகாப்பாவும் இருக்கும்! என்னைப் போலவே"

தன்னைத் துளியோண்டு அவளிடம் வெளிப்படுத்தி விட்ட பேரானந்த த்ரில்!

"டீ குடிக்கலாமா... குளிருக்கு இதமா இருக்கும்?"

"மத்தவங்களும் வந்துடட்டுமே..."

"அவுங்க வந்ததும் இன்னொரு டீ குடிக்கலாம்! இப்போ வாங்க..." என்றவன் ஆடைக் குவியலில் இருந்து தனது முக்கால் பேண்ட்டையும் ட்டீ சர்ட்டையும் அணிந்து கொண்டான். பாக்கெட்டில் பர்ஸ் இருப்பதை விரல் தடவி உறுதி செய்து கொண்டவள் அவளிடம் வந்தான்.

"வாங்கப் போகலாம்"

மேரியின் ஆட்க்குட்டியைப் போல் அவனைப் பின் தொடர்ந்தாள் அழகி!"ரெண்டு டீ குடுங்க ஒன்னு ஸ்ட்ராங்கா... உங்களுக்கு எப்படி...?

"எனக்கு மீடியமா... சர்க்கரை ஜாஸ்தி."

"இனிப்புன்னா ரொம்ப பிடிக்குமோ"

"வாழ்க்கை தான் கசப்பாஇருக்குது... டீயாவது இனிப்பா இருக்கட்டுமே..."

"ஆமா... சரியாத்தான் சொன்னீங்க...! மகாநதி படத்துல கமல் பேசுற வசனம் மாதிரி 'நமக்கு மட்டும் ஏன் இதெல்லாம் நடக்குது'

"அதென்ன நமக்கு! உங்களக்கென்ன கொறச்சல்.. எல்லாத்தையும் ஆண்டு அனுபவிச்சவர் தானே..."

"உண்மை தான்... ஆனா பணமோ, பொருட்களோ... ஏன் உடம்போ கூட வாழ்க்கையில்லையே... அதுக்கும் மேல ஏதோ ஒண்ணு தேவைபட்றதே..."

ஏதோ ஒண்ணுன்னா.... புரியறமாதிரி தான் சொல்லுங்க...."

அடியே அழகி உனக்காப் புரியாது... இந்தப் நாடகத்தின் கருப்பொருள்... உரிப்பொருள்...!அவள் கைகளில் தேநீர் கிளாஸைத் தந்தவன் நேருக்கு நேராகப் பார்த்தான் அவளுடைய நேத்ரங்களை.

"அது ஓர் ஆத்மார்த்தமானத் துணையாக் கூட இருக்கலாமில்லையா இந்த தேநீர் மாதிரி இதமா... இதமா.. இந்த சால்வை மாதிரி பாதுகாப்பா..."

"காலம் எனக்கு கத்துக் கொடுத்த பாடம் ரொம்ப கசப்பானது... அதனாலயே யாரையும் நம்புறதுக்கு முடியல... பாத்தீங்கல... நேத்துல இருந்து நான் யார் கிட்டயும் அதிகமா பேசுனனா.... நல்லா மழைப் பெய்யும்னு நம்புறோம்... கூடின மேகம் துளித் தூறல் கூட சிந்தாம கலைஞ்சி போயிடறதெல்லாம் தாள் என் வாழ்க்கையில தொடர்ச்சியா நடந்தது.."

"யாரோ ஏமாத்துனாங்க... சந்தேகப்பட்டாங்க... சண்டபோட்டாங்கன்றதுக்காக.. எல்லோரையும் சந்தேக கண்ணோடப்பாக்கணுமா.. எங்கேயாவது நல்ல மனுசன் ஒருத்தனாவது இருப்பான் தானே... என்ன மாதிரி"

"ஹா... ஹா... நல்ல நகைச்சுவை! உங்களுக்கு நீங்களே சான்றிதழ்க் கொடுத்துக்கிறீங்களாக்கும்...!"

"இதுல சிரிக்க என்ன இருக்கு! எனக்கு தெரியும் நான் நல்ல குணங்களால் ஆனவனென்று! யார் கிட்ட தான் குறையில்ல... என்கிட்டேயும் இருக்கலாம்.. ஆனா அது மத்தவங்களுக்கு உறுத்தலில்லாத குறையாத் தான் இருக்கும்.... என்னை நிருபிக்க இறந்த போன மனைவியும்.

அமெரிக்காவில் இருக்குற ரெண்டு மகள்களும் தான் வரனும்.''

''பிறகென்ன! பெண்டாட்டி பிடுங்கலில்ல... பொண்ணுங்களும் செட்டிலாயாச்சு! போதுமான பென்ஷன் வருமே...ஆன்மீகம், இலக்கியம்னு பயணமாப் போயிக்கிட்டு இருக்க வேண்டியது தானே....''

''அந்த பயணத்துக்குத் தான் ஒங்கத் துணை இருந்தா நல்லாயிருக்கும்... நெனக்கிறேன்! அனுபவத்தோடு வயசுக்கு ஒரு கைத்துணையா... ஒங்களப் போல ஒருத்தரு இருந்தா அந்த மிச்ச வாழ்க்க நிறைவா இருக்குனு நம்புறேன்.''

''கண்டதும் காதலா... Love at Firstsight....?''

''என் மனசுல இருக்குறது காதலான்னு தெரியல... அதுக்கும் மேலே.. ஆனா ஒங்களப் பாத்த உடனே மனசுலத் தோணுச்சி''

''என்னத் தோணுச்சி...?''

''இது நம்ம ஆளுன்னு... இந்த உணர்வு எல்லார்கிட்டயும் தோணாது... யாரோ.... எதுவோ நம்மள ஈர்க்கணும்... உள்ளப் போய் அந்த உணர்வு ஒக்காரணும்''

''நான் ஒங்க மனசுல ஒக்காந்துட்டனா...'' என்றவள் அவன் கண்களை நேராகப் பார்த்தாள்... அவனும் தான்... அதில் பொய் தெரியவில்லை''

'' சந்தேகம்னா... அனுமன் மாதிரி நெஞ்சைப் பிளந்து காண்பிக்கவா...?''

''வேணாம் சாமி... ராமனால நாடு சந்திச்சப் பிரச்னப் போதும்... உங்கப் பேச்சை... இப்போதைக்கு Receive பண்ணிக்குறன்... எனக்கு யோசிக்க கொஞ்சம் அவகாசம் வேணும்.''

''அடேங்கப்பா.. இது போதுமே... உலகக் கோப்பைய ஜெயிச்சிடுவனே...''

''ம்ம்.. பேசியே கவுக்குற ஜாதிதானே... வாங்க போகலாம்.. அவங்கல்லாம் வர்ராங்க...''

தேநீர்க்குண்டான தொகையைக் கொடுத்தவன் மெல்ல சீட்டியடித்தபடி நடந்தான்!

'காதலின் தீபமொன்று ஏற்றினாளே...'' -இளையராஜா சராலில் மிதந்தார்.

என்ன... அதுக்குள்ள குளிச்சிட்டு வந்துட்டீங்களா... ரெண்டு பேரும்..'' - வெற்றிவேல் ஆனந்த் தான் வினவினான்.

''ஆமா.. குளிரா இருந்தது.. போதும்னு வெளிய வந்துட்டன்'' - அமிர்தன்.

அழகி எதுவும் பேசவில்லை... ஆனால மனதுள் நினைத்தாள் ''மவனே... இப்போ குளிர்விட்டுப் போச்சா...''

''எல்லாரும் டீ சாப்பிட்டு போகலாமா... அதுக்குள்ள ஆட்டோவுக்கு போன் பண்றன்''

வந்திருந்த குழுவினர் தேநீர் அருந்திட... ஆட்டோவும் சரியாக வந்து நின்றது.

திரும்பிப் போகையில் அமிர்தன் அருகில் அமர்ந்து கொண்டாள் அழகி... ஆட்டோவின் மேல் இருக்கையில் மூலையில் அவள்... அருகில் அவன்... அவனுக்கு பக்கத்தில் காசிநாதன்... அவருக்கு அருகில் திண்டுக்கல் டாக்டர்.

குற்றலாத்து மலைச் சாலையில் ஆட்டோ ஆடி... தள்ளாடி, தளும்பி சென்றது... அவர்களது உடல்கள் இடித்துக் கொண்டன. அவளது விரல்கள் அவனுடைய விரல்களோடு கோர்த்துப் பிணைந்தன. அது முழு நிலவுக்கு மட்டும் தெரிந்த ரகசியம்! பூ விரியும் ஓசை! புல்லாங்குழல் இசை... அவனது விரல்களை இன்னொரு கரத்தால் இறுகப் பற்றிக் கொண்டான் அமிர்தன்.

ரிசார்ட்க்கு வந்தவர்கள் குளிரின் வெடவெடப்பைத் தாங்காமல் அவசரமவசராய் அறைக்கு ஓடினார்கள்.

''நாமக் கொஞ்சம் பேசிக்கிட்டு இருக்கலாமா... இல்ல ஒங்களுக்கு தூக்கம் வருதா...'' - மெல்லியக் குரலில் வினவினாள் அழகி.

'கண்ணனின் கடைப்பார்வைக் காதலியர் காட்டி விட்டால் மண்ணில் மாந்தருக்கு மாமலையும் ஓர் கடுகாம்' - பாவேந்தர் அனுபவிச்சுதான் எழுதியிருக்காரு.'

'அதெல்லாம் ஒண்ணுமில்ல... வாங்க போகலாம்'

அது பின்னிரவா.. கருக்கலா... முன்காலையா... இரண்டு மணி சொச்சமிருக்கும்... கடிகாரம் பார்க்கும் நேரமா அது... யார்க்கது வாய்க்கும்!

புல்வெளியில் இருந்த சிமெண்ட் இருக்கையில் எதிரெதிராக அமர்ந்தார்கள் இருவரும்.

தூரத்தில் கரும்பச்சையைப் போர்த்தி படுத்திருந்தது பொதிகை மலை. குற்றாலச் சாரல் காற்றின் 'தண்' ணென்ற ஜில்லிப்பு உடலெங்கும் பரவி இனம் புரியாதோர்க் குளிர்ச்சியைப் பூசிக் கொண்டிருந்தது.

''வானரங்கள் கனி கொடுத்து மந்தியோடு கொஞ்சும்-

மந்தி சிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்

வானவர்கள் விழிஎறிந்து வானவரை அழைப்பர்

கமனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பார்

தேனருவித் திரையெழுப்பி வானின்வழி ஒழுகும்

செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்

கூனலிளம் பிறைமுடிந்த வேணி அலங் காரர்

குற்றாலத் திரிகூட மலையெங்கள் மலையே''

''நல்லாத்தான் எழுதியிருக்கார் திரிகூட ராசப்பக் கவிராயர்''-அமிர்தன் தான் தொடங்கினார்

''சாதா வஞ்சிகளைப் பார்த்தாலே ஜொள் சாரி கவியொழுகுமே...அதுவும் இவள் குற்றாலக்குறவஞ்சி...!''

"கவிஞன் கவிஞன்தா... நாம குரங்குன்னு சாதாரணமா நினைக்கிற ஜந்துக்கள் வழியா காதலை, ரொமான்சை என்னமா சொல்லியிருக்கான்... ப்பா!''

"அய்யா... ரொம்பத்தான் ரொமான்டிக் மூட்ல இருக்கீங்க போல... சாமி எனக்கொரு உண்மை தெரிஞ்சாகணும்... இப்போ நம்ம ரெண்டு பேரும் சேந்து வாழறதுக்கானத் தேவை என்னவாம்...?மொதல் கல்யாணமே ஏன்... எதுக்குன்னு தெரியாம ஒரு மின்னலப் போல 'சட்'டுனு வெளிச்சம் காட்டி மறைஞ்சுடுது...கல்யாணம்ன்றது இனவிருத்தி சமாச்சாரம் மட்டுந்தானா... ஆயிரம் பேர் அட்சத போட்டு வாழ்த்தி, மொய் எழுதி, முடியுற சடங்கு Production and Delivery தானா... இதெல்லாம் இல்லாம வாழ முடியாதா...?''

"இந்தக் குளிர்லேயும் கேள்வி சூடா வருதே...''

"பொம்பளங்கன்னா கேள்வியே கேக்கக்கூடாதுல்ல...''

" அம்மா தாயே.... பரதேவத கேளும்மா... எத்தனைச் கேள்வி வேணும்னாலும கேளு, தெரிஞ்சா பதில் சொல்ற தெரியலன்னா.. 'தெரியல' ன்னு சொல்லிடறன்!ஒரு ஆம்பளக்கு ரெண்டாம் கல்யாணம் ஒண்ணு இந்த சமூகம் கேக்காது... சமூகம்ன்றது யாரு ஊரு உறவு தானே...!''

''ஏந்தெரிமா... 'ரெண்டு புள்ளவுள வச்சிகிட்டு பாவம்! என்ன பண்ணுவான் ஆம்பளப் பய! அய்யா...ராசா... இந்த வயசுக்கு தொணையா... ஒருத்தியக் கட்டிக்கப்பா... சமைக்க தொவைக்க ஆவும்.. புள்ளைங்களுக்கும் ஆதரவா இருக்கும்' - ஆனா இந்த சாமர்த்தியமான ஆறுதல்க்குள்ள இலவச இணைப்பா ஆணுக்கு கிடைக்கிறது பெண்ணுடம்பு... நெதமும் அனுபவிக்கலாம்..! ஆனா... பொம்பளைக்கு வீட்டு வேலத்தெரியும் தனியா சமைப்பா.. தொவைப்பா.. வூட்டை சுத்தமா வச்சிக்குவா.. அவனுக்கு புள்ளகுட்டி இருந்தா அப்பா தேவப்படாது. 'அவளுக்கு எதுக்கு ரெண்டாவது கல்யாணம் இந்த வயசுல... இன்னுமா.. வேண்டியிருக்கு'பொம்பளன்னா, ஒ கட்டத்துல பொண்ணுடம்பில இருக்குற சுரப்பிகள் எல்லாமும் மூடிகிட்டு இருக்கணும்'' - மூச்சு வாங்கியது அழகிக்கு.

"அழகி... உங்களோட உரிமையோடு ஒருமைலயே கூப்புடறன்! உன்னோட உணர்வுகளை மதிக்கிறன்... புரிஞ்சுக்குறன்... ஆனா நாம சேந்து வாழணும்னு நான் நெனக்கிறது புள்ள பெத்துக் இல்ல! தயவு செய்து புரிஞ்சுக்க... நானும் வாழ்க்கை ரொம்ப அடிபட்டவன்தான்! "என்னை நம்பி கரங்கோத்தமைக்கு நன்றிஅழகி!''

"நிறைய ஏமாந்துட்டேன்! அமிர்தன் மனிதர்கிட்ட.. சூழ்நிலைகிட்ட.... வேறுபல விஷயங்கள்ல்ல.. ஆனாலும் இந்த பூமில வாழறதுக்கு யாரையாவது நம்பித்தான் ஆக வேண்டியிருக்கு இல்லையா...! இன்னைக்கு, இந்த நிமிஷம் உங்கள நம்புறன்! அவ்ளோதான்!''

"ம்ம்... இந்த நம்பிக்கைக்கு நிச்சயமா என்னையும் என் எதிர்காலத்தையும் ஒப்படைப்பேன்.. அழகி''

சார்... டீ ரெடியா இருக்கு வேணுங்களா...'' - ரிசார்ட்டின் பணியாள் ஒருவரின் வினவல்!

இந்த இளங்குளிருக்கு தேநீர் இதமாய்த்தான் இருக்கும்!

"கொண்டு வாப்பா... ரெண்டு எடுத்துட்டு வா... அப்படியே கொஞ்சம் குடிக்க வெந்நீர்..''

மலை உச்சியிலே புறப்பட்ட தென்றல் நிலவின் குளிர்ச்சியோடு இசைந்து இதமானக் குளிர்மையால் வருடியது.

தேநீர் வந்தது!

"சாவிய ரூம்புக்குள்ளயே வச்சீட்டீங்களா சார்... ரொம்ப நேரமா வெளியிலயே ஒக்காந்து பேசியிட்டு இருக்கியளே...''

'ஆம்' என்பது போல் தளயாட்டினான் அமிர்தன்! ஆச்சயத்தோடு அவனையேப் பார்த்தாள் அழகி.

''ஒண்ணு சொல்லட்டுமா... ரெண்டாவது மாடில 205 காலியாத் தான் இருக்கு... டீயக் குடிச்சுட்டு போய் ஓறங்குங்க..குத்தாலம் காத்துக்கு.தன்னால ஒறக்கம் வரும்.. காலையில் எழுந்து பாக்கலாம்...''

எளியவர்களிடம் கிடைக்கின்றன எளியத் தீர்வுகள்... பதட்டமின்றி உடனடியாய்....!

"ரொம்ப தேங்ஸ்ப்பா.. ஒன்னோட பேரு என்னப்பா...''

"அன்பு சார்... அன்புநேசன்''

" ரெண்டும் நீயேவா !இந்தா டீக்கு காசு... மீதிய நீ வச்சிக்க...'' என்றவன் பாக்கெட்டிலிருந்து நூறு ரூபா தாளை, அவனிடம் கொடுத்தான்... கௌம்புவமா...''

205 அவர்களுக்காக காத்திருந்தது.

அறைக்கதவை சார்த்தி தாளிட்டவள் திரும்பி பார்த்தாள் அதற்குள் அவன் படுக்கையில் சாய்ந்து விட்டிருந்தான்.

இரட்டைப் படுக்கை கொண்ட பெரியக் கட்டிலில் ஒரு ஓரமாக உடலைக் கிடத்தினாள் அழகி. மனசுக்குள் இனம் புரியாத கேள்விகள்.

எது சேர்க்கிறது? எது பிரிக்கிறது? ஏன் இதெல்லாம் நிகழ வேண்டும்? எதற்காக இந்த பயணம்! பாண்டியர் வரலாறு அறியத் தானே.... எதற்காக இவரை சந்தித்தேன்.... கேள்விகள்.. கேள்விகள்...

“போங்கடா... கெடக்கறது கெடக்கட்டும் கெழவியத் தூக்கி மனையில கைய்யி-ன்ற கதையா புரண்டு படுத்தாள்,.

அவன் அவளையேப் பார்த்த படி விழித்துக் கொண்டிருந்தான். ம்ம்...பச்சை மாமலை போல் மேனி! பவளவாய்க் கமலச் செங்கண்...

பிறகென்ன!

“மீன் கொடித் தேரில்

மன்மத ராஜன் ஊர்வலம் போகின்றான்

மதனோ விதியின் பிரிவில்...

ரதியோ மதனின் நினைவில்

உறவின் சுகமே இரவே த் தருமே

காதலர் தேவனின் பூஜையின் நாளினில்”

எப்போது உறங்கினார்கள் என அவர்களுக்கேத் தெரியாது அழைப்பு மணியின் ஓசை கேட்டு அவசரமவசரமாய்ப் பிரிந்து ஆடை பூண்டு. கதவம் திறக்க காத்திருந்தான் அன்பு தேநீரோடு, விடிந்து நன்றாக வெளிச்சம் பரவி இருந்தது.

ெ

## 08.பொருநை

இதமானக் குளிர்த் தென்றல் தாலாட்டும் இளங்கலை “குட் மார்னிங் அழகி... எழுந்து உன் ரூமுக்கு போயி சீக்கிரம் கிளம்பி தயாராரு”

“ம்..ம்.. தேங்க்ஸ்...”

“எதுக்கு தேங்க்ஸ்”

“எல்லாத்துக்கும் தான்” - என்றபடி அவரசமாய் செடினாள் அழகி... அழகிய விழிகளில் குறும்பும் வெட்கமும் ஒளிர்ந்ததை கவனிக்கத் தவறவில்லை அமிர்தன்.

என்ன நடந்தது....? எப்படி நிகழ்ந்தது....? அமிர்தா ரொம்ப யோசிக்காதே..... எது நடந்ததோ அது நன்றாகவே நடந்து.. சரிதானே....! அப்புறம் என்ன கேள்வி வெங்காயம்.

மனசாட்சியை அந்த அறைக்குள்ளேயே வைத்து பூட்டி விட்டு தன் அறைக்கு திரும்பினான் அமிர்தர்.

“எங்க போயிட்டீங்க காம்ரேட்... ராத்திர ரூமுக்கு வரலையா..” - வாஞ்சையுடன் கேட்ட காசிநாதன் கண்களை சந்திக்கும் துணிவில்லை அமிர்தனுக்கு

“மெயின் பால்ஸ் போய் குளிச்சிட்டு வந்தோம்... வந்து பாத்தன்.. கதவு உள்ளேயே சாத்தியிருந்தது... உங்கள தொந்தரவு பண்ண வேணாமின்னு ஆபீஸ் ரூம் சோபாவுல சாஞ்சுட்டன்”

காதலும் காமடும் வந்தால் பொய் கூறல் சர்வசாதாரணமாகிறது என்கிற வரலாற்று உண்மை அவனுக்கு புரிய வந்தது.

“அடடா... சரி காம்ரேட்... சரி... குளிச்சிட்டு கௌம்புங்க... நான் டைனிங் ஹால்ல வெயிட் பண்றன்” - என்றபடியே வெளியே நகர்ந்தார் காசி...

“நடந்தவை யாவும் கணவா... அல்லது நிஜமா... என்னையே என்னால் நம்ப முடியலையே”

நேற்று வரை நீ யாரோ நான் யாரோ

இன்று முதல் நீ வேறோ... நான் வேறோ....

மனசைப் படிச்சவன் கண்ணதாசன்... அவன்தானே இந்த வரிகளையும் எழுதினான்.

“எதுவரைப் போடுமோ

அதுவரைப் போகலாம்

புதுவகை ரசனையைக் காணலாம்.”

-குளிக்க சென்றான் அமிர்தன்.. வெந்நீர் சூடு வைக்க யதார்த்தத் உலகுக்கு வந்தவன் சில நிமிடங்களில் தயாரானான்.

“ப்ரேக் பாஸ்ட்க்கு போகலாம்.....”

அட... அழகியின் குரல் தான்!

“ம்.. ரெடியாயிட்டேன்! போகலாம்”

காசிநாதன் காத்திருந்தார்... அவருக்குமாய்ச் சேர்த்து பொங்கல், இட்லி, வடை என மூன்று தட்டுகளில் அமிர்தனும் அழகியும் எடுத்து வர ஆனந்தின் குரல்.

“அய்யாமார்களே! அம்மாமார்களே... சாலை உணவு முடிந்தவுடன் இந்த ரிசார்ட்டிலிருந்து கௌம்பறோம்...

நேதா... மன்னார்கோவில்... அங்கிருந்து பிரம்மதேசம் அப்புறம் திருப்புடை மருதூர்... லுக்கே வா...''

'லுக்கே.' என்றனர் ஒரே குரலில்.

குற்றாலத்திலிருந்து தென்காசி, கடையம், அம்பாசமுத்திரம் வழியாக மன்னார்கோவில் பயணம் இதமானக்குளிருக்கு அடிமையானவர்கள் அரைக்கண் மூடி ஆழ்ந்த உறக்கத்தில்யெயித்தனர்.

அழகியும் அமிர்தனும் அருகருகே...

''கொஞ்சம் பேசலாமா... கன்னமானக் குரலில் அழகி ''நிறையவேப் பேசலாமே...''

''நேத்து நடந்தது ஒரு அழகிய விபத்துன்னு நெனக்கிறேன்... தாழ்வானப் பகுதிகள்ள மழைத்தண்ணி நெறையறது போல....நம்மள நாமே ரொப்பிக்கிட்டோ... தப்புல்ல.... ஆனா.... இது தொடரக்கூடாதுன்றது தான் என்னோட மனசு சொல்றது...''

''புரியல அழகி... மனசொத்து தானே இணைஞ்சோம்... அதிலென்ன தப்போ தவறோ இருக்க..''

''சரியாப் புரிஞ்சுக்குங்கோங்க அமிர்தன். நாம தொடக்கத்தில இருந்து விரும்புனது... ஒருத்தருக்கொருத்தர் துணையா... உடல் துணையா இல்லாமல் மனத்துணை இருக்கிறது. நம்மளுக்கு உறவு வேணுமா.. பாலுறவு வேணமா...''

''யம்மாடி.. பெரியக் கேள்விதான்... யோசிக்க வைக்கிற கேள்வியும் கூட...''

''ஆமா சார் மன்னார்கோவில் பெரிய கோயில்.... ராஜகோபால் ஸ்வாமிகன்னது பெருமாள் அமர்ந்த கோலம், நின்ற கோலம், கிடந்த கோலத்துல காட்சியளிக்கிற கோவில்....எல்லாரும் எறங்கி வாங்க.....'' - ஆனந்த் குரல் இருவரின் உரையாடலைத் பல்லிவாப்த் துண்டாக்கியது.

''நின்ற கோலம், அமர்ந்த கோலம், கிடந்த கோலம், குளித்த கோலம், களித்த கோலம் ன்னு' பல கோலம் பாத்தாச்சே....'' என்றான் அமிர்தன் கிசுகிசுப்பால்.... அவன் தொடையில் திடமாகக் கிள்ளிவிட்டு 'மூச்' என்பது போல் உதட்டின் மீது விரல் வைத்து காண்பித்து இறங்கினான் அழகி.

''தாமிரபரணிக் கரையில் அம்பாசமுத்திரம் தாலுகாவில் ராஜகோபால் ஸ்வாமி குடிகொண்ட இந்த மன்னார்கோவில் திருத்தலம்!

இந்த தலத்தோட சிறப்பு என்னன்னா.. ஆலயத்தின் மூலஸ்தானம் அஷ்டாங்க விமானமாக அமைச்சிருக்காங்க பாண்டிய ராஜாக்கள்.

அதாவது மூன்று நிலைகளைக் கொண்டதாக அமைஞ்சிருக்கிற இந்த மூலஸ்தானத்தில மூன்று வித்யாசமானக் கோலங்கள்ல பெருமாள் காட்சி தர்ரார்... கீழே... நின்ற கோலத்திலும், அதற்கடுத்த தளத்துல அமர்ந்த கோலத்திலும், மூன்றாவது நிலையில் பள்ளிக்கொண்ட கிடந்த கோலத்திலும் காட்சி தர்ரார், - பார்வதி மேடம் பெருமாள் புராணம் ஒத, அமிர்தன் ரகசியமாய் அழகியைப் பார்த்து குறும்பாக சிரித்தான்... ''கொன்னுடுவேன் மகனே'' என்பது போல ஒற்ற விரல் காட்டி எச்சரித்தாள் அழகி... அவள் முகத்தில் கரும்பும் எரிச்சலும்.

''நாம அடுத்துப் போகப் போறது பிரம்மதேசம்'' ஏறிய சில நிமிடங்களிலேயே இறங்க உத்தரவு பிரம்மதேசம்... தூரத்து கோபுரமும் பசியப்பெரியத்திருக்குளமும், திரைப்படங்களில் காண்பிக்கப்படும் கிராமத்தை நினைவூட்டியது.

'' பிரம்மதேசம் - பாண்டி மன்னர்களால் அந்தணர்களுக்கு தானமாக கொடுக்கப்பட்ட கிராமம்'' வேதாசலம் சார் தொடங்கினார்.

''கைலாச நாதரும் பிரஹனநாயகியும் தல மூர்த்திகள். தாமிரபரணி நீரோட்டம்... மிகச் செழிப்பான கிராமம்... மிக பழைமையான ஆலயம்.

இந்தக் கோயிலோ சிறப்பு யாளி மண்டபம்... போய்ப் பாத்தீங்கன்னா... ஆச்சர்யப்படுவிங்க.. ஒரே மண்டபத்துல விதவிதமாயாளிகளைச் செதுக்கித் தூண்கள்.

பிரதானக் கதவு.. கல்லாலானது... எவ்வளவு உயரமான கதவு.... அதற்குள் எத்தனையெத்தனைக் குறுஞ்சிற்பங்கள்... சோழர்கள் தொடங்கி, பாண்டியர், சேரர், நாயக்கர் மற்றும் பெய்சாளர்கள் வரைக்கும் இந்தக் கோயில் சிற்பங்களோம அழுகுக்கும் பெருமைக்கும் காரணமானங்க...''

யாளி மண்டபத்தில் போட்டோ வேட்டை! தூணுக்குத் தூண் நின்று புகைப்படம் எடுத்துக் கொண்டார்கள் பயணர்கள்.

அமிர்தன், அழகியை ஒரு யாளிச் சிற்பத்தில் அருகில் நிற்கச் சொல்லி படமெடுத்தான் ''ஆஹா ஒரு சிற்பமே இன்னொரு சிற்பம் அருகில் நிற்கிறதே! அடடே! ஆச்சர்யக்குறி'' - அழகி, அமிர்தனை அழகா வருவது போய் ரக லிஸ்டி அமிர்தன் ஓடினான். யாளிகள் பார்த்து நனைத்தன. அமிர்தனை நிற்கச் சொல்லி அழகியும் படமெடுத்தாள்.

பிரம்மதேசத்தில் - இருந்தாலும் காதல் தேசத்தில் மிதந்தார்கள் அழகியும் அமிர்தனும்

ஆனால் ஆனந்த் எனும் வில்லன். அடுத்த ஊருக்கு போக அவசரப்படுத்த... மதிய உணவுக்கு திருப்புடைமதூரை அடைந்தது பேருந்து.

சைவ உணவு தயாராக இருந்தது.

பாண்டியப் பயணிகள்... பசியின் உச்சத்தில்.... போரென்றால் என்னும் பயந்தோடும்

கூட்டம் சோறென்றால் கூடிடும் உலக நியதிக்கொப்ப... 'வாய்'மையே வென்றது!

மாலை நான்கு மணிக்கு தான் கோயில் திறப்பு.... கிடைத்த இடத்தில் உடல்

சாய்த்தனர். உண்ட மயக்கம் தொண்டனுக்கும் உண்டல்லோ!

கோபுரத்துக்கு வெளியே ஒரு கொட்டகை போல ஓரிடம். அதில் ஒரு பழைய மாட்டு

வண்டி...! பக்கத்தில் ஒரு பழைய, உபயோகமில்லா உரல், அமிர்தன், உரல் மீது அழகியோ

மாட்டு வண்டியின் கட்டையில் அமிர்ந்தாள்.

"சொல்லு.... அழகி... ஏதோ பேசணும்ன்னியே..."

"இல்ல... ஒரே நாள்ல கேளிக்கும் கிண்டலுக்கும் ஐந்து நின்னுடுதுல்ல... நம்ம உறவு...

அதான் சங்கடமாயிருக்கு"

"ஹேய்...! அதெல்லாம் ரொமான்டிக்... கமெண்ட்ஸ்... அது உனக்கு வேதனையத்

தந்ததுன்னா... நான் மன்னிப்பு கேட்டுகுறன்."

"நான் ஒன்னு சொல்லுணும்னு நினைக்கிறேன். அமிர்தன் நாம இப்போ சேர்ந்து

வாழறதெல்லாம் வேணாம்... உடனடியா வேணாம்... நீங்க கேட்டுகிட்ட மாதிரி

மனத்துணையா கொஞ்சநாள் வாழ்வோம். இதுவும் லிவிங் டு கெதர் தான் ஆனா போதுமான

இடைவெளியோட...."

"என்ன இப்படி ஒரு குண்ட தூக்கிப் போடுற... நீ....!"

"எனக்கென்னவோ இது தான் சரின்னு தோணுது... உங்க எடத்துல நீங்க இருங்க..

என்னிடத்தில் நானிருக்கேன்.. தேவை ஏற்படும் போது நம நிச்சயம் சந்திக்கலாம்."

"தேவை... ன்னா...."

"அது எப்போன்னு மனசும் ஒடம்பும் சொல்லும்..., நிச்சயமா நாகை உங்களுக்கொரு

நல்லத் தோழமையா இருப்பன்...."

"இதுதான் உன் முடிவுன்னா.... வேற வழியில்லாம ஏத்துக்கிறேன்... ஆனா தெனமம்

கொஞ்சமாவது என்கிட்டே நீ பேசணும்.."

"நிச்சயமா... பேசிப் பேசி தான் பழசை கழுவி விட்டு, புதுசாக் கோலம் போடணும்..."

ஆலயக் கதவு திறந்த தகவல் பரிமாறப்பட்டு இருவரும் கோயிலினுள் நுழைந்தினர்.

நாறும்பூ நாதரும் கோமதியம்மனும் பாண்டிய முத்துகளை சந்திக்க ஆவலோடு காத்திருந்தனர்.

தரிசனம் முடிந்து வேதாசலம் சார் இருக்குமிடத்துக்கு வந்து சேர்ந்தனர்.

"திருப்புடைமருதூர் தல புராணம் சுவாரஸ்யமானது... பாண்டிய மன்னர் வீர

மார்த்தாண்ட வர்மன் வேட்டைக்கு போயிருந்த போது அவர் எய்த அம்பு பட்டு ஒரு மான் மருத

மரத்துக்குள்ள போய் மறைஞ்சுடுது... மன்னர் எட்டிப்பார்க்க மான் லிங்கமாய் மாறி

நாறும்பூநாதசுவமியா மன்னருக்கு காட்சியளித்தது."

"சார்... இலக்கியத்துல தான் மாய எதார்த்தம்னு நெனச்சா புராணக் கதைகள்லேயும்

நெறைய இருக்கே...."

"இதுக்கே இப்படி சொன்னா... திருப்புடை மருதூர்க்கு இன்னொரு கதையிருக்கே...

அதை கேட்டா என்ன சொல்லுவீங்க..."

"சொல்லுங்க... அதையும் கேக்குறோம்..."

"கருவூர் சித்தர் சிவனைத் தரிசிக்க இங்க வந்திருந்த போது தாமிரபரணியில

பெருவெள்ளம்... கரை தட்டி ஓடிச்சாம்.. ஆத்தைக் கடந்து மறுகரைக்கு வர முடியாத கருவூர்

சித்தர் சிவனை நெனச்சு... அக்கரையிலிருந்தே ஒரு பாடல் பாடுகிறார். அந்தப் பாடலை ரசிக்க

விரும்பிய சிவன் தனது இடது காதில் கைவைத்து ஒரு பக்கம் சாய்வாகத் திரும்பியதா ஒரு

ஐதீகம்... ஆனா... இதெல்லாத்தையும் விட முக்கியமானது திருப்புடைமருதூர் ஓவியங்கள்...

நாம நிக்கிற இடத்துல இருந்து கோபுரத்தோட மூன்று நிலைகள்ல... திருவிளையாடல்

புராணத்துல இருந்து ஓவியங்கள் வரையப்பட்டு இருக்கு இன்னைக்கு அந்த வண்ணங்கள்

மாறாம இருக்குறது. வெகு சிறப்பு.. அதே போல... கதைக் காட்சிக்கு ஏற்ப ஒவ்வொரு

காட்சியும் தனித் தனி ஓவியமா வரிசையா தீட்டப்பட்டிருக்கும்.. மேலப் போய் பாத்தீங்கன்னா

பிரமிப்பு போவீங்க... பாத்து ரசிச்சுட்டு வாங்க... சொல்ல இன்னமும் இருக்கு"

கோபுரத்தின் உட்புற பழ வழியாக ஓவியரங்களைக் காண்பதற்காக ஆனந்த், முன்னமே

அனுமதி வாங்கியிரந்ததால் கோயில் நிர்வாகி பூட்டினத் திறந்து விட, கைபேசி

வெளிச்சத்துணையோடு ஓவிய தரிசனம் காணச் சென்றனர். பாண்டியப் பயணிகள், படிகளின்

வழியே ஒருவர் தான் செல்ல முடியும். ஒருவர் முன் சென்று, கைபேசி விளக்கை படிகளில்

காண்பிக்க ஒருவர் பின் ஒருவராய்த் தொடர்ந்தனர்.

வேதாசலம் அவர் சொன்னது அத்தனையும் உண்மை... ஓவியங்களின் காலம்

எதுவோ... இன்று வரை வண்ணம் மாறாமல் இருப்பதே ஆச்சரியம் தான்... அதுவும்

கோபுரத்தில் அந்த குறுகலான இடத்தில் எப்படி அந்த ஓவியர்கள் நிதானமாய் இந்த கதை

சொல்லும் ஓவியங்களை நிதானமாய் இந்த கதை சொல்லும் ஓவியங்களை

வரைந்திருப்பார்கள். மூன்று நிலைகளிலும், நான்கு புற சுவர்களிலும் ஏராளமான ஓவியங்கள்.

இலவச இணைப்பாக கண்கவரும் மரச்சிற்பங்கள்! காலம் தாண்டி நிற்பது தானே கலைகளுக்கு

கலைஞனுக்குப் பெருமை!

"பாத்து கவனமாக படியிறங்குங்க..." - ஆனந்தீன் கவன ஈர்ப்பு குரல்.

இரண்டாம் நிலைக்கு இறங்கும் போது தான், அந்த குலறயொனியில் கிடைத்தது

அமிர்தனுக்கு, அழகியிடமிருந்து ஓர் எதிர்பாரத முத்தம்!

'அட' இதுதான் பாண்டியன் பரிசா..."

"எல்லாரும் வந்தாச்சா... ரெண்டாம் தளத்துல தீட்டப்பட்டிருக்கிற சுவரோவியங்கள்

1532 ல் நடந்த தாமிரபரணிப் பேரவைக் குறிப்பிடுவதாம். ஆய்வில் மொழிக் கணவாய்க்கும்

அருகே திருவிதாங்கூர் அரசர் பூதல வீர உதய மார்த்தண்ட வர்மாவுக்கும், விஜயநக அரசர்

அச்சத் தேவராயர்க்கும் நடந்ததாம்.

இந்த ஓவியங்களோட பாணி, 'வேணாட்டு பானி' ன்னு அழைக்கப்படேறது. அதாவது

விஜயநக, நாயக்கர் கால ஓவியபாணிகளோட கலப்புன்னு சொல்லாம். இராமாயணம், பெரிய

புராணம், திருவிளையாடல் புராணத்துல இருந்து தேர்ந்தெடுத்த கதைகள் / காட்சிகள்

ஓவியங்கள் தீட்டப்பட்டு இருக்கு"

"தேங்க்ஸ் சார்...இதெல்லாம் எங்களுக்கு புதிய தகவல்...." நவிலும் குரலொன்று.

பார்வதி மேடத்தின் இடைக்குரல்

தாமிரபரணிய குளிர்க்கிறவங்க குளிக்கலாம். ஆனா சீக்கிரம் வந்துடுங்க... டீம்ல சில

பேரு திருநெல்வேலில ட்ரெயின் ஏறணும்!

ஆனந்தும் அமிர்தனும் நல்ல படித்துறையாம தேடினார்கள். அதற்குள் காசி

பொருணையில் இறங்கி நீந்த ஆரம்பித்துவிட்டார். பெங்களூர் செல்வியும் இன்னும் இருவரும்

மெல்ல இறங்கி, நதியுள் மூழ்கி எழுந்தனர்.

ஆற்றுள் இருந்து அமிர்தன் கண்ணாலேயே அழைத்தான்... 'வா' என்பது போல...

'மாட்டேன்' என்பது போல தலையாட்டிய அழகி தயக்கம் தவிர்த்து.. தாமிரபரணிக்குள்

இறங்கினாள்.

'இங்கு ரெண்டு சாதி மல்லிகை

தொட்டுக்கொள்ளும் காமன்பண்டிகை' என்றெல்லாம் யாரும் பாடவில்லை.

நீராடித் திளைத்தவர்கள் பேருந்துள் சென்று ஆடை மாற்றி கிளம்பிட, 'ரெட் ரைட்' -

என்றது ஆனந்தின் குரல்.

நெல்லை ஜங்ஷனில் நான்கு பேரை இறக்கி விட்டு மதுரை நோக்கி பயணத்த பேருந்து,

மதுரை ஜங்ஷன்அருகே உள்ள மீனாட்சி விடுதிக்குள் நின்றது.

அறைகள் ஒதுக்கப்பட்டு அவரவர் முடங்கிட, ஏதோ ஓர் அதிர்ஷ்டம்! அமிர்தனுக்கும்

அழகிக்கும் தனியறை ஒதுக்கி மீண்டுமொரு 'வை, கை' வாய்ப்பு!

௨

### 09.கூடல்நகர்

வடக்கு கோபுர வாசல் வழியாக மீனாட்சியம்மன் ஆலயம்...

ஆலயத்துள் இருந்த அருங்காட்சியாக சிற்பங்கள் குறித்து, மிகு சுவாரஸ்யமாய் விவரித்தார் வேதாசலம் சார். "சரி தெகட்ட தெகட்ட சிற்பங்களும் ஓவியங்களம் பாத்திருப்பீங்க... சீக்கிரம் போய்

சாமி தரிசனம் முடிச்சுட்டு வாங்க"

பிரகாரம் சுற்றும் போதே பாரு மேடம் மதுரையம் பதியின் புகழ் பாடத் தொடங்கினார்:

"பாண்டியன் நெடுஞ்செழியன் ஆட்சில தான்... மதுரை மாநகர் சீரும் சிறப்புமா இருந்தது. மதுரை நகரைச் சுற்றிலும் சூழ்ந்த அகழிகளும், அதையடுத்து உயரமான மதில் சுவர்களும் இருந்தன. மதில்சுவரின் உச்சியில... பாண்டியராஜாக்கள் பெற்ற வெற்றிக் கொடிகள் வானளாவ பறக்க விடப் பட்டிருக்கும்.

அந்த காலத்து மதுரை, மாநகர் பல்வேறு தொழில்களுக்கும் புகழ்பெற்ற நகரமாய் இருந்தது....

மணிகுயிலுநர், இழைப்புனைஞர், கலிங்கம், பகர்நர், செம்புநிறை கொண்மார், பொன்செய்க்கொல்லர், மரங்கொல்தச்சர், கண்ணுள்வினைஞர், கைவினைவல்லுநர் ன்னு பல்வேறு தொழில் வகைகள் இருந்ததுன்னா... நம்ப முடியறதா...."

"பார்வதி மேடம்... அந்த தொழிலையெல்லாம் இங்கிலீஷ்ல... டிரான்ஸ்லேட் பண்ணி சொல்லுவீங்கள...."

"பாருங்க நல்லத் தமிழ்ப் பெயர்கள்ளயிருந்தும் கூட நாம விலகி வெகு தூரம் வந்துட்டோம்... பாக்குறேன்... கூடிய மட்டும் சொல்ல முயற்சிக்கிறேன்."

"புலவர் மாங்குடிமருதன்-, 'மதுரைக் காஞ்சி' நூலில... மதுரைகுறித்த நிறைய விவரங்கள் கிடைக்குது. ஒரு காட்சி பாருங்களேன்.

விடியல் காலையில் அந்தணர் வேதம் ஓத

யாபேதார் மருதம் பாடுவர்;

பாகர் வாதுவர் புல்லுணாத் தவிப்பர் ;

பண்ணியக் கடைக்காரர் கடையை மெழுகுவர் ;

கள் விலையாட்டியவர் பதநீர் விற்பர்;

துதர் வாழ்த்த பாகதவர் அவல, வேதாளிகள் நாழிகை இசைக்கின்றனர்.

இந்த வரிகள் நான் கொடுத்த புஸ்தகத்துல இருக்கு... அத வாசிச்சுண்டே விஷுவலா இமேஜ்கிரியேட் செய்து பாருங்க... அவ்ளோ அருமையா இருக்கும்"

திருவிளையாடல் பல செய்த சொக்கன் அமிர்தனைப் பார்த்து குறுநகைப்புரிந்தான்.

கூன்பாண்டியனின் குறை தீர்த்த நீறு, வரகுணப் பாண்டியனின் வயிற்று நோய் நீக்கியநீறு! திருநீரில் மருந்திருக்கு தெரியுமா...! பூசிக் கொண்டான்.

மீனாட்சி தான் கொஞ்சம் பிகு... கூட்டம் அலைமோத அபிஷேக நேரத்தில்


அம்பாளைத் தரிசிக்க அனுமதியில்லை. மணியோசை ஒலிக்க வரிசை நகர்ந்து... மாணிக்க மூக்கூத்தி ஒளிர்ந்தது.


அர்ச்சனைப் பொருட்களை கையளித்தாள்... அம்பாள் பெயருக்கு... அர்ச்சனை செஞ்சிருங்கோ.. கற்பூர ஜோதியில் கிளியாம்பாள் ஒளியாம்பாளாய் ஜொலிக்க... அழகிக்கு ஆயிரம் வேண்டுதல்கள்... அர்ச்சனைப் பொருட்களோடு கொடுத்த குங்கமத்தை வாங்கியவள் அருகில் இருந்த அமிர்தனிடம் நீட்டினாள்.

அழகியின் நெற்றியில் குங்கும சங்கமம்!

தோள்கிளி சிரித்தது! அங்கயற்கண்ணிமீனாட்சி அழகியைப் பார்த்து புன்முறுவல் பூத்தாள்.

◎


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
ஆவணி - 2022


கார்த்திகை - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
கவிதைச் சிறப்பிதழ்



மாசி - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
புரட்டாசி : 2024

# முந்தைய இதழ்கள்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
பங்குனி - 2024
மொழிபெயர்ப்புச் சிறப்பிதழ்


காற்றுவெளி
ஆடி - 2024
கலை இலக்கிய இதழ்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
மார்கழி - 2023
சொக்கன் சிறப்பிதழ்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
தை - 2023